# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

முதலாம் பதிப்பு

விலை: 30

பக்கங்கள்: 32

சுடர் 33 கதிர் 255 ஆடி 23ஆம் நாள் புதன்கிழமை 08 ஒகஸ்ட் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


# முதுபெரும் தமிழ்த் தலைவர் மு.கருணாநிதி நேற்று மறைவு

சென்னை, ஒக. 8

முதுபெரும் தமிழ் தலைவரும், அறிஞரும், இலக்கிய வாதியுமான மு.கருணாநிதி தனது 95ஆவது வயதில் நேற்றுக் காலமானார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரான அவர் 50 ஆண்டுகளுக்கு மேலான அரசியல் வரலாற்றை தமிழகத்தில் ஏற்படுத்தியிருந்தார்.

வயது முதிர்ச்சி காரணமாக அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்தார். கருணாநிதி கடந்த வருடம் முதல் காவேரி மருத்துவமனையின் கண்காணிப்பிலேயே வைக்கப்பட்டிருந்தார். சுமார் 13 மாதங்களாக செயற்கை சுவாசக் குழாயின் மூலம் சுவாசித்து வந்தார். கடந்த 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை கருணாநிதிக்குப் பொருத்தப்பட்டிருந்த செயற்றைக் >> 29



## தொண்டர்கள் கண்ணீர்

சென்னை, ஒக. 8

கருணாநிதியின் மறைவை அடுத்து தி.மு. கழகத்தின் தொண்டர்கள் கதறியழுதனர். காவேரி மருத்துவமனை, தி.மு. கழ >> 29

## அஞ்சலியும் அடக்கமும்

சென்னை, ஒக. 8

கருணாநிதியின் உடல் இன்று அதிகாலை 4 மணிக்கு சென்னை ராஜாதி ஹோலில் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. >> 29

## உமிக் குவியல் மீது பாய்ந்த சிறுவனுக்கு தீக் காயம்

வவுனியா, ஒக.8

நெருப்பில் தவறி வீழ்ந்து சிறுவன் காயமடைந்தான். இந்தச் சம்பவம் நேற்று வவுனியா, மகாறம்பைக்குளத்தில் நடந்துள்ளது.

கிசோர் (வயது-14) என்ற சிறுவனே காயமடைந்து வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். >> 29

## 7 நாள்கள் துக்கம் ஒரு நாள் விடுமுறை

சென்னை, ஒக. 8

தி.மு. கழகத்தின் தலைவர் கருணாநிதி மறைந்ததை அடுத்து 7 நாள்கள் துக்கம் கடைப்பிடிக்கப்படும் என்று அறிவித்தார் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச் >> 06



## போரின்பின் இலங்கையின் முன்னேற்றம் மந்த கதியில்

சுவிஸ் பிரதிநிதியிடம் எடுத்துரைத்தார் சம்பந்தன் >> 06

## கருணாநிதி மறைவுக்கு தலைவர்கள் இரங்கல்

சென்னை, ஒக. 8

தமிழகத்தின் முன்னாள் முதல்வர், தி.மு. கழகத்தின் தலைவர், முதுபெரும் தமிழத் தலைவர் என்று பல முகங்களைக் கொண்டிருந்த மு.கருணாநிதியின் மறைவுக்கு இந்தியத் தலைமை அமைச்சர் மோடி, இந்தியக் குடியரசுத் தலைவர், அரசியல் தலைவர்கள், கலைஞர்கள் என்று பலரும் தமது இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர். >> 29

## கருணாநிதி எங்கு அடக்கமாவார்?

சென்னை, ஒக. 8

கருணாநிதியின் உடல் எங்கு அடக்கமாகும் என்பது தொடர்பில் நேற்று இரவு சிலபல சிக்கல்கள் இருந்தன. கருணாநிதியின் உடல் சென்னை - மெரீனா கடற்கரையில் உள்ள அண்ணா சதுக்கத்துக்கு அருகில்தான் அடக்கம் செய்யப்படவேண்டும் என்று தி.மு. கழகம் நேற்று இரவு 7 மணியளவில் உத்தியோகபூர்வமாகக் கோரிக்கை வைத்தது. இந்தக் கோரிக்கை >> 27

## நீதிமன்ற வளாகத்திலிருந்து 4 கைதிகள் தப்பியோட்டம்

முல்லைத்தீவு, ஒக.8

முல்லைத்தீவு நீதிமன்றுக்குக் கொண்டுவரப்பட்ட 4 கைதிகள் தப்பியோடியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.

முல்லைத்தீவு, செல்வபுரத்தில் கடந்த மே மாதம் இளைஞன் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டவர் நீதிமன்ற உத்தரவின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவருடன் முல்லைத்தீவு, கள்ளப்பாடு ஆகிய இடங்களில் நடந்த கொள்ளைச் சம்பவங்க >> 06

## மக்கள் பலமிருக்கிறது என்றால் ஆட்சியமையுங்கள் பார்ப்போம்

பொது எதிரணியினருக்கு அநுரகுமார சாட்டை

கொழும்பு, ஒக.8

மக்களின் பலம் உள்ளதை நிரூபித்துள்ளோம் என்று கூறும் 70 பேர் அணி, பலத்தைக் காட்டி ஆட்சியைக் கைப்பற்றுவதை விட்டுவிட்டு, எதிர்க்கட்சிப் பதவிக்கு ஏன் போராடுகின்றார்கள்? >> 29

## காற்றின் வேகம் அதிகரிக்கும் அவதானம்

யாழ்ப்பாணம், ஒக. 8

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சில தினங்களுக்கு மணிக்கு 50கிலோ மீற்றர் வரையான வேகத்தில் காற்று வீசும் என்று இலங்கை வளிமண்டல >> 29



## 1,760 தோட்டாக்கள் வவுனியாவில் மீட்பு

வவுனியா, ஒக.8

வவுனியா, மூனாமடுவில் தனியார் காணியொன்றில் இருந்து ஆயிரத்து 760 துப்பாக்கி ரவைகள் மீட் >> 29

## நீரியல்வளத் திணைக்கள அலுவலர்களை மாற்றுக

வடக்கு முதலமைச்சரிடம் முல்லை. மீனவர்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஒக.8

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உத்தியோகத்தர்கள் பக்கச்சார்பாக நடக்கின்றனர். அவர்களை இடமாற்றம் செய்ய வேண்டும் என்று வடக்கு முதலமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. >> 06

## கடற்படை முகாமுக்காக நிலம் வழங்குவதில்லை

மன்னார் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

மன்னார், ஒக.8

மன்னாரில் புதிதாக அமைக்கப்படவுள்ள 4 கடற்படை முகாம்களுக்காகக் கோரப்பட்டுள்ள >> 29

## மடு மாதாவின் கொடியேற்றம்

மன்னார், ஒக. 8

வரலாற்றுச் சிறப்புமிக்க மடுமாதா ஆலயத்தின் வருடாந்த >> 25

## அரசிலிருந்து விலகினாலே எதிர்க் கட்சியாக முடியும்

சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக.8

கூட்டரசில் ஆளும் தரப்பாக பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிக்கு எதிர்க் >> 25

## றெஜினா கொலை வழக்கில் நேற்றுச் சாட்சியங்கள் பதிவு

யாழ்ப்பாணம், ஒக.8

சுழிபுரம், காட்டுப்புலத்தில் படுகொலை செய்யப்பட்ட சிறுமி றெஜினாவின் வழக்கு >> 06

## விஜயகலா எம்.பியின் உரை

## அறிக்கை வந்த பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கை

சபாநாயகர் விளக்கம் >> 27

## கிளிநொச்சியில் மாணவன் சாவு



>> 25

## சமுர்த்திப் பணியாளர்கள் நாளை சுகவீன கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக.8

சமுர்த்தித் திணைக்கள அலுவலர்கள் நாளை நாடு முழுவதும் சுகவீன விடுமுறைக் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளனர். >> 06

## வடக்கு, கிழக்கில் போரால் பாதிக்கப்பட்டோருக்கு

## நட்டஈட்டு சட்டத் திருத்தத்துக்கு பொது வாக்கெடுப்பு அவசியம்

உயர்நீதிமன்று தீர்ப்பளித்துள்ளது என நாடாளுமன்றில் அறிவிப்பு >> 06

## பொது எதிரணிக் கூட்டு கட்சியல்ல ஆவா குழுபல்

எதிர்க் கட்சிப் பதவியால் நாடாளுமன்றில் சர்ச்சை

கொழும்பு, ஒக.8

எதிர்க்கட்சித் தலைமைப் பதவியால் நேற்று நாடாளுமன்றில் கடும் சர்ச்சை ஏற்பட்டது. கூடிய ஆசனங்களைக் கொண்ட குழு என்ற அடிப்ப >> 29

# கூட்டமைப்புக்குப் புத்தி கூறுவதுபற்றி அமைச்சர் மனோ சிந்திக்கவேண்டும்

## தமிழ் அரசின் பொதுச் செயலர் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 8

வடக்கு – கிழக்குக்கு வந்து எமது அரசியல் நிலமையைக் குழப்புவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் புத்திகூற நினைப்பது தொடர்பில் அமைச்சர் மனோ கணேசன் சிந்தித்துச் செயற்பட வேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலர் கி.துரைராசசிங்கம் தெரிவித்தார். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று (செங்கலடி) கிளையைச் சீரமைப்பது தொடர்பான கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது. அதில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.



வடக்கு- கிழக்குத் தவிர்ந்த தமிழ் மக்கள் வாழ்கின்ற எல்லா இடங்களிலும் தேர்தல்களில் போட்டியிட வேண்டுமா என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானம் எடுக்க முடியும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் மனோ கணேசனுக்கு ஏற்பட்ட பல சவால்களைச் சுமந்திரன் நேரடியாகப் பேசித் தணித்து வைத்தார். இதையெல்லாம் அமைச்சர் மனோ கணேசன் மறந்துவிட்டார். நாங்கள் இவற்றை வெளியில் கூற விரும்பவில்லை என்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் புதிய அரசமைப்பு உருவாகுவது உறுதி. அதிலே நாங்கள் எதிர்பார்த்த விடயங்கள் எந்தவுக்கு வரும் என்று கூறமுடியாது. அவ்வாறு வருகின்றபோது அதனையே சிலர் பரப்புரை செய்வார்கள். கூடுதலான அதிகாரப் பகிர்வுகளுடன் அரசமைப்பு வரைபு வருகின்றபோது அதை ஏற்றுக்கொள்வதற்கும் மக்களிடம் எடுத்துச் செல்லவும் நாங்கள் தயாராக இருக்க வேண்டும்.

அரசமைப்பு வரைவை நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றித்தர வேண்டியது அரசலைவர், தலைமை அமைச்சர் ஆகியோரின் கடமை. இந்த நாடு பொருளாதார சுபீட்சம் பெறவேண்டுமானால் புதிய அரசமைப்பு உருவாக வேண்டும் - என்றார். ஏறாவூர்ப்பற்று கிளைத் தலைவர் சி.சர்வானந்தன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கட்சியின் மூத்த பிரதித் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பொன்.செல்வராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபை உபதவிசாளர் கா.இராமச்சந்திரன் மற்றும் பிரதேச கிளை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (4)

# கட்டுத்துவக்கு வெடித்ததில் குடும்பத் தலைவர் படுகாயம்

வவுனியா, ஓக. 8

கட்டுத்துவக்கு வெடித்ததில் குடும்த்தலைவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையின் அதி தீவிரசிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா செட்டிக்குளம் பொலிஸ்ப் பிரிவுக்கு உட்பட்ட நேரியகுளம் பகுதியில் நேற்றிரவு சம்பவம் நடைபெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த குணசந்துருகரன் என்பவரே காயமடைந்தார். அவர் ஒரு பிள்ளையின் தந்தை.

பிற்பகல் 7 மணியளவில் நேரியகுளம் பகுதியில் ஆடுகளைத் துரத்தச் சென்றபோது கட்டுத்துவக்கு வெடித்துள்ளது.

காட்டுவிலங்குகளுக்காக வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடித்ததில் படுகாயமடைந்தார். செட்டிக்குளம் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அவர் கவலைக்கிடமான நிலையில் உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. விசாரணை இடம்பெறுகிறது என்று செட்டிக்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (4,110)

# வேப்பமரம் வெட்டியவர் கைதாகி விசாரணை

கிளிநொச்சி, ஓக. 8



அனுமதிப்பத்திரம் இன்றி வேப்பமரம் வெட்டினார் என்ற குற்றச் சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகத் தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் 8ஆம் யுனிற் பகுதியில் வேப்பமரம் வெட்டினார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. அவர் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (4,6)

# கஞ்சாவுடன் கைதானோருக்கு யாழ். மேல்நீதிமன்று பிணை

யாழ்ப்பாணம், ஓக. 8

பெருந்தொகைக் கஞ்சாப் பொதிகளுடன் கைது செய்யப்பட்ட குற்றச்சாட்டில் இருந்தவருக்கு யாழ்ப்பாண மேல்நீதிமன்று பிணை வழங்கியது.

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் கடந்த வருடம் பெப்ரவரி மாதம், இந்தியாலிருந்து இலங்கைக்குக் கடத்தப்பட்ட 113 கிலோ கஞ்சா போதைப் பொருள் பொதிகள் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்தன. அந்தப் பொதிகளை அங்கிருந்து எடுத்துச் செல்வதற்காக என்று அங்கு சென்றிருந்தனர் என்று கூறப்படும் இருவர் பொலிஸாரைக் கண்டதும் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர். எனினும் அவர்களைப் பொலிஸார் அடையாளம் கண்டுகொண்டனர் என்றும் அதனடிப்படையில் அதே இடத்தைச் சேர்ந்த 25 மற்றும் 32 வயதுகளையுடைய இருவரையும் அவர்களது வீட்டில் வைத்துப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

பருத்தித்துறை நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்ட அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டிருந்தது. அன்று தொடக்கம் 17 மாதங்களாக அவர்கள் விளக்கமறியலில் உள்ளனர்.

இருவரையும் பிணையில் விடுவிக்குமாறு யாழ்ப்பாண மேல்நீதிமன்றில் சந்தேகநபர்கள் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி வி.கௌதமன் பிணை விண்ணப்பம் செய்தார்.

அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந் அதற்கு எழுத்து மூல ஆட்சேபனை தெரிவித்திருந்தார்.

அவற்றைப் பரிசீலித்த நீதிபதி அ.பிரேமசங்கர் இருவருக்கும் நேற்றுமுன்தினம் பிணை வழங்கினார்.

அதன்படி 50 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள்பிணைகளிலும் விடுவிக்கப்பட்டனர். (4)

# சிறுவர் துர்நடத்தை, போசாக்கு தென்மராட்சியில் விழிப்புணர்வு

சாவகச்சேரி, ஓக.8

சிறுவர் துர்நடத்தை மற்றும் போசாக்குப் பற்றிய விழிப்புணர்வு தொடர்பான கருத்தரங்குகள் தென்மராட்சியில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் இடம்பெறுகின்றன.

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவு ரீதியாக இதனை நடத்துகின்றனர்.

போசாக்கின்மை காரணமாகக் குழந்தைகள், சிறுவர்கள், கரப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார் போன்றோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அதன் பாதிப்புகளும் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் பற்றியும் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் சிறுவர் துர்நடத்தை களைக் கட்டுப்படுத்துவதற்குப் பொதுமக்களின் பங்களிப்புத் தொடர்பாகவும் கருத்தரங்குகளை நடத்திவருகின்றனர்.

அந்த வகையில் நேற்று எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட கெற்பேலிப் பிரிவு மக்களுக்கான கருத்தரங்கு கெற்பேலி மேற்கு பொது நோக்கு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கருத்துரைகள் வழங்கினார். (4-9)

# கொள்ளையனுடன் போராடி சங்கிலியை மீட்டார் துணிச்சலான 60 வயதுப் பெண்

## ஆதாரமாக அவனது அலைபேசியைப் பிடிங்கி பொலிஸில் ஒப்படைத்ததால் அவன் சிக்கினான்

யாழ்ப்பாணம், ஓக. 8

வீதியில் பயணித்த பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுக்க முயன்ற கொள்ளையனுடன் போராடிச் சங்கிலியை மீட்டதோடு, ஆதாரமாகக் கொள்ளையனின் அலைபேசியை எடுத்துப் பொலிஸாரிடம் வழங்கினார் துணிச்சலான பெண். அதனடிப்படையில் சந்தேகநபர் இனங்காணப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் யாழ்ப்பாணம் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சூராவத்தையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

சூராவத்தைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் 60 வயதுப் பெண் வீதியில் நடந்து சென்றுள்ளார். அவரை உந்துருளியில் பின்தொடர்ந்த இரு இளைஞர்கள் பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்து எடுத்து விட்டனர். உடனடியாகவே உசாரடைந்த அந்தப் பெண் கொள்ளையர்களில் ஒருவனை எட்டிப் பிடித்துவிட்டார். பிடித்த பிடியை அவர் கைவிடவில்லை. கொள்ளையன் அந்தப் பெண்ணிடமிருந்து தப்பிக்க இயன்றளவு முயன்றுள்ளான்.

அவனிடமிருந்து தனது சங்கிலியை மீளப் பெறுவதற்காகப் போராடுவதைப் பெண் கைவிடவில்லை. அத்துடன் அவர் கூக்குரலிட்டுள்ளார். அவனிடமிருந்து பெண் தனது சங்கிலியைப் பறித்தார். எனினும் கொள்ளையன் தப்பியோடமுற்பட்டான். ஆனாலும் அவனிடமிருந்து அவனது அலைபேசியை அந்தப் பெண் எடுத்து விட்டார். நடந்த சம்பவங்களைப் பொலிஸாரிடம் கூறி அலைபேசியையும் பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

சிறிது நேரத்தில் கொள்ளையனின் அலைபேசிக்கு அழைப்பு வந்தது. தமிழ் பொலிஸ் அலுவலர் ஒருவர் சாதுரியமாக உரையாடி அதன் மூலமாகக் கொள்ளையடித்தவர் இனங்காணப்பட்டார். அவர் விரைவில் கைது செய்யப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (4-105)

# வாள்வெட்டுக் குழுவில் முன்னர் இருந்தாலும் திருந்தி வாழ்வோரை மீண்டும் தண்டிக்காதீர்

யாழ்ப்பாணம், ஓக. 8

முன்னர் வாள்வெட்டுக் குழுவில் இருந்திருந்தாலும், அவர்களில் சிலர் தாம் செய்த தவறுகளை உணர்ந்து திருந்தி வாழ நினைக்கும்போது சம்பந்தம் இல்லாத ஒரு பிரச்சினைக்கு மீண்டும் அவர்களைத் தண்டிப்பது தேவையற்றது. அத்தகையவர்களை மீண்டும் சிறைச்சாலையில் தடுத்து வைக்கும்போது அவர்களுக்கு மனவிரக்தி ஏற்பட்டு மீண்டும் தவறு செய்யவே தூண்டும் என்று நீதிமன்றில் சட்டத்தரணி தெரிவித்தார்.

வாள்வெட்டுச் சம்பவம் மற்றும் வாள்வெட்டுக் குழுவுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் மானிப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட ஒருவருடைய வழக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த சந்தேகநபர் முன்னதாக வேறொரு வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புள்ளவர் என்று கைது செய்து விடுவிக்கப்பட்டிருந்தார். அவர் திருந்தி வாழ்ந்துவந்தார்.

இந்த நிலையில் மீண்டும் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சட்டத்தரணி சந்தேகநபர் சார்பில் தெரிவித்தார். விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குறித்த சந்தேகநபரைப் பிணையில் விடுவிக்க வேண்டும் என்றும் அவர் சார்பில் மன்றில் முற்பட்ட சட்டத்தரணி க.சுகாஸ் மன்றிடம் கோரினார்.

**பெற்றோரே தமது பிள்ளைகளை கட்டுப்படுத்தியாக வேண்டும்**

அதனைப் பரிசீலித்த நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா, வாள்வெட்டுக் குழுக்களில் இருப்பவர்களைப் பெற்றோர் தாமாக முன்வந்து தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் மாத்திரமே அத்தகையவர்களைத் திருத்திக் கொள்ள முடியும் என்று தெரிவித்தார்.

அவருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (4,114)

# தமிழக அரசியலில் சகாப்தம் தி.மு.க. தலைவர் கருணாநிதி



திருவாரூரில் இருந்து 15 மைல் தூரத்தில் உள்ள திருக்குவளை என்ற கிராமத்தில் 1924 ஜூன் 3ஆம் திகதி கருணாநிதி பிறந்தார். பெற்றோர்: முத்துவேல் அஞ்சுகம் அம்மையார். கருணாநிதிக்கு சண்முக சுந்தரம், பெரிய நாயகி என்று இரு சகோதரிகள். குடும்பத்துக்கு ஒரே ஆண் பிள்ளை அவர். பள்ளியில் படிக்கும்போதே அரசியலிலும், இலக்கியத்திலும் ஆர்வம் மிக்கவராக விளங்கினார். அப்போது 'மாணவ நேசன்' என்ற கையெழுத்துப் பிரதியை நடத்தினார்.

'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்' என்ற அமைப்பைத் தொடங்கியிருந்தார். அப்போது அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்களாக விளங்கிய அன்பழகன் கே.ஏ.மதியழகன் ஆகியோரை அழைத்து மன்றத்தில் பேசியிருந்தார்.

**அண்ணாவின் பாராட்டு**

1942ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா நடத்தி வந்த 'திராவிட நாடு' ஏட்டின் மூன்றாவது இதழில் கருணாநிதி எழுதிய 'இளமைப்பலி' என்ற எழுத்தோவியம் பிரசுரமாகியது. இக்கட்டுரை அண்ணாவை வெகுவாகக் கவர்ந்தது.

1944 செப்டம்பர் 13ஆம் திகதி கருணாநிதிக்கு திருமணம் நடந்தது. மணமகள் பெயர் பத்மா. கருணாநிதியின் நாடகங்களில் ஒன்றைப் பார்த்துப் பாராட்டிய தந்தை பெரியார். அவர் நடத்தி வந்த 'குடியரசு' வார இதழின் துணை ஆசிரியராக கருணாநிதியை நியமித்தார். 1916ஆம் ஆண்டில், திராவிடக் கழகத்தின் கொடி உருவாக்கப்பட்ட போது, நடுவில் உள்ள சிவப்பு வண்ணத்துக்கு கருணாநிதி தன் ரத்தத்தை காணிக்கை ஆக்கினார். பெரியாருடன் கூட்டங்களில் கலந்து கொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.

**திரை உலகப் பிரவேசம்**

இந்தச் சமயத்தில் கோவை ஜுபிடர் நிறுவனத்தினர் தயாரித்த 'ராஜகுமாரி' படத்துக்கு வசனம் எழுதும் வாய்ப்பு கருணாநிதிக்கு கிடைத்தது. இந்தப் படத்தில்தான் எம்.ஜி.ஆர். முதன் முதலாகக் கதாநாயகனாக நடித்தார். கருணாநிதிக்கு தொடர்ந்து சினிமா வாய்ப்புகள் வரத்தொடங்கின. மனைவி பத்மாவுடன் கோவையில்குடியேறிஇ 'அபிமன்யு' படத்திற்கு வசனம் எழுதினார். ஆனால் படத்தில் அவர் பெயர் விளம்பரப்படுத்தப்படவில்லை. திராவிடர் கழகத்தில் சிறந்த எழுத்தாளராகவும், பேச்சாளராகவும், திரைப்பட வசனகர்த்தாவாகவும் கருணாநிதி வளர்ந்து கொண்டிருந்த நேரத்தில், அவர் மனைவி பத்மா இயற்கை எய்தினார். 1948 செப்டம்பர் 15ஆம் திகதி தயாளு அம்மாளை கருணாநிதி மணந்தார்

**திராவிடர் கழகத்தில் பிளவு**

1949 ஜூலை 9ஆம் திகதி தனக்கு வாரிசுரிமை வேண்டுமென்பதற்காக மணியம்மையை பெரியார் மணந்தார். இதனால் திராவிடர் கழகம் பிளவுபட்டு செப்ரெம்பர் 17ஆம் திகதி அண்ணா தலைமையில் தி.மு.கழகம் உதயமாயிற்று. தி.மு.கழகத்தின் முக்கியத் தலைவர்களில் ஒருவராய் விளங்கிய கருணாநிதி, மாடர்ன் தியேட்டர் தயாரித்த 'மந்திரி குமாரி' படத்துக்கு வசனம் எழுதிப் புகழ் பெற்றார். 1952ஆம் ஆண்டு 'பராசக்தி' படத்துக்கு வசனம் எழுதி புகழின் சிகரத்தைத் தொட்டார். இப்படத்தில்தான் சிவாஜிகணேசன் அறிமுகமானார். 1953 ஜூலை மாதத்தில் தி.மு. கழகம் 'மும்முனைப் போராட்டம்' நடத்தியது. டால்மியாபுரத்தின் பெயரைக் 'கல்லக்குடி' என்று மாற்றக் கோரி நடந்த போராட்டத்தில் தண்டவாளத்தில் தலை வைத்துப்படுத்தார் கலைஞர். அவரைப் பொலிஸார் கைது செய்தனர். அவருக்கு 6 மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.


1957இல்' தேர்தலில் தி.மு.கழகம் முதன் முதலாகச் சட்டசபைத் தேர்தலில் களமிறங்கியது. குளித்தலைத் தொகுதியில் போட்டியிட்டு கருணாநிதி வெற்றி பெற்றார். 1965இல் தமிழ்நாட்டில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டையில் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார்.

**அமைச்சரானார்**

1967இல் பொதுத்தேர்தல் தமிழக அரசியலில் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. 20 ஆண்டுகள் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் தோல்வி அடைந்து தி.மு.கழகம் ஆட்சி பீடம் ஏறியது. பேரறிஞர் அண்ணா முதல்வரானார். கருணாநிதி பொதுப்பணித் துறை அமைச்சரானார். பின்னர் போக்குவரத்துத் துறைக்கும் பொறுப்பேற்றார். அப்போது பேருந்துகளை அரசுடைமையாக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார்.

**முதலமைச்சர்**

ஆட்சிக்கு வந்து இரண்டாண்டுகள் கூட முடியாத நிலையில் 1969ஆம் ஆண்டு பெப்ரவரி 2ஆம் திகதி நள்ளிரவு அண்ணா மறைந்தார். அறிஞர் அண்ணாவின் அரசியல் வாரிசு என்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருணாநிதி முதலமைச்சரானார். 1969 பெப்ரவரி 10ஆம் திகதி கருணாநிதியின் அமைச்சரவை பதவி ஏற்றது. மத்திய மாநில அதிகாரப் பங்கீடு பற்றி நிர்ணயிக்க 'ராஜ மன்னார் குழு' வை அமைத்தார். 1971இல் நாடாளுமன்றத்தைத் கலைத்து விட்டு தேர்தலைச் சந்திக்க தலைமை அமைச்சர் இந்திராகாந்தி முடிவு செய்தார். இந்திரா காந்தியுடன் கூட்டணி அமைத்த கலைஞர் தமிழக சட்டசபையையும் கலைத்து விட்டு நாடாளுமன்றத் தேர்தலுடன் சட்டசபைத் தேர்தலையும் நடத்தத் துணிச்சலாக முடிவு எடுத்தார். ராஜாஜியும், காமராஜரும் கூட்டணி அமைத்து எதிர்த்தும், கலைஞரை வீழ்த்த முடியவில்லை. தேர்தலில் தி.மு.கழகம் 184 இடங்களில் மகத்தான வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது. 1971 மார்ச் 15ஆம் திகதி கருணாநிதி இரண்டாவது முறையாக முதலமைச்சரானார். பின்னர், கருணாநிதிக்கும் எம்.ஜி.ஆருக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. தி.மு.கழகத்திலிருந்து பிரிந்த எம்.ஜி.ஆர். 'அண்ணா தி.மு.க.' என்ற பெயரில் தனிக் கட்சி தொடங்கினார்.


மருத்துவமனையிலிருந்து விடைபெற்ற கருணாநிதி

**எம்.ஜி.ஆர். ஆட்சி கலைப்பு**

எம்.ஜி.ஆர். ஆட்சி கலைக்கப்பட்டு, சட்டசபைக்குத் தேர்தல் நடத்தப்பட்டது. அதில் எம்.ஜி.ஆர். வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைத்தார். எம்.ஜி.ஆர். மறைவுக்குப்பிறகு ஆட்சிக்கு வந்த ஜானகி அம்மாள் மந்திரி சபை அ.தி.மு.க. பிளவு பட்ட காரணத்தால் 24 நாள்களில் கவிழ்ந்தது.

1989இல் ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் தி.மு.கழகம் மகத்தான வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. 13 ஆண்டு இடைவெளிக்குப்பிறகு கருணாநிதி மீண்டும். (3ஆவது முறையாக) முதலமைச்சரானார்.

**13 முறை வெற்றி**

1957இல் குளித்தலை தொகுதியிலும், 1962இல் தஞ்சையிலும் 1967, 1971 ஆகிய தேர்தல்களில் சைதாப்பேட்டையிலும், 1977, 1980 ஆகிய தேர்தல்களில் அண்ணா நகரிலும், 1989, 1991 தேர்தல்களில் துறைமுகத்திலும், 1996, 2001 மற்றும் 2006 தேர்தல்களில் சேப்பாக்கத்திலும் 2011 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் நடந்த தேர்தல்களில் திருவாரூரிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

**கலையுலக சாதனை**

அரசியலில் பெரும் சாதனைகள் படைத்துள்ள கருணாநிதி, திரைப்படத் துறையிலும் தனது முத்திரையை ஆழமாகப் பதித்துள்ளார். 20 படங்களுக்கு கதை, திரைக்கதை வசனம் எழுதிய அவர் 33 படங்களுக்குத் திரைக்கதை வசனம் எழுதினார். அவர் எழுதிய வசனங்கள் காலத்தை வென்று வாழ்கின்றன. 26 படங்களை அவர் தயாரித்துள்ளார். 18 படங்களுக்கு பாடல்கள் எழுதியுள்ளார். சிவாஜிகணேசன், எம் ஜி ஆர், எஸ்.எஸ்.ராஜேந்திரன், உள்பட பிரபல நட்சத்திரங்கள் அவருடைய வசனத்தைப் பேசி நடித்துள்ளனர்.

**இலக்கியப்பணி**

புதையல், வெள்ளிக்கிழமை, ரோமாபுரிப் பாண்டியன், பொன்னர் சங்கர், தென்பாண்டிச் சிங்கம் உள்பட 15 சமூக சரித்திர நாவல்கள் படைத்துள்ள கலைஞர், தூக்கு மேடை, அனார்கலி, சாக்ரடீஸ், மணிமகுடம் உள்பட 18 நாடகங்களை எழுதியுள்ளார். திருக்குறளுக்கு இவர் எழுதிய எளிய இனிய உரை மிகவும் புகழ் பெற்றது. குறளின் சிறப்பை விளக்கி இவர் எழுதிய குறளோவியம், இந்தியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. .தன் சுயசரிதையை 'நெஞ்சுக்கு நீதி' என்ற தலைப்பில் மூன்று நூல்களாக எழுதியுள்ளார். தன் வரலாற்றுடன்இ சமகாலத்தில் நடைபெற்ற இந்திய நிகழ்ச்சிகளையும், உலகநிகழ்ச்சிகளையும் பொருத்தமாக இணைத்து, 'உலக வரலாறு' என்று சொல்லத் தக்கவகையில் அருமையாக எழுதப்பட்டுள்ள நூல் 'நெஞ்சுக்கு நீதி'

**ஐந்துமுறை முதலமைச்சர்**

கருணாநிதிஇ தமிழக முதல் அமைச்சராக ஐந்து முறை பதவி வகித்தார்.

1. அறிஞர் அண்ணா மறைவுக்குப்பின், 1969 முதல் 1971 வரை.

2. 1971இல் சட்டசபையை கலைத்துவிட்டு தேர்தலை சந்தித்தார். காமராஜருக்கு ஆதரவாக ராஜாஜி பிரசாரம் செய்தும் காங்கிரஸ் தோற்றது. கருணாநிதி மகத்தான வெற்றி பெற்று முதலமைச்சரானார். 1976 வரை பதவியில் இருந்தார்.

3. 1977 முதல் 1988 வரை தமிழக முதல் அமைச்சராக எம்.ஜி.ஆர். பதவி வகித்தார். அந்தக் காலக்கட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கருணாநிதி, எம்.ஜி.ஆர். மறைவுக்கு பின் நடந்த தேர்தலில் வெற்றி பெற்று 1989இல் மூன்றாவது முறையாக முதலமைச்சர் ஆனார்.

4. 1996 முதல் 2001ம் ஆண்டு வரை நான்காவது முறையாக முதலமைச்சராகப் பதவி வகித்தார்.

5. 2006ம் ஆண்டு முதல் 2011 வரை ஐந்தாம் தடவையாக ஆட்சி நடத்தினார்.

இலங்கைத் தமிழர்களுடைய விடையங்களி லும் கருணாநிதி கவனம் செலுத்தியிருந்தார்.

அவரின் காலகட்டத்தில் வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபை அரசு தமிழ் மக்களாகிய எங்களுக்கு கிடைக்கப்பெற்றது. இலங்கை அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக பல்வேறு வகையான உணவு ஒறுப்புப் போராட்டங்களை நடத்திய பெருமை கலைஞர் கருணாநிதியை சாரும். அவர் தமிழ் மீது கொண்ட பற்றின் காரணமாக அவரது திரைப்படங்களிலும் சரி கவிதைகளிலும் சரி பாடல்களிலும் சரி அரசியல் பேச்சுக்களிலும் சரி தமிழை முன்னிலைப்படுத்தி கருத்துக்களை வெளியிடும் ஒரு சிறந்த தலைவர்.

# வலிகாமம் கிழக்கில் பார்த்தீனியம் ஒழிப்பு



கிளிநொச்சி ஓக 8
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைக் கழக மாணவர்களால் வலிகாமம் கிழக்குபிரதேசசபைகுட்டப்பட்ட பகுதிக ளில் பார்த்தீனிய ஒழிப்புச் செயற்பாடு நேற்று முன்தினம் மேற்கொள்ளப் பட்டது
பார்த்தீனியச் செடியின் பாதிப்பால் யாழ்ப்பாண விவசாய சமூகம் பெரும ளவு பாதிப்புக்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது . இதனை அழிக்கும் முகமாகவும், மக்கள் மத்தியில் குறித்த செடியின் பாதிப்பு தொடர்பில் விழிப்பு ணர்வூட்டும் முகமாகவும் யாழ்ப்பா ணம் பல்கலைக்கழகத்தின் புவியியி யற்துறையின் இளம் திட்டமிடற்பிரிவு மாணவர்களும் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையும்இணைந்துபார்த்தீனி யம் அழிப்பு நடவடிக்கையை மேற் கொண்டனர். இதில் பல்கலைக்கழக புவியியல் பிரிவு விரிவுரையாளர் பல்க லைக்கழக மாணவர்கள்பிரதேசசபை தவிசாளர், உப தவிசாளர் என பலரும் கலந்துகொண்டனர். (6)





## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

தென்மராட்சி ஓக. 8
யாழ்ப்பாணம் வரணி வடக்கு அ.த.க பாடசாலை யில் கற்கும் மாணவர்களுக்கு கடந்த வியாழக்கி ழமை கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதே இடத்தைச் சேர்ந்த புலம்பெயர் நாடொன்றி லிருந்துவந்த நவரத்தரினம் தனது சகோதரனின் வேண்டுகோளுக்கிணங்க பாடசாலை மாணவர் களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கினார். பாடசாலைஅதிபர்ந. வசந்தரூபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தென்மராட்சிகல்விவலய ஆரம்பபிரிவு சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ந. திருவாசகன் கலந்து கொண்டார். (9)

# நல்லூர்த் திருவிழாவில் 30 மறைகாணிகள்

### குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த



**யாழ்ப்பாணம், ஓக.8**
**வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசு வாமி கோயிலின் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலய சுற்றாடலில் 30 இற்கு மேற்பட்ட மறைகாணிகள் (சிசி ரிவி) பொருத்தப்படவுள்ளன.**

திருவிழா காலத்தில் ஆலயத்துக்கு வருகைதரும்பக்தர்களின்பாதுகாப்புமற் றும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கடந்த வருடத்தை விட இம் முறை கூடுதலான மறைகாணிகள் (சிசி ரிவி) மாநகராட்சிமன்றத்தால்பொருத்தப் படவுள்ளன. இதற்கான பணிகள் அடுத்த வாரத்தில் இடம்பெறவுள்ளன.
மறைகாணிகள் (சிசிரிவி) மூலம் ஆலயச் சுற்றாடலில் இடம்பெறும் சகல நடவடிக் கைகளையும் அவதானிப்பதற்கு என மாநகராட்சி மன்ற அலுவலர்கள் இதற் கென தனியாக நியமிக்கப்படவுள்ளனர்.
அதனைவிட இதற்கென சிறப்புச் சேவை நிலையம் ஒன்றும் ஆலயச் சுற்றாடலில் அமைக்கப்படவுள்ளது.
நல்லூர் ஆலயச்சுற்றாடலில் உள்ள வீதிக ளுக்குவலுகூடியவீதிவிளக்குகள்பொருத் தும்பணிகள்தற்போது ஆரம்பிக்கப்பட்டுள் ளன. (17)

## அலங்கார உற்சவம்

வடமராட்சி.ஓக 8
வடமராட்சி புலோலி மந்திகை கண் ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த மாதம் 29 ஆம்திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவரு கின்றன. ஒவ்வொருநாளும் சிறப்பு அபி சேகங்கள் இடம்பெற்று சுவாமி வீதி வலம் வருதல் இடம்பெற்று வருகின் றன. எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட் கிழமை ஆடிப்பூரத்தன்று தீர்த்தத் திரு விழாவும் இடம்பெறும். (124)

## ஆங்கில தின நிகழ்வு

யாழ்ப்பாணம்.ஓக 8
சுன்னாகம் "வாழ்வகம்" (விழிப்புலவலு விழந்தோர் இல்லம்) நடத்தும் ஆங்கில தின நிகழ்வு இன்று புதன்கிழமை வாழ் வகத்தின் செல்லா மண்டபத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறும்.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் கருனா சிவாஜி கலந்து கொள்ளவுள்ளார்.

## பிரதேச அபிவிருத்தி பணிகளுக்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

யாழ்ப்பாணம்.ஓக 8
பிரதேச அபிவிருத்தி பணிகளுக்கு பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும். அவ்வாறு ஒத்துழைப்பு வழங்குவ தன் மூலமே அபிவிருத்தி பணிகளை விரைவாக மேற்கொள்ள முடியும் என்று யாழ்ப்பாண மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.
கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் முன் பள்ளி மாணவர்களின் விளையாட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நிலைய மைதானத்தில் தலைவர் இ.தனஞ்சயன் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
பிரதேசங்களில் பல்வேறுபட்ட அபிவிருத்தி பணி கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. பிரதேச அபி விருத்திக்காகவே மக்கள் எம்மை நம்பி வாக்களித் தனர். அதற்காக நாம் மக்களுக்கு முழுமையான இதய சுத்தியுடன் சேவையாற்றுவோம். மக்கள் தமது பகுதியில் உள்ள குறைகள் அபிவிருத்தி தொடர்பாக நேரடியாக எம்முடன் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும்.
தற்போது வீதிசீரமைப்பு, வீதிகளுக்கு வீதிவிளக்கு கள் அமைத்தல், குடி தண்ணீர் விநியோகம் உட் பட அபிவிருத்திபணிகள் யாவும் விரைவில் விரை வுபடுத்தப்படும் - என்றார். (17)



## பொருளாதார நிலையில் பின்தங்கியோருக்கு ஓட்டுநர் உரிமைப் பத்திரம் இலவசம்

யாழ்ப்பாணம்.ஓக 8
வலி தென்மேற்கு பிரதேசத்தில் பொருளாதார நெருக்கடி யினால் ஓட்டுநர் உரிமைப் பத்திரம் எடுக்கமுடியாமல் திண்டாடும் மக்களுக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், ஓட்டுநர் உரிமைப் பத்திரம் எடுப்பதற்கு வசதியாக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து 4 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.
ஓட்டுநர் உரிமைப்பத்திரம் எடுப்பதற்கு பல ஆயிரம் ரூபா தேவைப்படுகின்றமையால் வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்கள் பத்திரத்தை பெறமுடியாமல் திண்டாடு கிறார் கள்.
கடந்தகாலங்களில் 100 ரூபாவுடன் எதுவித சிரமமுமின் றிச் ஓட்டுநர் உரிமைப் பத்திரம் எடுக்கக்கூடியதா யிருந்தது.
தற்பொழுது இந்த நிலை மாறி பல ஆயிரம் கணக்கான ரூபா தேவைப்படுகின்றது. இதனால் வருமானம் குறைந் தவர்கள் ஓட்டுநர் உரிமைப் பத்திரம் எடுக்கமுடியாமல் திண்டாடுகிறார்கள்.
மக்களின் இந்த நிலைப்பாட்டை உணர்ந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் வறுமைக் கோட்டிற்கு உட் பட்டவர்களும் ஓட்டுநர் உரிமைப் பத்திரம் பெறுவதற்கு வசதியாக பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுதிட்ட நிதியி லிருந்து நிதி ஒதுக்கியுள்ளார்.
பொது அமைப்புக்களின் பரிந்துரையுடன் விண்ணப்பிப்ப வர்களுக்கு ஒருவருக்கு 12 ஆயிரம் ரூபா வீதம் வாகனங் களுக்கு ஏற்ற வகையில் வழங்கப்படவுள்ளது. (115)

## பெண் சாரணிய குழுத் தலைவிப் பயிற்சி

பெண் சாரணிய குழுத் தலைவிப் பயிற்சி யாழ்ப்பா ணம் கொக்குவில் இந்துக்கல்லூரி ஆரம்பப்பாடசாலை யில் நாளை வியாழக்கிழமை காலை 8 மணி தொடக் கம் மாலை 3 மணிவரை இடம்பெறும்.
பயிற்சிக்கு குறித்த பாடசாலையைச் சேர்ந்த பெண் சாரணி குழுத்தலைவிகளையும் அதற்கு அடுத்தநிலை யில் உள்ளவர்களையும் கலந்துகொள்ளுமாறு வடமா காண பெண் சாரணிய ஆணையாளர் திருமதி நீலா தர்மகுலசிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 90 கிராம் நிறைக்குட்பட்ட நண்டுகளைப் பிடிக்காதீர்

### கடற்றொழிலாளர் சம்மேளனம் அறிவுறுத்து

கடல்வளத்தைப்பாதுகாப்பதுடன் எதிர்கால சந்ததியினருக்கு கடல் வளத்தைக் கையளிக்கும் நோக் கோடு கடலில் உள்ள சிறிய நண் டுகளை தொழிலாளர்கள் பிடிப் பதைதவிர்க்குமாறு யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டு றவுசங்கசமாசங்களின் சம்மேள னம் தெரிவித்தது.
யாழ்ப்பாண மாவட்ட கடற்றொ ழில் பிரதேசங்களில் மீனவர்க ளால் பிடிக்கப்படும் நீலக்கால் நீந்து நண்டுகள் (வெள்ளை நண்டு) சந்தையில் கூடுதல் விலை கிடைக்கப் பெறுகின்றது. அத்தோடு இலங்கையின் சந்தை வாய்ப்பு அதிகரித்து காணப்படு கின்றமையால் சிறிய நண்டு களை தொழிலாளர்கள் பிடிப் பதை தவிர்க்க வேண்டும்.
யாழ்ப்பாணத்தில் மாவட்டத்தில் 800 இற்கும் மேற்பட்ட பெண்கள் நண்டுத் தொழிற்சாலை மூலம் வேலைவாய்ப்பைப் பெறுகின் றார்கள். அவர்களின் வாழ்வாதா ரம் பாதிக்கும் நிலை ஏற்படும் என்பதாலும் தனியார் நிறுவனம் மீனவர்களிடம் கொள்முதல் செய் யும் போது 90 கிராமிற்கு மேற் பட்ட நண்டை கொள்முதல் செய் யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள் ளது.

கரணவாய் மேற்கு இளவேனில் கல்வி மேம்பாட்டு கழகம் முதன்மை மாணவர்க ளையும் சாதனையா ளர்களையும் மதிப்ப ளிக்கும் முகமாக நடத்திய 5 ஆவது ஆண்டு பரிசளிப்பும் கலை நிகழ்வும் கரணவாய் மேற்கு கரவெட்டி சந்திரோதயம் சனசமூக நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு பொ. ஸ்ரீஸ்காந்தராசா தலைமையில் இடம்பெற்றது. நிகழ் வில் முதன்மை விருந்தி னராக பொருளியல் ஆசான் மா.லோகசிங் கம் கலந்துகொண்டார்.



## நூல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம்.ஓக 8

பண்டத்தரிப்பில் சி.கா. செந்திவேலின் வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை நூல் அறிமுக நிகழ்வு நாளை வியாழக்கிழமைபிற்பகல் 4.30மணியளவில் பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்ற மண்டபத்தில் இடம்பெறும்.

கடந்தசில மாதங்களுக்கு முன்னர் வெளியிட்டுவைக்கப்பட்ட இலங்கை இன முரண்பாட்டின் முழுமையான பரிமாணத்தைக்காட்டும் இனவிடுதலைப்போரின் இன்னுமொருபக்கத்தையும் சொல்லும் அரசியல் பகுப்பாய்வு விமர்சன நூலான வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை நூலின் 12 ஆவது அறிமுக நிகழ்வாக இது இடம்பெறவுள்ளது.

ஓய்வுநிலை உபஅதிபரும் மொழிபெயர்ப்பாளரும் மூத்த அரசியல்செயற்பாட்டாளருமான மு.தியாகராஜா தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் அறிமுக உரையை எழுத்தாளரும் சட்டத்தரணியுமான சோ.தேவராஜாவும், நூல் மதிப்பீட்டுரைகளை ஓய்வுநிலை அதிபர்களான என். பாலச்சந்திரன், கெ.ஜெகநாதன் ஆகியோரும் வழங்கவுள்ளனர். (147)




தினமும் பெருமளவு மக்கள் கூடும் சாவகச்சேரி நகரப் பகுதிகளில் உள்ள வடிகான்களில் தொடர்ந்து தண்ணீர் தேங்கி நிற்பதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் டெங்குநுளம்புகட்டுப்படுத்தும் சுகாதாரப் பகுதியினர் கவனமெடுத்து விரைவில் துப்புரவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கைவிடுத்துள்ளன. (9)

## பாடசாலையின் அபிவிருத்திக்கு உதவுமாறு கோரிக்கை

சுதுமலை.ஓக 8

யாழ்ப்பாணம், ஏழாலை வடக்கு அமெரிக்கன்மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில்மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும் அபிவிருத்தி வேலை களை மேற்கொண்டுதருமாறுபழைய மாணவர்கள், பாடசாலையின் நலன் விரும்பிகள் ஆகியோரிடம் பாடசாலையின் அதிபர் திருமதி. மோகனா ரவிபாலா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புகழ்பூத்த பாடசாலையாக விளங்கிய இப்பாடசாலை நாட்டில் ஏற்பட்ட இடப்பெயர்வின் பின் மிகவும் சிதைவடைந்துள்ளது. இதனைமீண்டும்கட்டியெழுப்ப ஆர்வமுள்ளவர்கள் தம்முடன்ஒன்றிணைந்து பாடசாலையை மீண்டும் பழையநிலைக்குகொண்டுவரத்தங்களாலான உதவியினை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். (147)

## விளையாட்டு நிகழ்வு

சுதுமலை, ஓக. 8

யாழ்ப்பாணம்மானிப்பாய் கட்டுடைமடுமாதாகோவில் பெருநாளை முன்னிட்டுக் கட்டுடை மகா சனசமூக நிலையத்தினரால்அந்தப்பகுதி மக்களிடையே பல்வேறுவிளையாட்டுநிகழ்வுகளை நடத்தி வருகின்றனர்.

கடந்த 4ஆம் திகதி ஆரம்பமான விளையாட்டுக்கள் எதிர்வரும் 18ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

கரம், துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம், முட்டி உடைத்தல், கிடுகு பின்னல், சங்கீதக் கதிரை போன்ற விளையாட்டுக்கள் இடம்பெறுவதனால் ஆர்வம் உள்ளவர்களைக் கலந்துகொள்ளுமாறு சனசமூக நிலைய நிர்வாகத்தினரால் அழைப்பு விடப்பட்டுள்ளது. (147)

● ● ● ●

யாழ்ப்பாணம்.ஓக 8

மானிப்பாய் பனை தென்னைவளஅபிவிருத்தி கூட்டுறவுச்சங்கத்தின் ஆதரவுடன் காக்கைதீவு முத்தமிழ் முன்பள்ளிச்சிறு வர்களின்செயற்பட்டுமகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு மானிப்பாய் பனைதென்னைவள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கத் தலைவர்இ.பிரதீபன்தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில்முதன்மைவிருந்தினராக வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்களின் கொத்தணியின் பொது முகாமையாளர் க.சுதாகரன் கலந்து கொள்ளவுள்ளார். (63)

# கச்சாய் - பருத்தித்துறை பேருந்து சேவையை மீண்டும் ஆரம்பித்துத் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக 8

**வீதி பழுதடைந்து காணப்பட்டதால் நிறுத்தப்பட்ட கச்சாய் - பருத்தித்துறை பேருந்து சேவையைத் தற்போது வீதி செப்பனிடப்பட்டதால் மீண்டும் ஆரம்பிக்குமாறு கச்சாய் பொது அமைப்புக்கள் இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலை முகாமையாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளன.**

கச்சாய் பகுதி மக்கள் வடமராட்சிப் பகுதிக்கு பல்வேறு தேவைகளுக்காகச் சென்று வருகின்றனர்.

இப் பகுதி மக்களின் நலன்கருதி பருத்தித்துறை சாலையினரால் பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம் ஊடாக கச்சாய் துறைமுகம் வரை பேருந்து சேவையினை நடத்தினர்.

இதனால் இப்பகுதி விவசாயிகள், கடற்றொழிலாளர்கள்உட்படப்பொதுமக்கள் தமது உற்பத்திப் பொருள்களை வடமராட்சிப்பகுதிச்சந்தைகளில்விற்பனை செய்வதற்குச்சென்று வந்துள்ளனர்.

கொடிகாமத்திலிருந்து கச்சாய்க்குச் செல்லும்வீதி மிகவும் மோசமடைந்து காணப்பட்டதால் பேருந்து சேவை நிறுத்தப்பட்டது. கடந்த வருடம் கொடிகாமம் தொடக்கம் கச்சாய்த் துறைமுகம் வரையான வீதி சீரமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சாலையினர் தினமும் கொடிகாமத்திலிருந்து கச்சாய் சாவகச்சேரி ஊடாக யாழ்ப்பாணத்திற்கான பேருந்து சேவையினை நடத்தி வருகின்றனர்.

அவ்வாறு பருத்தித்துறையிலிருந்து கச்சாய்த் துறைமுகம் வரை இடம்பெற்ற சேவை தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. இந்தப் பேருந்து சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு கச்சாய் பொது அமைப்புக்கள் பருத்தித்துறை சாலை முகாமையாளரை கேட்டுள்ளனர். இது தொடர்பில் பருத்தித்துறை பேருந்து தரிப்பிட சாலை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு "உதயன்" கேட்ட போது, ஆரம்பத்தில் கச்சாய்-பருத்தித்துறைபேருந்துசேவைஒன்று நடைபெற்றது. பின்னர் அது நிறுத்தப்பட்டது.

மீண்டும் அந்த பேருந்து சேவை ஏற்படுத்தித் தருமாறு தெரிவித்து எனக்கு கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாகப் பருத்தித்துறை-கொடிகாமம் வரை செல்லும் பேருந்து சேவையை நீடித்து இரண்டு தடவைகள் கச்சாய் வரை செல்வதற்கு நடவடிக்கைஎடுக்கப்படும்- என்றார். (79)



யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை இடம் பெற்றது. சுவாமி தேரில் ஆரோகணித்து வீதி வலம் வருவதைப் படத்தில் காணலாம். (17)

## கீரிமலை இந்துமயானத்துக்கு இளைப்பாறும் மண்டபம்

யாழ்ப்பாணம் ஓக 8

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் செயற்படுத்தப்படும் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் கீரிமலை செம்மண்வாய்க்கால் இந்து மயானத்திற்கான இளைப்பாறும் மண்டபம் அமைத்துத் தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்தல் உட்பட சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்புதிட்டத்தை கீரிமலை கருகம்பனை இந்து இளைஞர் கழகம் முன்னெடுத்தள்ளனர்.

ரூபா 8 இலட்சத்து 50 ஆயிரம் பெறுமதி கொண்ட இந்தத் திட்டத்துக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக 3 இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

புனித பிரதேசமாக உள்ள கீரிமலையில் காணப்படும் இந்தச் செம்மண் வாய்க்கால் இந்து மயானம் அயற்கிராமங்களான கருகம்பனை, அளவெட்டி, கொல்லங்கலட்டி, இளவாலை, பன்னாலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு உரித்துடைய ஒரு மயானமாகக் காணப்படுகின்றது.

இங்கு இறுதிச் சடங்குகளை நிறைவேற்ற வருபவர்கள் இளைப்பாறுவதற்கு ஒரு தகுந்த இடம் மற்றும் தண்ணீர் வசதி என்பன இல்லாமையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதற்கான தீர்வாக இந்த மயானத்திற்கான இளைப்பாறு மண்டபத்தை இத்திட்டத்தின் ஊடக செயற்படுத்தவுள்ளனர்.

வலி.வடக்குப்பிரதேசசபையின்ஒத்துழைப்புடன்செயற்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு விரைவில் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும் கடந்த வருடம் இந்த வேலைத்திட்டத்தின் மூலம் கருகம்பனை இந்து இளைஞர் சங்கம் மாவட்ட ரீதியில் இரண்டாம் இடத்தைப்பெற்றுக்கொண்டது. (114)

## டெங்கின் தாக்கம் குறைவு



யாழ்ப்பாணம், ஓக. 8

யாழ்ப்பாண மாநகரப் பிரதேசத்தில் டெங்கின் தாக்கம்திடீரெனக் குறைந்துள்ளதாகச் சுகாதாரமருத்துவ அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.

கடந்த ஜீன் மாதத்தில் 39 பேரும், ஜீலை மாதத்தில் 33 பேரும் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாதத்தில் கடந்த ஒரு வார காலப்பகுதியில் மட்டும் இரண்டு பேர் வரையில் டெங்கால்பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெங்கின் தாக்கம் உள்ள பகுதிகளில்தொடர்ச்சியான விழிப்புணர்வுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகச்சுகாதாரமருத்துவ அதிகாரி பணிமனை தெரிவித்தது. (17)

## பெருந்திருவிழா

சுதுமலை, ஓக. 8

யாழ்ப்பாண்ம்கொக்குவில் அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன்ஆலயவருடாந்தப் பெருந்திருவிழா நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 16 நாள்கள்திருவிழா இடம்பெறும். எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும்,மறுநாள்ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும்இடம்பெறும்.(147)



யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் முதியோர் சங்க சம்மேளன உறுப்பினர்கள் இலங்கை முழுவதுமான 5 நாள்கள் கொண்ட சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டு நேற்றுமுன் தினம் மாலை 4 மணியளவில் வவுனியா சென்றடைந்தனர். (222)

### சிறுமிகள் மீது பாலியல் சேட்டை

# வட்டுக்கோட்டை ஆசிரியரின் மறியலை நீடித்தது நீதிமன்று

யாழ்ப்பாணம், ஓக. 8

தனியார் கல்வி நிலையத்துக்கு வந்த பதின்ம வயதுச் சிறுமிகளுக்கு பாலியல் தொல்லை வழங்கிய குற்றச்சாட்டில் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஆசிரியரின் விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டது மல்லாகம் நீதிவான் மன்று.

வழக்கு நேற்று மல்லாகம் நீதிவான் மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டு 14 நாள்கள் திகதியிடப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டையிலுள்ள பிரபல பாடசாலைக்கு முன்பாகவுள்ள தனியார் கல்வி நிலையத்தில் கற்பிக்கும் ஆசிரியர் அவரிடம் கற்கச் செல்லும் பதின்ம வயது மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுக்கின்றார் என்று சங்கானைப் பிரதேச செயலகத்துக்கு அநாமதேய முறைப்பாடுகள் கிடைத்தன. கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைவாக, ஆசிரியர் கடந்த ஜூன் மாதம் 13ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார். ஆசிரியர் கற்பித்த கல்வி நிறுவனம் இனந் தெரியாத நபர்களால் தீக்கிரை யாக்கப்பட்டது. மல்லாகம் நீதிவான் மன்றில் இந்த வழக்கு இடம்பெறுகிறது. (21,114)

# இயக்கச்சியில் நடந்த விபத்தில் இறந்தவர்களில் ஒருவர் ஆண்

இயக்கச்சியில் நேற்றுமுன்தினம் நடந்த விபத்தில் பெண் ஒருவரும், அவரது உறவினரான குடும்பத் தலைவர் ஒருவருமே உயிரிழந்தனர் என்றும் உயிரிழந்த பெண்ணின் தாயார் உயிரிழக்கவில்லை என்றும் உறவினர்கள் தெரிவித்தனர்.

இயக்கச்சியில் நேற்றுமுன்தினம் ஹைஏஸ் ஒன்று, வீதியில் மின்கம்பங்கள் ஏற்றப்பட்ட நிலையில் நிறுத்தப்பட்டிருந்த ஹன்ரர் ரக வாகனத்துடன்மோதி விபத்துக்குள்ளானது. அதில் 8 பேர் காயங்களுக்குள்ளாகியிருந்தனர். அவர்கள் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் மருத்துவனைகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் இருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தனர். வெளிநாட்டில் இருந்து வந்த பெண் ஒருவரும், அவரை அழைத்து வரச் சென்ற அவரது தாயும் உயிரிழந்தனர் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. உதயன் பத்திரிகையும் அதனை வெளியிட்டிருந்தது. வெளிநாட்டில் இருந்து வந்த குடும்பப் பெண்ணும், மற்றொரு குடும்பத் தலைவருமே உயிரிழந்தனர் என்றும் உயிரிழந்த பெண்ணின் தாயார் காயமடைந்தார் என்றும் தெரிவித்தனர்.

உதயன் நேற்று இது தொடர்பாக வெளியிட்ட செய்தியில் வெளிநாட்டில் இருந்து திரும்பி வந்த பெண்ணும் அவரை அழைத்து வரச் சென்றிருந்த அவரது தாயாரும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனால் காயமடைந்தவருக்கும் அவரது உறவினர்களுக்கும் ஏற்பட்ட மன உளைச்சலுக்காக உதயன் வருந்துகின்றான்.

## நீரியல்...

வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று முல்லைத்தீவு மாவட்டத்துக்குச் சென்றார். அங்கு கடற்றொழிலாளர்களைச் சந்தித்த முதலமைச்சர் அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்தார். அதன்போதே கடற்றொழிலாளர்களால் மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நான்கு உத்தியோகத்தர்களே உள்ளனர். அவர்கள் சுயநலப் போக்கில் செயற்படுகின்றனர். அதிலும் ஒரு அதிகாரி தமிழர்களுக்கு எதிராகச் செயற்படுகின்றார். வவுனியாவைச் சேர்ந்த ஒருவர் 20 ஆண்டுகளுக்கு மேலாக இங்கு பணியாற்றுகின்றார். இவர்களால் மீனவர்களுக்கு எந்த உதவிகளும் இல்லை. முல்லைத்தீவு நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளை இடமாற்றம் செய்ய வேண்டும் என்று வடக்கு முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

வடக்கு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கைகளைச் செவிமடுத்ததுடன், அது தொடர்பில் ஆராயப்படும் என்றும் தெரிவித்தார் என்று கூறப்பட்டது.

சட்டவிரோதக் கடற்றொழில் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று அறிந்து கொள்வதற்காக முல்லைத்தீவுக் கடற்றொழிலாளர் சங்கங்களைச் சந்தித்துப் பேசினேன். வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களால் பிரதேச மீனவர்களுக்குப் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று அறிய முடிகின்றது என்று வடக்கு முதலமைச்சர் தெரிவித்தார்.

சிலர் பாரம்பரியமாக இந்தப் பிரதேசத்தில் தொழில் செய்கின்றனர். அவர்களிலும் பார்க்க அதிகமானவர்கள் இப்போது உள்நுழைகின்றனர் என்பது பிரதேச மீனவர்களின் குறையாக உள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டத்துக்கு முரணாக மீன்பிடித் தொழில் செய்கின்றனர் என்றும், மீன் வளம் விரைவாகக் குறைகின்றது என்றும் மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எமது மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கொழும்பு மீன்பிடி அமைச்சருடன் பேச வேண்டிய தேவை உள்ளது. வடக்கு மாகாண மீன்பிடித் திணைக்களத்தின் அலுவலகம் இங்கு இல்லாததும் சிரமத்தைத் தருகின்றது என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர். அது தொடர்பில் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கொழும்பு அரசுடன் பேசி ஒரு முடிவுக்கு வரவுள்ளோம். எதிர்வரும் 12ஆம் திகதி கொழும்பு அமைச்சர் இங்கு வரவுள்ளார். எமது கருத்துக்களை அவருக்குத் தெரியப்படுத்தவுள்ளேன். அவர்களுடன் பேசிய பின்னர்தான் தீர்க்கமான முடிவுக்கு வர முடியும் என்றும் வடக்கு முதலமைச்சர் தெரிவித்தார்.

**கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண விவசாய மற்றும் மீன்பிடி அமைச்சர் க.சிவனேசன்**

ஏனைய அனைத்துத் திணைக்களத்துக்கும் ஆளணி உள்ளது. கடற்றொழில் திணைக்களத்துக்கு மட்டும் ஆளணி இல்லை. இப்போது அதை உருவாக்கி வருகின்றோம்.

முன்னர் என்ன நடந்தது என்பதைப் பற்றி நான் கூற வரவில்லை. ஆளணி உருவாக்குதற்காக நியதிச் சட்டம் இயற்றப்பட்டு, மொழிபெயர்ப்புக்காகக் கொடுக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் என்னிடம் பொறுப்பை ஒப்படைத்த போது திணைக்களத்தை உருவாங்குகள் என்று கூறியிருந்தார். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆழ்கடல் படகுகளை உங்களுக்கு மானிய அடிப்படையில் வழங்க முடியும். ஆனாலும் தெற்கில் உள்ளவர்களை நம்பியே நீங்கள் தொழிலுக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. ஆழ் கடலுக்குச் செல்வதற்கான பயிற்சிகளைப் பெற வேண்டும். உதவித் தொகை கொடுத்துப் பயிற்றுவிக்க முன்வந்துள்ளனர். அதைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

வடமாகாணசபை உறுப்பினர்களான து.ரவிகரன், ஆ.புவனேஸ்வரன் ஆகியோரும் முதலமைச்சருடன் சென்றிருந்தனர். (ற-21-ரி3)

## சமுர்த்திப்...

கடந்த 1995 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சமுர்த்தி அதிகார சபை கடந்த 2014 ஆம் ஆண்டு சமுர்த்தித் திணைக்களமாக மாற்றப்பட்ட போதிலும் இதுவரை திணைக்களத்தில் பணியாற்றும் அலுவலர்களுக்கான நியமனக் கடிதங்கள், பதவியுயர்வுகள் மற்றும் ஏனைய அரச திணைக்கள அலுவலர்கள் அனுபவிக்கும் சலுகைகள், வசதிகள் செய்து வழங்கப்படாததைச் சுட்டிக் காட்டி நாளை நாடாளுமன்ற வளாகத்தில் நாடளாவிய ரீதியிலான சமுர்த்தி அலுவலர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

இதற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக யாழ்ப்பாண மாவட்ட சமர்த்தி முகாமையாளர் சங்கத்தினர் உட்பட அனைத்து சமுர்த்தி அலுவலர்களும் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். தமது போராட்டத்துக்கு உரிய தீர்வு இந்த மாதத்துக்குள் வழங்காவிடின் செப்ரம்பர் மாதம் தொடக்கம் தொடர் போராட்டங்களில் ஈடுபடவுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட சமுர்த்தி முகாமையாளர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

சமுர்த்தி அதிகார சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் சேவையில் இணைந்த அலுவலர்கள் பலர் சமுர்த்தித் திணைக்களம் உருவாக்கப்பட்ட பின்னர் ஓய்வு பெற்றுள்ளனர் எனவும் திணைக்களம் உருவாக்கப்பட்டு நான்கு வருடங்கள் கடந்துள்ள நிலையில் திணைக்களத்துடன் தொடர்புடைய நியமனக் கடிதங்கள் விதவைகள் ஆதரவற்றவர்களுக்கு ஓய்வூதியம் தொடர்பான எந்தவொரு ஆவணமும் இல்லாததால், அவர்களுக்கான ஓய்வூதியம் வழங்கப்படாமல் உள்ளதெனவும் இதனால் ஓய்வுபெற்ற அலுவலர்களின் குடும்பத்தினர் சமர்த்தி உதவி கோரி விண்ணப்பித்து வருகின்றனர் எனவும் தெரிவித்தனர். (21,9)

## போரின்பின்...

கொழும்பு, ஓக. 8

போருக்குப் பின்னர் இலங்கையின் நிலைமைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னேற்ற நிலைமைகள் போதுமானதாக இல்லை. முன்னேற்றம் மிகவும் மந்தமாக அமைந்துள்ளது.

இவ்வாறு சுவிட்ஸர்லாந்தின் முன்னாள் அரச தலைவரும், அந்த நாட்டின் சமஸ்டிப் பேரவையின் உறுப்பினரும், சட்டம் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் அதிகாரிமான சிமோனேட்டாவிடம் சுட்டிக்காட்டியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன்.

இலங்கை வந்துள்ள சிமோனேட்டாவை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுத் திருகோணமலையில் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்போதே அவர் இவ்வாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் இரா.சம்பந்தன் தெரிவித்ததாவது:

அனைத்து மக்களும் சமத்துவமாகவும், கௌரவமாகவும் வாழும் வகையிலான புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அதற்குப் பன்னாடுகள் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டினேன். தமிழ் மக்கள் தொடர்பாகப் பல விடயங்கள் பேசப்பட்டன. காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், மீள்குடியமர்வு, புதிய அரசமைப்பு உருவாக்கம் போன்ற விடயங்கள் தொடர்பில் விரிவாகப் பேசினோம். முன்னேற்றங்கள் ஏற்படுத்துவதில் பெரும் தாமதம் நிலவுகின்றது என்பதை எடுத்துக் கூறினேன்.

இந்த விடயங்களில் முன்னேற்றத்தை ஏற்படுத்த இலங்கை அரசுக்கு அழுத்தம் பிரயோகிக்கப்படவேண்டும் என்று நான் கோரிக்கை விடுத்தேன்.

அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டியது மிக முக்கியமானதாகும். பிரிக்கப்படாத நாட்டுக்குள் தீர்வை உள்ளடக்கிய அரசமைப்பை உருவாக்க வேண்டும். அனைத்து மக்களும் சமத்துவத்துடனும், கௌரவத்துடனும் வாழும் வகையிலான அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று அவரிடம் எடுத்துக் கூறினேன்.

இந்த விடயத்தில் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம் என்றும், இலங்கை அரசுடன் இந்த விடயங்கள் தொடர்பில் தொடர்ந்தும் தொடர்பில் இருக்கிறோம் என்று சுவிட்ஸர்லாந்துப் பிரதிநிதி தெரிவித்தார்- என்றார். (ற-21,31)

## நட்டஈடு...

கொழும்பு. ஓக. 8

வடக்கு, கிழக்கில் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடுகள் வழங்கும் சட்டத் திருத்தத்தின் சில விதிமுறைகள் அரசமைப்புக்கு முரணானது. அந்த விதிமுறைகள் நிறைவேற்றப்பட வேண்டுமானால் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு அல்லது பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று உயர் நீதிமன்று தீர்ப்பளித்துள்ளது.

இவ்வாறு நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார் சபாநாயகர் கரு ஜயசூரிய.

அவர் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் பிரிவு 121(1)க்கு அமைய "வடக்கு கிழக்கில் போரா பதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கும் காரியாலயம்" சட்டத் திருத்தம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது. அதை விசாரித்த நீதிமன்றம் சட்ட மூலத்தின் 27(அ) மற்றும் 27 (ஆ )3 ஆகிய சரத்துகள் அரசமைப்பின் 123(1) . நான்கு (எ) மற்றும் 3 ஆகிய சரத்துகளுக்கு முரணானதாக உள்ளது. அதை நிறைவேற்ற வேண்டும் என்றால் (சபைக்கு வராத நாடாளுமன்ற உறுப்பினர்களின் ) மூன்றில் இரண்டு பெரும்பன்மைக்குக் குறையாது நிறைவேற்ற வேண்டும் எனவும் பொது வாக்கெடுப்பு நடத்தி மக்களின் நிலைபாட்டைப் பெற வேண்டும் எனவும் தீர்ப்பளித்துள்ளது

உயர்நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் சட்ட மூலத்தில் திருத்தங்கள் செய்து அரசமைப்புக்கு உட்பட்டதாக மாற்றியமைத்தால் அதை நிறைவேற்ற முடியும். அதேபோல் சட்ட மூலத்தில் ஏனைய விதிமுறைகள் சட்டமூலத்துக்கு முரணானது அல்ல எனவும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது-என்றார். (ற-61)

## றெஜினா...

நேற்று மல்லாகம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சிறுமியின் உறவினரான பெண் ஒருவரிடமும், றெஜினாவுடன் சம்பவ தினத்தன்று பாடசாலையில் இருந்து சேர்ந்து வந்த நண்பியிடமும் சாட்சியங்கள் பெறப்பட்டன. வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 21ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த ஜூன் மாதம் 25ஆம் திகதி சிறுமி றெஜினா கிணறு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார். சிறுமியின் கழுத்தில் கயிற்றால் இறுக்கப்பட்டது போன்ற அடையாளமும் காணப்பட்டது. சிறுமியின் உடற்கூற்றுச் சோதனையில் கயிற்றால் இறுக்கப்பட்டதால் இறப்பு ஏற்பட்டது என்றும், சிறுமி பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டமைக்கான தடயங்கள் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் முதலில் 5 பேரைக் கைது செய்தனர். அவர்களில் ஒருவர் தானே கொலை செய்தேன் என்று ஒப்புக் கொண்டுள்ளார் என்று தெரிவித்த பொலிஸார் ஏனையோரை விடுவித்தனர். அதற்கு மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்புக் கிளம்பியது. மக்கள் பரவலாகப் போராட்டங்களை நடத்தினார்கள்.

பின்னர் இருவர் கொலையுடன் சம்பந்தப்பட்டுள்ளனர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கு நேற்று மல்லாகம் நீதிவான் மன்றில் மேலதிக நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் விளக்கத்துக்காக எடுக்கப்பட்டது.

சிறுமியின் உறவினரான பெண் முதலில் வாக்குமூலம் வழங்கினார்.

சிறுமி இறந்த நிலையில் மீட்கப்பட்ட கிணற்றில் உடுப்புத் தோய்த்துக் கொண்டிருந்தேன். அந்த வழியால் 4 பேர் சென்றனர். அவர்களைக் கண்டால் அடையாளம் காட்ட முடியும். அவர்கள் 3 பேரின் பெயர்கள் தெரியும் (பெயர்களைக் குறிப்பிட்டார்). அவர்களில் இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வாக்குமூலமளித்ததுடன் அவர்கள் இருவரையும் சுட்டிக்காட்டினார்.

அதன்பின்னர் உயிரிழந்த சிறுமியின் நண்பியிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

பாடசாலை முடிந்து தன்னுடனே றெஜினா வீடு திரும்பினார் என்றும், அப்போது அவர் கையில் தேக்கங்காய்களை எடுத்து வந்தார் என்றும் சிறுமி கூறினார்.

வாக்குமூலங்கள் பெறப்பட்ட பின்னர் வழக்கு எதிர்வரும் 21ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் 3 பேரின் விளக்கமறியலையும் நீதிமன்று நீடித்தது. (ற-114)

## 7 நாள்கள்...

சாமி. இரவு 7.30 மணியளவில் கருணாநிதியின் மறைவுக்கு தனது இரங்கலைத் தெரிவித்தார் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி. தனது இரங்கல் குறிப்பின் ஒரு பகுதியாக, 'கலைஞர் கருணாநிதிக்காக 7 நாள்கள் தமிழக அரசு துக்கம் கடைப்பிடிக்கும். அரச விழாக்கள் இந்த நாள்களில் கொண்டாடப்படாது. ஒரு நாள் (இன்று) விடுமுறையாக இருக்கும். கருணாநிதியின் உடல் தேசியக்கொடியால் சுற்றப்பட்டு முழு அரச மரியாதையுடன் குண்டுகள் முழங்க அவர் அடக்கமாவார்' என்று குறிப்பிடப்பட்டது. (ம)

## நீதிமன்ற...

ளுடன் தொடர்புடைய 3 பேர் நேற்று நீதிமன்றுக்குக் கொண்டுவரப்பட்டனர்.

அவர்கள் நீதிமன்றத் தடுப்பில் வைக்கப்பட்டிருந்தபோது சிறைச்சாலைப் பொலிஸாரின் பிடியில் இருந்து தப்பியோடியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. தப்பியோடியவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவுப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி3)

## ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டாளருக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஓக. 8
ஏற்றுமதி இறக்குமதி திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளருக்கு எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் நீடிக்கப்பட்டுள்ளது.
வெலிகம பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவரிடம் 2 லட்சம் ரூபா கையூட்டுப் பெற்ற சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்தார்.
அவர் கொழும்பு தலைமை நீதிவான் ரங்க திஸாநாயக்க முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். அதன்போதே மறியல் நீடிக்கப்பட்டது. (4)

# வக்கிர நிலை நோக்கியே கூட்டரசு பயணிக்கிறது

### எச்சரிக்கிறார் நாமல் எம்.பி.

கொழும்பு, ஓக. 8

**அரசு ஜனநாயக விரோதத்தின் வக்கிர நிலையை நோக்கிப் பயணிக்கின்றது என்று குற்றஞ்சாட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்காவிடின் அதனை அடைவதற்காகப் போராட்டங்களை நடத்துவோம் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு விரோதமாகவே கூட்டரசு தொடர்ச்சியாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. வெறும் 16 உறுப்பினர்களை மாத்திரமே கொண்டுள்ள தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை 7 உறுப்பினர்களைக் கொண்ட மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிர்க்கட்சி முதன்மைக் கொரடா பதவி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் 70 உறுப்பினர்களைக் கொண்டு பெரும்பான்மை வகிக்கும் கூட்டு எதிர்க்கட்சிக்கு எதிர்க்கட்சி அந்தஸ்தை வழங்க அரசு மறுப்புத் தெரிவித்து வருகின்றது.
நாட்டுக்கும் ஜனநாயகத்துக்கும் விரோதமாகச் செயற்படுவதை இந்த அரசு நிறுத்த வேண்டும். உரியகாலத்தில் தேர்தலை நடத்த வேண்டும். அதேவேளை நாடாளுமன்றில் எதிர்க்கட்சியாக எங்களை அங்கீகரிக்கவேண்டும். இவை மறுக்கப்படும் சந்தர்ப்பத்தில் செப்ரெம்பர் முதலாம் திகதி மக்கள் முன்னணி ஆதரவாளர்களை இணைத்துக்கொண்டு கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படும் - என்றார். (4)

கூட்டரசில் ஜனநாயகம் இல்லையென்று கூறுபவர்கள்

# கடந்த அரசின் ஜனநாயகம் எப்படி என்று கூறமுடியுமா?

### கேள்வியெழுப்புகிறார் அஜித்.பி.பெரேரா

கொழும்பு, ஓக. 8
கூட்டரசில் ஜனநாயகம் இல்லை என்று குற்றம்சுமத்துபவர்கள், கடந்த அரசில் ஜனநாயகம் எவ்வாறு காணப்பட்டது என்ற உண்மைகளை மக்களுக்கு எடுத்துரைக்க முடியுமா? என்று மின்வலு புத்தாக்க பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா கேள்வி எழுப்பியுள்ளார்.
கொழும்பிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,
ஊழல்வாதிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனைபெற்றுத்தருவதாகக் குறிப்பிட்டே கூட்டரசு ஆட்சிக்கு வந்தது. அரசதலைவர் தேர்தல், நாடாளுமன்ற தேர்தல்களில் இதுவே எமது கொள்கைப்பரப்புரையாகக் காணப்பட்டது. மக்களும் இந்த விடயத்தை எதிர்பார்த்தே கூட்டரசைத் தோற்றுவித்தனர். ஆனால் தற்போது அரசின் நோக்கம் திசைமாறிவிட்டதாகக் குற்றம் சுமத்துகின்றனர்.
எமது ஆட்சியில் ஜனநாயகம் அழிக்கப்படுகின்றது என்று குற்றம் சாட்டுபவர்கள் கடந்த அரசில் எவ்வாறான ஜனநாயகம் காணப்பட்டது என்று பகிரங்கமாக ஒப்பிட முடியுமா?
ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் அனைத்து நிறுவனங்களும் இன்று சுயாதீனமாகவே செயற்படுகின்றது. ஊழல்வாதிகளைத் தண்டிப்பதாகக் கூறிய அரசு ஏன் இன்னும் அவ்வாறு செயற்படவில்லை என்று மக்களிடம் உள்ள கேள்விக்கு விரைவில் பதில் கிடைக்கும் என்று தெரிவித்தார். (4)

# தேர்தலைப் பிற்போடுவது தவறானதொரு செயலே!

### தேர்தல் ஆணையாளர் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 8
தேர்தலைப் பிற்போடுவது தவறான செயற்பாடு என்று தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.
கொழும்பு மாவட்டத்தின் பிரதேசசபைகளுக்குத் தெரிவான பெண் உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு கொழும்பில் தேர்தல்கள் ஆணையாளர் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
அதில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
தற்போதுள்ள தேர்தல் முறைமையானது அரசதலைவர், தலைமை அமைச்சர், சபாநாயகர் மற்றும் அமைச்சர்கள் அனைவராலும் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட ஒன்று. தேர்தல் முறைமை தொடர்பில் சமுதாயத்தில் விவாதிக்கப்பட வேண்டும். அரசியலைப் பார்த்துப் பயப்பட வேண்டியதில்லை. அரசியல் என்பது தொற்றுநோயோ அல்லது பயங்கரமான விடயமோ இல்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)



கிழக்குப் பல்கலையில்

# பிரயோக விஞ்ஞான கட்டடத்தை அரசதலைவர் நேற்றுத் திறந்தார்

கொழும்பு, ஓக. 8
கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பிரயோக விஞ்ஞான பீடத்துக்கான புதிய கட்டடம் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது. அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன உத்தியோகபூர்வமாக அதைத் திறந்து வைத்தார்.
340 மில்லியன் ரூபா செலவில் நான்கு மாடிகளைக் கொண்டதாக அந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.
இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், உயர்கல்வி மற்றும் கலாசார அமைச்சர் விஜேதாசராஜபக்ச, கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம, பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி மொஹான் விஜேவிக்ரம, கிழக்குப் பல்கலைக்கழ முதல்வர் வீ. கனகசிங்கம் உட்பட திணைக்கள உயரதி

# சகல உதவிகளையும் சீனர் வழங்குகிறது

### உயர்கல்வி அமைச்சின் மேலதிக செயலர் கூறுகிறார்


கொழும்பு, ஓக. 8
சீனா கல்விசார்ந்த உதவிகள் மாத்திரமன்றி பொருளாதாரம், மருத்துவம், உட்கட்டமைப்பு, வீதி அபிவிருத்தி போன்ற பல்வேறுதுறைகளிலும் இலங்கைக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப ரீதியான உதவிகளை வழங்கி வருகின்றது என்று உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் மாதவ தேவசுரேந்திர தெரிவித்தார்.
2018 மற்றும் 2019 ஆம் கல்வியாண்டுக்குரிய இலங்கை மாணவர்களுக்கான சீன அரசின் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு கொழும்பிலுள்ள சீன தூதரகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சீனாவின் பட்டுப்பாதைத் திட்டத்தில் இடம்பெறுகின்ற முக்கிய நாடாக இலங்கை உள்ளது. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இருநாடுகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட இறப்பர் அரிசி உடன்படிக்கையிலிருந்து பரஸ்பரம் இருநாடுகளுக்கிடையில் நல்லுறவு நிலவி வருகின்றது.
அம்பாந்தோட்டைத் துறைமுகம், மத்தள வானூர்தி நிலையம், துறைமுக நகரம், அதிவேக நெடுஞ்சாலை என்பன சீனாவின் உதவியுடன் அமைக்கப்பட்டவை. தற்போது அமைக்கப்பட்டு வருகின்ற தாமரைக்கோபுரம் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நினைவுச்சின்னமாக எப்போதும் திகழும் - என்றார். (4)

1000 சிசிக்கும் குறைந்த

# வாகனங்களுக்கு மேலதிக வரி விலக்கு

### இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 8
1000 சிசிக்கும் குறைந்த திறனுடைய வாகனங்களுக்கு அறவிடப்படும் மேலதிக வரியை விலக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது என்று இராஜாங்க அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
1000 சிசிக்கும் குறைவான திறனுடைய அனைத்து மோட்டார் வாகனங்கள் மற்றும் ஹைபிரிட் வாகனங்களுக்கு அறவிடப்படுகின்ற தீர்வைவரியை அதிகரிக்க கடந்த 15 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய என்ஜின் திறன் 1000 சிசிக்குக் குறைவான வாகனங்களின் இறக்குமதி வரி 1.5 மில்லியன் ரூபாவாகவும், ஹைட்பிரிட் மற்றும் மின்சார வாகனங்களின் வரி 1.2 மில்லியன் ரூபாவாகவும் திருத்தம் செய்யப்பட்டது.
கடந்த காலப்பகுதியில் இலங்கையில் இந்த மோட்டார் வாகனங்களின் இறக்குமதி அதிகரித்த நிலையிலேயே நிதி அமைச்சு இந்த தீர்மானத்தை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

கொழும்பு நகரில்

# சனசமூக நிலையங்களுக்குப் பதிலாக சேவை மைய நிலையங்கள் அமையும்

### மாநகர முதல்வர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 8
கொழும்பு நகரில் காணப்படும் சனசமூக நிலையங்களுக்குப் பதிலாக பெரியளவிலான சேவை மைய நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என்று கொழும்பு மாநகர முதல்வர் ரோஸி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த புதிய சேவை மைய நிலையங்களின் ஊடாக மூத்தவர்கள், மாற்றுத்திறனாளிகள், சிறுவர்கள், பெண்கள், இளைஞர்கள் ஆகியோருக்கு அவசியமான சேவையை வழங்க எதிர்பார்க்கிறேன்.



மருத்துவ சிகிச்சைப் பிரிவு, உடற்பயிற்சிப்பிரிவு, வாசிகசாலை, நிகழ்வுமண்டபம் உட்படச்சகலவசதிகளும் இதில் அடங்கும்.
இந்தச்சேவை மைய நிலையங்களை நிர்வகிக்கும் பொறுப்பு பொதுமக்களுக்கு வழங்கப்படவிருக்கிறது. கொழும்பு நகரில் இவ்வாறான 15 சேவை நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன - என்று தெரிவித்தார். (4)

# எம்.பிக்களின் சம்பள அதிகரிப்பு: எந்தயோசனையும் இன்னுமில்லை

## தலைமை அமைச்சர் ரணில் தெரிவித்தார்



கொழும்பு, ஓக. 8

நாடாளுமன்ற உறுப்பினர்களதுசம்பளஉயர்வுதொடர்பில் எந்தவித யோசனையும் தனக்கோ அல்லது அமைச்சரவைக்கோ முன்வைக்கப்படவில்லையென்றுதலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களது பணியக செலவீனங்கள் அதிகரித்துக்காணப்படுகின்றனஎன்றும்அதற்கான தீர்வொன்றை விரைவில் பெற்றுக்கொடுக்கவேண்டுமெனவும் ரணில் இதன் போதுயோசனையொன்றை முன்வைத்துள்ளார்.

சில மாதங்களுக்கு முன்னரே இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் தான் முன்மொழிந்தேன் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த யோசனை முன்வைக்கப்படும் சந்தர்ப்பத்தில்கலந்துரையாடல்களை மேற்கொண்டு தீர்மானம் ஒன்றுக்கு வரமுடியும் என்று ரணில் குறிப்பிட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து இடம்பெற்றகட்சித்தலைவர்கள்கூட்டத்தில்இந்தவிடயம் தொடர்பில் எந்தக் கருத்துகளும் முன்வைக்கப்படவில்லை என்று ரணில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சபாநாயகரிடம் வினவிய போது இவ்வாறான எந்தவொரு தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லையென்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது. (4)

# இனங்களின் நல்லிணக்கத்துக்கு நாடாளுமன்றக் குழு அமைப்பு!

## சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவிப்பு



**கொழும்பு, ஓக. 8**

**நாடாளுமன்றுக்கு அறிவித்த பின்னர், இன நல்லிணக்கத்துக்கான நாடாளுமன்றக் குழு இந்த மாதம் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படும். இந்தக் குழுவின் ஊடாக நாட்டின் நல்லிணக்கத்தைப் பாதுகாக்கும் பணியை முன்னெடுத்துச் செல்வோம் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.**

இன, மத சகவாழ்வின் ஊடாக நிலையான நாடு என்ற தொனிப்பொருளின் கீழ் சிறப்பு மாநாடொன்று, கண்டி மகாவலிரீச்ஹோட்டலில்நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. சபாநாயகர்கருஜயசூரிய தலைமையில்அதுநடைபெற்றது. இந்த மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தமாநாட்டில்எதிர்க்கட்சித்தலைவர் இரா. சம்பந்தன், மதத் தலைவர்கள், அமைச்சர்கள், சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்கள், பொலிஸ்மா அதிபர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

அதில்உரையாற்றுகையில்சபாநாயகர் கருஜயசூரியமேலும்தெரிவித்ததாவது:

நாம் ஒருபோதும் எதிர்பாராத சம்பவம் கண்டியில்இவ்வாண்டுநடந்தேறியது. இதனால்நாட்டில்நிலையானபோக்குக்குப் பாதிப்பு ஏற்பட்டது. கண்டியில் இன வன்முறை நடைபெற்றபோதும் அதனைக்கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவருவதற்கு நாடாளுமன்றம் நேரடியாகத் தலையிட்டது. இதன்படி கட்சி, பேதம் பாராமல் அனைவரும் வன்முறை பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்றனர். அதுமாத்திரமின்றிக் கட்டுப்பாடுகள் கொண்டுவருவதற்காக அஸ்கிரிய மற்றும்மல்வத்துபீடங்களைசந்தித்துப் பேசினோம். இனிமேலும்இவ்வாறான சம்பவம்நடக்காமல்இருக்கும்முகமாக சிறப்பு மாநாடொன்றையும் நடத்தினோம்.

இதன்படி முதலாவது மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் தேசிய நல்லிணக்கத்துக்காக நாடாளுமன்றக் குழுவொன்றை அமைக்கத் தீர்மானித்தோம். இன, நல்லிணக்கம் தொடர்பான நாடாளுமன்றக் குழு தொடர்பாக இந்தமாதம் நாடாளுமன்றுக்கு அறிவித்த பின்னர் உத்தியோகபூர்வமாக இந்தக் குழு நிறுவப்படும். இந்தக்குழுவில்அனைத்துக்கட்சியினரையும் இனத்தவர்களையும்பிரதேசத்தவர்களையும்உள்ளீர்ப்போம். இந்தக் குழுவின்ஊடாகப் பலமான இனநல்லிணக்கத்தை ஏற்படுத்த முன்னேறிச் செல்வோம்.

கண்டியில் நடைபெற்ற சம்பவத்தை மக்களின் மனங்களில் இருந்து நீக்குவதற்கான வழிவகைகளை நாம் செய்ய வேண்டும். நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது அத்தியாவசியம். இதனூடாக நிலையான நாட்டை எம்மால் உருவாக்கமுடியும். நல்லிணக்கத்தை நாம் பாதுகாக்க வேண்டும். அடிப்படை உரிமைகள் மீறப்படுவதன் காரணமாகவே நாட்டில் நல்லிணக்கத்துக்குப் பாதிப்புகள் ஏற்படுகின்றன. நல்லிணக்கம் இல்லாமல் போனால் நாட்டில் நிலையான தன்மைக்குப் பாதிப்புகள் ஏற்படும்.

ஆகவே தேசிய நல்லிணக்கத்துக்குக் கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இதன் ஊடாக நிலையானநாட்டைஉருவாக்கவேண்டும் - என்றார். (4.61)

# பொலிஸாரால் தேடப்பட்ட முக்கிய நபர் கைதானார்

கொழும்பு, ஓக. 8

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில், கொலன்னாவையைச் சேர்ந்த பொடிவிஜே என அழைக்கப்படும் ஹேவா தந்தரலாகே சிசிர குமார நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினர் அவரைக் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.


பொலிஸ்அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலேயேபொடிவிஜேகைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்துவாள்ஒன்றுகைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த சந்தேகநபர் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வு, கொள்ளைச்சம்பவங்கள் மற்றும் போதைப் பொருள் வியாபாரம் என்பவற்றுடன் தொடர்புபட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர் என்றும்தெரிவிக்கப்பட்டது.

அவர்மேலதிக விசாரணைகளுக்காகவெல்லம்பிட்டியபொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அவர் வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்றகொலைச்சம்பவமொன்றுடன் நெருங்கிய தொடர்புபட்டிருந்தார் என்ற குற்றத்துக்காக 3 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலை பெற்றவர் என்று தெரிவிக்கப்பட்டது. (4)




கேலிச்சித்திரம்

(நன்றி: டெய்லிமிரர்)

# இரண்டு தொடருந்துகள் மோதின 4பேர் அதிரடியாகப் பணிநீக்கம்

கொழும்பு, ஓக. 8

கொழும்பு கோட்டையிலிருந்து கண்டி நோக்கிப் புறப்பட்ட செங்கடகலமெனிக்கேதொடருந்துமீது, கொழும்பு கோட்டையிலிருந்துரம்புக்கனைவரைசென்றகடுகதி தொடருந்துமோதியுள்ளது. அதனால்கடுகதிதொடருந்தில் பணியில் இருந்த 4 பேர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை இவை மோதியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, ரம்புக்கனை தொடருந்துசாரதி, சாரதி உதவியாளர், தலைமைக் கட்டுப்பாட்டாளர் மற்றும் உப கட்டுப்பாட்டாளர் ஆகியோரே பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

செங்கடகளமெனிக்கேதொடருந்துபேணலியபகுதியில் சமிக்ஞை இன்றி நிறுத்திவைக்கப்பட்டிருந்த வேளையில்பின்னால்சென்றரம்புக்கனைதொடருந்துமோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனால் சுமார் 32 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

# ஞானசார தேரருக்குச் சுகவீனம்: மருத்துவமனையில் சிகிச்சை

கொழும்பு, ஓக. 8

கலகொட அத்தே ஞானசார தேரர் நோய் நிலைமை காரணமாக சிறிஜயவர்தனபுர மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிறுநீரக நோய் காரணமாக அவர் மருத்துவமனையில்சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஞானசார தேரருக்கு இதற்கு முன்னர் இருமுறை சிறுநீரக சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது தீவிரமடைந்ததில் இவ்வாறு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை அவரின் நோய் நிலைமை தொடர்பில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2006ஆம்ஆண்டுகளுபோவில மருத்துவமனையிலும் இந்தியாவின் மருத்துவமனையொன்றிலும் இவருக்குச்சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (4)

# சீராக்கக் கொடுத்த நகைகள் போலியாக மாற்றப்பட்டனவா?

## தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்ட வழக்கு

யாழ்ப்பாணம், ஓக. 8

திருத்தவேலைகளுக்காகக்கொடுக்கப்பட்டதாலி மற்றும் சங்கிலி என்பனவற்றை வாங்கியவர் போலியான (தங்கம் அல்லாத) உலோகத்தில் நகைகளைச்செய்து வழங்கியமை தொடர்பான வழக்கு ஒன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு வந்துள்ளது.

இதுதொடர்பானவிசாரணைகள்நிறைவடைந்த நிலையில் அது தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

2012ஆம்ஆண்டுபழுதுவேலைகளின்திருத்தத்துக்காக 2இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதி கொண்ட தாலிக்கொடி மற்றும் சங்கிலி என்பன வழங்கப்பட்டன. அதனைப்பெற்றுக்கொண்டவர் அவற்றைப்போன்று நகைகளைப் போலியாகத் தயாரித்து அதன் உரிமையாளருக்கு வழங்கியுள்ளார்.

அதுகுறித்துயாழ்ப்பாணம்பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டிருந்தது. குறித்தவழக்கு சம்பந்தமான விசாரணை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நீதிவான் சி. சதீஸ்தரன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விளக்கத்துக்காக எடுக்கப்பட்டது.

வழக்கின் சாட்சியாக குறித்த சம்பவம் இடம்பெற்றபோது பொலிஸ் சார்ஜனாகக் கடமையாற்றிய பொலிஸ்அதிகாரிமற்றும்வழக்கைக்கையாண்ட பொலிஸ் அதிகாரி ஆகியோர் மன்றில் சாட்சியமளித்தனர்.

அவர்களது சாட்சியத்தில், யாழ்ப்பாணம் பிறவுண் வீதியைச் சேர்ந்த குறித்த நகைகளின் உரிமையாளர், திருத்தத்துக்காகக் கொடுத்த நகைகளைக் கொக்குவில் பகுதியைச் சேர்ந்தவர் பெற்றுக்கொண்டுள்ளார். மீண்டும் அவை திருத்தப்பட்டுள்ளன என்றுகூறி போலியான நகைகளை வழங்கியுள்ளார் என்று முறைப்பாடு செய்யப்பட்டது. இதனை விசாரிப்பதற்காகக் குற்றவாளிக் கூண்டில் இருந்த நபரைக் கைதுசெய்தேன் என்றுகூறி எதிரியை அடையாளம் காட்டி, சாட்சியமளித்தார். போலி நகைகளாகப் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்ட நகைகளையும் அடையாளம் காட்டினர்.

கையளிக்கப்பட்ட நகைகள் போலியானவை என்பதை உறுதிப்படுத்துவதற்காகத் தேசிய ஆபரண அதிகாரசபைக்குப்பரிசோதனைகளுக்காக அனுப்பப்பட்டு அவை போலியானவை என்று உறுதிப்படுத்தப்பட்டு அறிக்கை வழங்கப்பட்டுள்ளதாகவும் மன்றில் கூறப்பட்டது.

சந்தேகநபராக இனங்காணப்பட்டு எதிரிக்கூண்டில் இருந்தவரை மன்றுரைக்குமாறு கூறப்பட்டபோது, தன்னைப் பொலிஸார் கைது செய்யவில்லைஎனவும்தானாகவேபொலிஸ்நிலையத்துக்குச் சென்றதாகவும் தெரிவித்தார்.

தனக்கு எதிராக முறைப்பாடு செய்தவர்களிடமிருந்துஎந்தவொருநகைகளையும்தான்பெறவில்லையெனவும் அவர்களும் தனக்கு எந்தவொரு நகையையும் தரவில்லை எனவும் தெரிவித்தார்.

அனைவுஉட்படவழக்கின்நிலைமைகளை ஆராய்ந்த நீதிவான், இந்த வழக்கின் தீர்ப்பை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 30ஆம்திகதி வழங்குவதாகத் தெரிவித்து வழக்கை ஒத்திவைத்தார். (4,114)

# 'ஈ-உள்ளூராட்சி' என்னும் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ள உள்ளூராட்சி சபைகள்

யாழ்ப்பாணம் ஓக. 8

**உள்ளூராட்சி சபைகளை 'ஈ – உள்ளூராட்சி' என்னும் நிகழ்ச்சித் திட்டத்தினை நடுவண் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு மேற்கொள்ளவுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றங்களினால் மக்களுக்காக ஆற்றப்படுகின்ற சேவைகளை வினைத்திறனுடனும் மக்களுக்கு சாதகமானவாறும் மேற்கொள்வதற்காக தகவல் தொழில்நுட்பத்தை உச்ச அளவில் பயன்படுத்திக் கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.**

அதற்கமைய மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு, தொலைத்தொடர்புகள் டிஜிற்றல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, ஆகியன இணைந்து இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தப்படவுள்ளன எனவும் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

'ஈ - உள்ளூராட்சி' நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் நாட்டில்உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும்சம்பந்தப்படல் வேண்டும் என்பதால், அனைத்துஉள்ளூராட்சிமன்றங்களும், 'ஈ - உள்ளூராட்சி' முறைமையில்உள்ளபணிகளுக்குள்இணையவேண்டும். இதற்கு மாற்று கணினி மென்பொருள்களைப் பயன்படுத்தக்கூடாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் செயன்முறையை மீள் உருவாக்கல், அதற்குத் தேவையான சட்ட திருத்தங்களை மேற்கொள்ளுதல், உள்ளூராட்சி மன்றங்களில் பயன்படுத்துவதற்கென கணினி மென்பொருள் முறைமையொன்றை அறிமுகம் செய்தல், மக்களுக்கு சாதகமான சேவையைப் பெற்று கொடுப்பதற்கு, உள்ளூராட்சிமன்றங்களுக்கு முன்னரங்கு அலுவலகம் மற்றும் வாடிக்கையாளர் சேவை நிலையம் என்பவற்றை அறிமுகம் செய்தல், இணையத் தளம் மூலம் கொடுப்பனவு செய்யும் முறையை அறிமுகம் செய்தல், இணையத்தளம்மற்றும் கையடக்கத் தொலைபேசி ஊடாகச்சேவைகளைப்பெற்றுக் கொடுக்கும் வசதிகளை ஏற்படுத்தல், உள்ளூராட்சி மன்ற பதவியணியை பயிற்றுவித்தல் (ஆரம்ப தகவல் தொழில்நுட்பம் முறைமை நிருவாகம் வாடிக்கையாளர் சேவைகளை வழங்குவது தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சி திட்டங்கள்) சகல உள்ளூராட்சி மன்றங்களையும், மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்கள் ஊடாக உள்ளூராட்சித் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்புச் செய்தல், மேலே குறிப்பிடப்பட்ட மாற்றங்களை மேற்கொள்வதற்கு உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவது, மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு மாகாண மட்டத்தில்உள்ளூராட்சிஅலகுகளை உள்ளூராட்சிதிணைக்களங்களை மையமாகக் கொண்டு நிறுவுதல், தேவையான முறைமைகளை மேம்படுத்தல் பேணி வருதல், மற்றும் பராமரிப்புச் செய்தல் ஆகியபணிகளைமேற்கொள்ளல் போன்றவை உள்ளடக்கப்படுகின்றன. உரிய எல்லாச் சந்தர்ப்பத்திலும் இணையத்தளம் ஊடாக, கொடுப்பனவுகளைச்செலுத்தல், இணையத்தளம் ஊடாக சேவைகளுக்கு விண்ணப்பித்தல், இணையத்தளம் ஊடாகத் தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல், மற்றும் பெற்றுக் கொள்ளல், 2006இன்15ஆம்இலக்கஇலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் மற்றும் அதற்குச் சமாந்தரமாக வெளியிடப்பட்டுள்ள 447 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கைமூலம்முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய உள்ளூராட்சி மன்றங்களும் தமது சேவைகள் மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்மற்றும்கொடுப்பனவுகளை இணையத்தளம் ஊடாகமேற்கொள்ளும்வாய்ப்பைத் தமது மக்களுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

என மாகாண சபைகள் உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலர்கமல்பத்மசிறிசுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (9)

# உமையாள்புரம் வயல்வெளிகளில் திருட்டு மண் அகழும் செயற்பாடு

கிளிநொச்சி, ஓக 8

உமையாள்புரம்பகுதியில்உள்ளவயல்களில்சட்டவிரோத மண் அகழும் தொழில்அதிகரித்துள்ளதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். பல்வேறு தரப்பினருக்கும் பல தடவை அறிவித்தும் உரிய தரப்பினர் உரிய நடவடிக்கைகளைஎடுக்கவில்லைஎனமக்கள்கவலையடைந்துள்ளனர்.

உமையாள்புரம்பகுதியில்யாழ்-கண்டிவீதியில்164கிலோமீற்றர் பகுதியில் ஏ-9வீதிக்குகிழக்குப்பக்கமாகஉள்ளவயல் வெளிகளில்பெரியஅளவில்கள்ளமண்அகழ்ந்துவிற்பனை செய்யப்படுகின்றது. வயல்வெளிகளில்பகலில்உளவுஇயந்திரம் மூலம் மண் அகழப்பட்டு ஏ9 வீதிக்கு அருகில் உள்ள பற்றை காடுகளுக்குள் பறிக்கப்பட்டு இரவு வேளைகளில் டிப்பர் மூலம் மண் ஏற்றப்பட்டு வெளியே எடுத்துச் செல்லப்படுகின்றது. மண் அகழ்வு, திருட்டு வியாபாரம் இப்பகுதியில் குடியிருக்கும் நபர்களின் தலைமையில் பெரிய அளவில் நடைபெறுகின்றது.

உமையாள்புரம் பகுதி வயல் நிலங்கள் ஏங்கனவே உவர்நிலங்கள் என்பதனால் வயல் நிலங்களில் மண் அகழ்வதனால் வயல்நிலங்கள் உவர்நிலங்களாக மாறுவதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளதாக விவசாய துறைசார் நிபுணர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இவ்வாறாக தொடர்ந்தும் சட்டவிரோத மண் அகழ்வு நிகழுமானால்வயல்நிலங்கள்உவர் நிலங்களாகிவிடும். எதிர்காலத்தில்வயல்செய்யமுடியாத நிலைதோன்றும். ஆயுதம்தாங்கி மக்கள் அமைப்பைச்சார்ந்த சிலஉறுப்பினர்களேதிருட்டுமண்வியாபாரத்திலும் ஈடுபட்டுள்ளனர் என்பது கவலைதரும்விடயமாக உள்ளது.



இந்தப் பகுதியில் இல்லாத காணி உரிமையாளர்களின் வயல்களில் சட்டவிரோத மண் அகழ்வு நிகழ்கின்றது.

உமையாள்புரம் பகுதியில் நடைபெறுகின்ற பெரிய மண் வியாபாரத்தில் சில அரச அதிகாரிகள் கையூட்டு பெறுவதனால் இதனைத் தடுக்க முடியாது உள்ளதாக, அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். சமூக ஆர்வலர்கள், துறைசார் அதிகாரிகள் கூட்டிணைந்துகிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் நடைபெறுகின்ற சட்டவிரோத மண் வியாபாரத்தைத் தடுக்க முன்வருமாறு அந்தப் பகுதி மக்கள் கோருகின்றனர்.

*பாவனையாளர் அதிகார சபையின்*

# யாழில் 312 வழக்குகளில் ரூ.141/2இலட்சம் தண்டம்

யாழ்ப்பாணம், ஓக. 8

யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர் அதிகாரசபையால் 312 வழக்குகளில் 14 லட்சத்து 43 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது என்றுசபையின் வடக்கு மாகாண உப பொறுப்பதிகாரி சாதிக் தெரிவித்தார்.

இந்தவருடம் கடந்த ஜூலை மாதம் வரை வர்த்தகர்களுக்கு எதிராக 348 வழக்குகள் நீதிவான்நீதிமன்றங்களில்தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பாவனையாளர் அதிகார சபை இந்தவருடம் நடத்திய சுற்றிவளைப்புகள், முறைப்பாட்டின் அடிப்படையிலான விசாரணைகளில் கடந்த ஜூலை மாதம் வரை 348 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**பாவனையாளர் முறையிடலாம்**

வியாபாரிகள் மற்றும் சேவை வழங்குநரால் பாவனையாளர்கள் ஏமாற்றப்பட்டாலோ தவறானவழியில்நடத்தப்பட்டாலோ பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திடம்முறைப்பாடுகளைப் பதிவு செய்யமுடியும். முறைப்பாட்டுடன் தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் ஆதாரங்கள் உள்ளடங்கிய எழுத்து மூல முறைப்பாடு சம்பவம் இடம் பெற்ற தினத்திலிருந்து 3 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கவேண்டும். இல்லாவிடில் இந்த விடயம் சம்பந்தமாக பாவனையாளர் தொலைபேசிஇலக்கமான1977 அல்லது 0212219001 என்ற இலக்கத்துடன்தொடர்புகொண்டு முறைப்பாடுகளைப் பதிவு செய்யமுடியும்.

இதன்மூலமாக இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதுடன்பண்டங்களை மாற்றவோ, பழுதுபார்க்கவோ, பண்டத்துக்குச் செலுத்திய பணத்தை மீளப்பெறவோ முடியும். வியாபாரிகளும் விற்பனையின்போது பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் அடிப்படையில் விற்பனைகளை மேற்கொள்வதுடன் விற்பனையின்போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகளைக் காப்பாற்ற வேண்டும். சகல மின்சாதனப்பொருள்களுக்கும் குறைந்தது 6 மாத கால உத்தரவாதம் அளிக்க வேண்டும். அதே வேளை உத்தரவாதத்தின் போது அளிக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். சகல பொருள்களுக்கும்விலைப்பட்டியல் இடப்பட்டிருக்க வேண்டும். பொருள்களின் உற்பத்தித் திகதி, முடிவுத் திகதி என்பன சரியான முறையில் பொறிக்கப்பட்டிருத்தல்வேண்டும். பதுக்கல், ஏமாற்றுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்த்தல் வேண்டும். பழுதடைந்த பொருள்களைக்காட்சிப்படுத்தல் விற்பனை செய்தல் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் -என்றுஅவர் மேலும் தெரிவித்தார். (4)

# ஊர்காவற்றுறையில் கடற்படை தண்ணீர் எடுப்பதற்குத் தடை

## பிரதேச சபையில் பிரேரணை நிறைவேற்றப் பட்டது

**யாழ்ப்பாணம் ,ஒக. 8**

**ஊர்காவற்றுறைபிரதேசசபையின்எல்லைக்குட்பட்ட மண்குழிப் பிரதேசத்தில் மக்கள் பயன்பாட்டில் உள்ள நன்னீர் கிணறுகளில் இருந்து கடற்படையினர் தண்ணீர் எடுப்பதை தடைசெய்வது தொடர்பாக பிரதேச சபையின் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் எ.ஞா. லக்ஸ்மனினால் முன்வைக்கப்பட்ட பிரேரணை ஏற்றுக் கொள்ளப் பட்டு ஊர்காவற்றுறை பிரதேச சபையின் 6 ஆவது சபைக் கூட்டத்தில்ஏகமனதான தீர்மானமாகநிறைவேற்றப்பட்டது.**

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று சபை மண்டபத்தில் தவிசாளர் ம. ஜெயகாந்தன் அவர்களின்தலைமையில்இடம்பெற்றது.

இந்த அவமர்வில்நிறைவேற்றப்பட்ட பிரேரணை தொடர்பாக மேலும்தெரியவருவதாவது,

மண்குழி பிரதேசத்தில் காணப்படுகின்ற நன்னீர் கிணறுகளில் இருந்து கடற்படையினர்தினமும்பத்தாயிரம் லீற்றருக்கும்அதிகமானதண்ணீரை தங்கள்பயன்பாட்டுக்காகதண்ணீர்த் தாங்கிகளில் எடுத்துச் செல்வதனால் நிலத்தடிதண்ணீர் வற்றி உவர்தண்ணீராக மாற்றமடைந்து, மக்கள் பயன்பாட்டிற்கு இயலாத நிலைக்கு வருகின்றது.

இதனால் அப்பகுதியை சேர்ந்த மக்கள் தங்கள் அன்றாட தேவைகளுக்கான தண்ணீரைப் பெறுவதற்கு பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதுதொடர்பாகமக்கள்சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும், எதுவிதநடவடிக்கைகளும்எடுக்கப்படவில்லை.

இதனை கருத்தில் கொண்ட ஊர்காவற்றுறைபிரதேசசபையின், குறித்த பிரதேசத்தின் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் எ.ஞா. லக்ஸ்மன் அவர்களால்நேற்று முன்தினம் இடம்பெற்ற சபையின் மாதாந்த அமர்வில்பிரேரணை முன்வைக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப் பட்டது.

மேற்படி தீர்மானத்தின் பிரதிகளை ஊர்காவற்றுறை பிரதேச செயலர், ஊர்காவற்றுறை கடற்படை தளபதி, யாழ்ப்பாணம் மாவட்ட செயலர், வடமாகாண ஆளுநர் ஆகியோருக்கு அனுப்பிவைப்பதுஎனவும்தீர்மானிக்கப்பட்டது. (154)

# கூட்டத் தொடரில் கலந்து கொண்ட 11 உறுப்பினர்கள் வெளிநடப்பு

மன்னார் ,ஒக .8

மன்னார்பிரதேச சபையின் ஐந்தாவது கூட்டத் தொடர் இதன் தவிசாளர் சா.க.மு. முஜாஹீர் தலைமையில் நேற்று சபையின்கேட்போர் கூடத்தில்நடைபெற்றது.

இந்தச்சபையில்21அங்கத்தவர்கள் இருக்கின்றபோதும் ஒருவர் அவரின் குடும்பத்தில்மரணசடங்குநடைபெற்றமையால் கலந்து கொள்ளவில்லைஎனதெரிவிக்கப்பட்டதுடன், தவிசாளர் உட்பட மிகுதி இருபது உறுப்பினர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின்போது கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சம்பந்தமாக ஆராயப்பட்டபோது முதலில்மன்னார்பிரதேசசபை எல்லைக்குள் விற்பனை செய்யப்படும் மாட்டிறைச்சிக் கடைகளின்ஒப்பந்ததாரர்கள் குறிப்பிடப்பட்ட விலைக்குமேல்விற்பனை செய்வது தொடர்பாகவும், பின் மன்னார்த் தீவில் இடம்பெற்றுவரும்மணல் அகழ்வு தொடர்பாகவும் ஆராயப்பட்டபின் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் ய. இயூற் கொன்ஷன்குலாஸ்நான்கு கோரிக்கைகளை முன் வைத்துச்சபையில் உரையாற்றினார்.

அதாவதுசபைஅலுவலகத்துக்குள் சபைக்கு அப்பாற்பட்டவர்களின் தவறான புகைப்படங்கள்தொங்கவிடப்பட்டுள்ளதை கடந்தகூட்டத்தில் எதிர்த்தும் , அவைகள் இன்னும் அகற்றபடாமல் இருப்பதாகவும்,

எங்களால்இந்தச்சபையில் முன் வைக்கப்படும் தீர்மானங்கள் கவனத்தில்கொள்ளப்படாமல் இருந்து வருவதாகவும், பிற்பகல் ஐந்து மணியுடன் அலுவலக கடமைகள்முடிவுறுகின்றபோதும், தவிசாளர் இரவு எட்டு மணிவரைஇந்தப்பிரதேச சபை அலுவலகத்தில் இருந்து வெளியாட்கள் மற்றும் அவரின் கட்சி சார்ந்தவர்களுடன் உரையாடுவதை தவிர்க்க வேண்டும் எனவும்

இந்தச் சபை ஆரம்பித்து இது வரைக்கும் உபகுழுக்கள்நியமிக்கப்படவில்லை எனவும் தெரிவித்ததுடன் தான் இந்தச் சபை கூட்டத் தொடரிலிருந்து வெளியேறுவதாக தெரிவித்து வெளியேறினார்.

இதைத் தொடர்ந்து கூட்டத்தில்கலந்துகொண்டதமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஆறு பேரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலுள்ளஇருவரும், முஸ்லீம் கட்சியிலிருந்து இருவரும் மொத்தம்பத்துஉறுப்பினர்கள் மேற்கூறப்பட்ட விடயங்களைஆதரித்துதாங்களும் வெளியேறுவதாக தவிசாளருக்கு தெரிவித்து சபையை விட்டு வெளியேறினர். ஆனால் எங்கள் கட்சி சார்ந்தவர்கள் வெளியேறும்போது நாங்கள் விரும்பியோ விரும்பாமலோகட்சிக்கொள்கைக்கு சார்ந்து செயல்படவேண்டியவர்களாகவே இருக்கின்றோம் என தெரிவித்து விட்டு சென்றதையும் காணக்கூடியதாகஇருந்தது.

இவர்கள் 11 பேரும் சபையை விட்டு வெளியேறியபோதும் நிகழ்ச்சி நிரலுக்குஏற்பசபைதொடர்ந்து நடைபெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. அடுத்தக் கூட்டம்அடுத்தமாதம்ஆறாந்திகதி மீண்டும் கூடும் என தீர்மானிக்கப்பட்டது. (7-60)

# யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் 19 பனைசார் உற்பத்தி சங்கங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக.8

பனை அபிவிருத்திச் சபை யாழ்ப்பாணம், மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பனை சார் உற்பத்தி சங்கங்களை ஆரம்பித்து வைத்துள்ளது. தற்போது முதற்கட்டமாக யாழ்ப்பாணத்தில் பதினொன்றும் கிளிநொச்சியில் எட்டுமாக மொத்தம் 19 பனைசார் உற்பத்தி சங்கங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பருத்தித்துறை சிங்கநகர், புலோலி தெற்கு, வரணிவடக்கு, புங்குடுதீவு, வேலணை, வரியுரகுறிச்சி, காரைநகர்வலந்தலை, மறவன்புலவு, புளியங்கூடல், இமையாணன், மட்டுவில், ஆகிய இடங்களும் கிளிநொச்சிமாவட்டத்தில்பளைமாசார், முட்கொம்பன் பூநகரி, முட்கொம்பன் கண்ணகைபுரம், கௌதாரிமுனை, ஊரியான், கரைச்சி சிவபுரம், பழைய கச்சேரியடிகிளிநொச்சி, பளை போன்ற இடங்களில்இந்தப்பனைசார்உற்பத்தி சங்கங்கள் அமைக் கப்பட்டுள்ளன.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் இந்த பனைசார்உற்பத்திசங்கங்கள்அமைக்கப்பட்டு அவை பனை அபிவிருத்திச் சபையில் பதிவு செய்யப்படும் என்று, பனை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

இந்த பனை சார் உற்பத்தி சங்கங்கள் ஊடாகவேபனம்உற்பத்திபொருள்கள் கூடுதலான உற்பத்தி செய்யப்படும். இந்த சங்கங்களுக்கான உதவிகள், ஆலோசனைகள், பயிற்சிகள் போன்றவற்றை பனை அபிவிருத்தி சபை மேற்கொள்ளும். குறிப்பாக வடக்கு மாகாணத்தில் முதற்கட்டமாக நாற்பதுக்கும் மேற்பட்டசங்கங்கள்அமைக்கப்படவும் உள்ளன. (17)

# கிளி . பொதுச்சந்தை தொடர்பில் தெளிவு படுத்தும் துண்டுப்பிரசுரம்

கிளிநொச்சி ,ஒக. 8

கிளிநொச்சிபொதுச்சந்தை தொடர்பில்அரசஉத்தியோகத்தர்களுக்குத் தெளிவு படுத்தும்துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பொதுச் சந்தைக்குபுதிதாகஅமைக்கப்படவுள்ள மூன்று மாடிகளை கொண்ட புதிய சந்தைக் கட்டடம் தொடர்பில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு தெளிவு படுத்தும் வகையில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை கிளிநொச்சி பொதுச் சந்தையின் வர்த்தகர்கள் மாவட்டத்தில் உள்ள மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம், உள்ளிட்ட திணைக்களங்களுக்கு முன்னால் நின்ற வர்த்தகர்கள் அலுவலகத்துக்கு வரும் பணியாளர்களிடம் தங்களின் நிலைமைகளை எடுத்துக் கூறும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.

குறித்த துண்டுப் பிரசுரத்தை விநியோகித்தவர்த்தகர்கள் கருத்து தெரிவித்த போதுபல்வேறுசந்தர்ப்பங்களில்பலகாரணங்களால் மிகவும்பாதிப்புக்குள்ளான வர்த்தகர்களாகிய எங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குப் பதிலாக தோல்வியடைந்த திட்டத்தை எங்கள் மீது திணிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகிறது என்றும் ,நாட்டின் பல மாவட்டங்களில் சந்தை மாடிக் கட்டடங்கள் தோல்வி அடைந்த நிலையில், கிளிநொச்சியில் எங்கள் மீது அந்த திட்டத்தை திணிக்கின்றார்கள் என்றும் எனவே வர்த்தகர்களின் நலனுக்குப் புறம்பான இந்தச் செயற்பாடுகளை தெளிவுப்படுத்தும் நோக்கில் இவ்வாறு துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதாகக் குறிப்பிட்டனர். (214)

# சமுர்த்தி ஊடாக 10 தொழில் முயற்சியாளர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஒக. 8

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொருகிராமசேவகர் பிரிவிலும் சமுர்த்திக் கடன் திட்டத்தின் ஊடாக 10 தொழில் முயற்சியாளர்களை தெரிவு செய்வதற்கான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகயாழ்ப்பாணமாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தில் சமுர்த்தித் திணைக்களம்ஊடாககிராமஅலுவலர்பிரிவிலிருந்து 10 சுய தொழில் முயற்சியாளர்களுக்கு பத்து இலட்சம் ரூபா பெறுமதியான கடன் திட்டம் வழங்கப்படவுள்ளது.

இந்த கடன் திட்டத்தினை யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் வருகை தந்திருந்த கொழும்பு சமுர்த்தி அமைச்சர் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில்கடன் திட்டத்தின் ஆரம்ப பணியாக ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும்சுயதொழில்முயற்சியாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி ப் பணியாளர்கள், சமுர்த்திப் பணியாளர்கள் ஆகியோர் களமிறங்கியுள்ளனர்.

ஒவ்வோர்கிராமத்திலும்சுயதொழில்ஆர்வம்உள்ளவர்களைஇனம்கண்டுஆய்வு செய்துவருகின்றனர்.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் இருந்துதெரிவுசெய்யப்படும்சுயதொழில் முயற்சியாளர்களுக்கு 10 இலட்சம் ரூபா பெறுமதியான கடன் திட்டம் வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (8)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு ரூ. 470 இலட்சம் செலவில் புதிய விடுதி

அச்சுவேலி, ஒக.8

கோப்பாய் ஆசிரியப்பயிற்சிக்கலாசாலையின் மாணவர் விடுதி 470 இலட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்படவுள்ளது.

சமையல் கூடம் மற்றும் வசதிகளுடன் கூடியதாக, மூன்று மாடிகளைக் கொண்டதாக மாணவர்களுக்கான விடுதி அமைக்கப்படவுள்ளது.

புதிய விடுதி கட்டுமானத்துக்கான நிதி ஒதுக்கீட்டை நடுவண் அரசின் கல்வி அமைச்சு செய்துள்ளது.

இராணுவ நடவடிக்கை மற்றும் 1995 ஆம் ஆண்டு வலிகாமம் இடப்பெயர்வுக்குப் பின்னர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவர் விடுதி பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதமடைந்தது. கடந்த 22 வருடங்களுக்கு மேல் விடுதி பயன்படுத்தப்படாமல்இருந்துவந்தது.

ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெறும்ஆசிரியமாணவர்கள்ஆசிரிய கலாசாலைக்கு அயலில் தனியார்வீடுகள்மற்றும்தங்குமிடங்களில்வாடகைசெலுத்தியேதங்கியிருந்து பயிற்சியை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தவகையில்ஆசிரியஉதவியாளர்களாக நியமனம்பெற்று அதன் பின்னர் இரண்டு வருடகால ஆசிரிய பயிற்சியை மேற்கொண்டுவரும்ஆசிரிய மாணவர்கள் தமக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புக் கொடுப்பனவில் கணிசமான தொகையை தங்குமிடத்துக்காகச் செலவு செய்து வருகின்றனர்.

கோப்பாய் ஆசிரியகலாசாலைக்கு வருகை தரும் அரசியல் தலைவர்கள்மற்றும்அதிகாரிகள், மாணவர் விடுதி அமைக்க ஏற்பாடுசெய்யப்படும் எனக் கூறி வந்தபோதிலும் நிறைவு செய்யப்படாத வாக்குறுதியாக இருந்து வந்தன.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விடுதி அமைக்கும் பணியின் முதலாம் கட்ட வேலைகள் நிறைவடைந்த பின்னர் மேலும் இரண்டாம் மூன்றாம் கட்டங்களாக விடுதிக் கட்டுமானப் பணிகள் நடைபெறும் என உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் ஆசிரிய கலாசாலை விடுதி புதிதாகஅமைக்கப்படுவதுஆசிரிய கலாசாலைச் சமூகத்தினர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை 1922ஆம்ஆண்டுகாலப்பகுதியில் சேர்.பொன்.இராமநாதனின் முயற்சியால், கோப்பாய் சத்தியபாமா தோட்டத்தில் அமைக்கப்பட்டது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில்தற்போதுள்ள காலப்பகுதியில்60ஆசிரியர்கள்வரையில் பயிற்சி பெறக் கூடிய வளவசதிகள் உள்ளன.

ஆசிரியர் கலாசாலையை அரசு பொறுப்பேற்ற பின்னர் முதற்தடவையாக அரசினால் மாணவர் விடுதிக்கானகட்டுமாணப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனக் கூறப்படுகின்றது. (11)

# துன்ப துயரங்களை ஆராய அதிகாரத்துடன் கூடிய சபை

## உருவாக்க வேண்டும் என்கிறார் ஹக்கீம்



கொழும்பு,ஓகஸ்ட் 8

இன, மத, கலாசார ரீதியாகப் பாதிப்புக் குள்ளானவர்களின் துன்பங்கள், துயரங் களை ஆராயும் முக மாகமுழுஅதிகாரங் களுடன் கூடிய சிறப்பு அதிகார சபை யொன்றை உருவாக்க வேண்டும். இவ்வாறு அமைச்சர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

நிதி ஒதுக்கீடுகளுடன் கூடிய இனங்கள் தொடர்பான கொள்கையும் தயாரிக்க வேண்டும் என்றார்.

இன, மத சகவாழ்வின் ஊடாக நிலையான நாடு என்ற தொனிப்பொருளில் சிறப்பு மாநாடு நேற்று முன் தினம் கண்டியில், சபாநாய கர் கரு ஜயசூரிய தலைமை யில் நடைபெற்றது. இம் மாநாட்டில்கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரி வித்ததாவது, இன,மத,கலா சார ரீதியாகப் பாதிப்புக்குள் ளானவர்களின் துன்பங் களையும்,துயரங்களையும் ஆராய முழுஅதிகாரங்களு டன் கூடிய சிறப்பு அதிகார சபையை உரு வாக்கவேண்டும். இந்த நடைமுறை வெளிநாடுகளில் உள்ளன. நாமும் இந்த வழிமுறை யைப் பின்பற்ற வேண்டும்..இதன் ஊடாகப் பல்வேறு பிரச்சினை களுக்குத்தீர்வுகளைஇலகு வாகக்காண முடியும்.

நிதி ஒதுக்கீடுகளுடன் கூடிய இனங்கள் தொடர்பான கொள்கையொன்றும் தயா ரிக்க வேண்டும். இந்தக் கொள்கைகளை நடைமு றைப்படுத்தும் போது இன நல்லிணக்கத்தை உறுதிப் படுத்த முடியும். இந்த யோச னைகளைநாடாளுமன்றக் குழு தொடர்பான யோச னைகளில் உள்ளடக்க வேண்டும்என்றார்.

இந்த மாநாட்டில் எதிர்க்கட் சித் தலைவர் இரா.சம்பந் தன், மதத் தலைவர்கள், அமைச்சர்கள், சிறுபான் மைக்கட்சிகளின்தலைவர் கள், பொலிஸ் மா அதிபர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ரி2.61)

# தேர்தல் விரைவாக நடக்க அரசின் அழுத்தம் அவசியம்

## மகிந்த அணி கோரிக்கை



கொழும்பு,ஓகஸ்ட் 8

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்குத் தேர்தல் ஆணைக்குழு அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இவ்வாறு மகிந்த அணியின் தலைவர்கள் தேர்தல் ஆணைக் குழுவின்தலைவர்மகிந்ததேசப்பிரியவிடம்கோரிக்கைவிடுத்துள்ளனர்.

மகிந்த அணியின் முக்கிய உறுப்பினர் களான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், தினேஷ் குணவர்தன, மற்றும் வாசு தேவ நாணயக்கார ஆகியோர் நேற்று முன்தினம்மகிந்ததேசப்பிரியவைதேர் தல்ஆணையகத்தில்சந்தித்துமாகாண சபைத் தேர்தல் தொடர்ந்து தாமதிக்கப் படுவது குறித்துப் பேச்சு நடத்தினர். இதன்போது,நாடாளுமன்றஉறுப்பினர் தினேஷ்குணவர்தனகுறிப்பிடுகையில், தேர்தல்கள்நடத்தப்படாமல்மாகாணசபை கள்தெரிவுசெய்யப்படாமல்இருப்பதால் மாகாணங்களுக்கிடையில் பெரும் பிரச்சினைகள்தோற்றம்பெற்றுள்ளன. இதனால்மக்கள்சொல்லொணாத்துன் பங்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற னர். இவ்வாறான விடயங்களுக்கு அரசே-முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

இந்த நிலைமை தீர வேண்டுமாயின் மாகாண சபைத்தேர்தல்கள் துரிதமாக நடத்தப்பட வேண்டும். இதற்குத் தேர் தல்ஆணையகம்அரசுக்குத்தொடர்ந்து அழுத்தங்களைக்கொடுக்கவேண்டும். ஜனநாயக ரீதியில் தேர்தல் இடம் பெற் றால் தேர்தலின் பெறுபேறுகள் தமக்கு எதிராகவே கிடைக்கப் பெறும் என்ற காரணத்தினாலேயே அரசு தேர்தலைத் தொடர்ந்து பிற்போட்டுவருகின்றது.

எம் முறையில் மாகாண சபைத் தேர் தலை நடத்த வேண்டும் என்று புதிய பிரச்சினையை எழுப்பி விட்டுத் தொடர்ந்துதேர்தலைப்பிற்போடமுயற் சிகளை மேற்கொள்ளப்படுகின்றன.

புதிய தேர்தல் முறைமையை மகிந்த அணி ஆரம்பத்திலே எதிர்த்தது. ஆனால் அவ்வேளை அரச கட்சிகள் புதிய தேர்தல் முறைமைக்கு ஆதரவு வழங்கியது.

இன்று அரச கட்சிகளே புதிய தேர்தல் முறைமைக்குஎதிர்ப்பைவெளிப்படுத்தி வருகின்றன. இது தலைமை அமைச்ச ரின்அரசியல்கபடநாடகமாகவும்இருக் கலாம்.

அரசில் உள்ளவர்கள் மக்களுக்காக செயல்படவில்லை தேசிய அரசு தொடர்ந்து அதாவது 2020 ஆம் ஆண் டுக்குப் பின்னரும் தொடர வேண்டும் என்று ஜனநாயக முறைமைக்கு எதிரா கச்செயல்படுகின்றனர்.

தொடர்ந்துமாகாணசபைத்தேர்தலைப் பிற்போடுவதுசட்டத்துக்குமுரணானது. இதன் காரணமாக பெரும் சட்டப் பிரச் சினைஏற்படும். ஆகவேஎம்முறையில் தேர்தல் நடத்தினாலும் அதற்கு மகிந்த அணி முகம் கொடுக்கத் தயாராகவே உள்ளது. வழங்கியவாக்குறுதிகளுக்கு அமைய ஜனவரி முதல் வாரத்தில் மாகாணசபைத்தேர்தல்நடத்தவேண் டும் - என்றார். (ரி2.61)

# தேசத்தின் எதிர்காலத்துக்காக ஒன்றிணைய மைத்திரி அழைப்பு

கொழும்பு,ஓகஸ்ட் 8

பேண்தகு அபிவிருத்தி இலக்கை அடைதல் என்பது நாட்டையும் நாட்டு மக்களையும் வெற்றியை நோக்கிக் கொண்டு செல்வதாகும் என்பதுடன், நாட்டு மக்களின் எதிர்காலத்துக்காக அச்செயல்பாடுகளை நிறைவேற்ற அனைவரையும்ஒன்றிணையுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறி சேன அழைப்பு விடுத்துள்ளார்.

"பேண்தகுதொலைநோக்கை அங்கு ரார்ப்பணம் செய்தல் மற்றும் பேண் தகுகருத்தாய்வுவரைவைமக்களிடம் கையளிக்கும் நிகழ்வு" நேற்று முன்தி னம்கொழும்புபண்டாரநாயக்கஞாப கார்த்தபன்னாட்டுமாநாட்டுமண்டபத் தில் இடம்பெற்றது.

இதன்போதே, சகல அரசியல் தலை வர்கள், புத்திஜீவிகள், தனியார் துறை யினர், வர்த்தகர்கள் உள்ளிட்ட சகல துறை சார்ந்தோரையும் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட சகல இலங் கையர்களுக்கும் அரச தலைவர் அழைப்பு விடுத்தார்.

தேசிய பேண்தகு கருத்தாய்வுக்கான வரைவு, தேசிய பேண்தகு அபிவி ருத்திபற்றியநிபுணர் குழுவின்தலை வர்பேராசிரியர்மொஹான் முனசிங் ஹவினால் இதன்போது அரச தலை வரிடம்கையளிக்கப்பட்டது.

தேசிய பேண்தகு கருத்தாய்வு சகல மக்களின் கருத்துக்களையும் பெற் றுக்கொள்ளுஞ்செயல்திறனுடன்இயங்கி வருவதுடன், இது சகல மாகாணங்க ளிலும்விரிவுபடுத்தப்படவுள்ளது.

இலங்கையின் ஆற்றலை வெளிப்ப டுத்தி எதிர்வரும் 12 வருடகாலத்துக் குள் நாட்டின் நீண்டகால பொருளா தார, சமூக மற்றும் சுற்றாடல் இலக்கு களை உறுதிசெய்வதற்கான திட்ட மொன்றை உருவாக்குதல் இதன் பிரதான நோக்கமாகும். இளைஞர் கள், புத்திஜீவிகள் மற்றும் தொழிற்து றையினரை இந்தக் கருத்தாய்வில் இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கப் படுகின்றது.

தேசிய பேண்தகு கருத்தாய்வுக்கான இணையத்தளமும்அரசதலைவரால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.கையடக் கத் தொலைபேசி App ஊடாக தேசிய பேண்தகுகருத்தாய்வுடன்இணைந்து கொள்வதற்கானவாய்ப்பும்ஏற்படுத் தப்பட்டுள்ளது.

www.nsd.lkஎன்றஇணையத்தளத்தின் ஊடாகதேசியபேண்தகுகருத்தாய்வு டன் இணைந்து கொள்ள முடியும்.

பேண்தகு அபிவிருத்திக் கருத்தாய்வு விமர்சனங்கள், விவாதங்கள், கலந் துரையாடல்களுக்கும்தொடர்ச்சியாக உட்படுத்தப்படும்என்பதுடன், விமர்ச னங்களைமகிழ்ச்சியுடன்கையேற்ற போதிலும் தீர்வுகளும் அவற்றை நடைமுறைப்படுத்து வதற்கான ஆலோசனைகள், உதவிகள் மற்றும் ஒத்துழைப்பே பெரிதும் அவசியமா கும் என்றும் அரசதலைவர்தெரிவித் தார்.

மொரகஹாகந்த களுகங்கை பாரிய நீர்ப்பாசனத் திட்டத்துடன் இணைந்த தாக மேற்கொள்ளப்படவுள்ள 2,400 குளங்களை மறுசீரமைப்பு செய்யும் வேலைத்திட்டத்துக்கு தமது பங்களிப்பைச் செய்வதற்கு தாய்நாட் டுக்கு வருகை தருமாறு வெளிநாட்டி லிருக்கும் இலங்கைப் பொறியியலா ளர்களுக்கும் அழைப்புவிடுத்தார்.

பேண்தகுஅபிவிருத்தி மற்றும்வனஜீ வராசிகள் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள், முன்னாள் தலைமை அமைச்சர் டி.எம். ஜயரத்ன, அரச தலைவர்செயலர்உதயஆர். செனவி ரத்ன உள்ளிட்ட அரச அதிகாரிகள் இராஜதந்திரிகள் மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகள், பேண்தகு அபிவிருத்தி பற்றிய நிபுணர்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் முனசிங்ஹ உள்ளிட்டஅதன்உறுப்பினர்கள்நிகழ் வில் கலந்துகொண்டனர்.

இவ்வாறுஅரசதலைவர்ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2)

# மாகாணசபை தேர்தல்; மைத்திரியே முடிவெடுப்பார்

கொழும்பு,ஓகஸ்ட் 8

மாகாண சபைத் தேர் தலைப்பழைய முறை யில்நடத்துவதா? புதிய முறையில் நடத்துவதா? என்பது குறித்து இதுவரை யில் முடிவு செய்யப்பட வில்லை. இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணித்தலைவர் சாந்த பண்டார தெரிவித் துள்ளார்.

கொழும்பில்நேற்று இடம்பெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பில் கலந்து கொண்டுகருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் கட்சி உறுப்பினர்களிடம் வேறு பட்ட கருத்துகள் உள்ளன. பழைய தேர்தல் முறை மைக்குச்சிலர் ஆதரவு தெரிவிக்கின்றனர். புதிய தேர்தல்முறைமைக்கு வேறு சிலர் ஆதரவு தெரிவிக்கின்றனர். ஆகவே இது தொடர்பில் அரசதலைவரின் கவனத்துக்குக் கொண்டு சென்று அரசதலைவரே இறுதி முடிவெடுப்பார் என்றும் சாந்த பண்டார குறிப்பிட்டார். (ரி2)

# மைத்திரி - மகிந்த இணைந்தால் மாத்திரமே அரசை அமைக்கலாம்

## ஜயசேகர தெரிவிப்பு



கொழும்பு,ஓகஸ்ட் 8

சிறிலங்காபொதுமக்கள்முன்ன ணியை வைத்துக்கொண்டு அடுத்த அரசை அமைக்க முடி யாது. தாமரைமொட்டில் தலை மைத்துவப் போட்டிக்குப் பலர் உள்ளனர். எனவே மைத்திரி மகிந்த இணைந்து பயணித் தால்மட்டுமேஎமக்கான அரசை அமைக்க முடியும். இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நெகிழ்வை அமைப்பாளர் குழுக் கூட்டம் நேற்று முன்தி னம் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரி விக்கும் போதே அவர் இத னைத் தெரிவித்தார். அவர் தெரி வித்ததாவது,

சிறிலங்கா சுதந்திரக் கட்சி பண் டாரநாயக்கவிலிருந்துதெற்கில் ஒரு சாதாரணக் குடிமகனான ராஜபக்சவிடம்சென்றடைந்து, பொலனறுவையின் சாதார ணக் குடிமகனான மைத்திரி பால சிறிசேனாவிடம் சென்ற டைந்துள்ளது.

இந்தக்கட்சியை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனநாளை எவருக்குக்கையளிக்கின்றாரோ அவரிடமிருந்து கட்சி மீண்டும் பயணிக்கும்.

மைத்திரியிடமிருந்துஇன்னொ ருவர்கட்சியைஎடுத்துக்கொண் டால் அவருடன் இணைந்து கட்சியை முன்னோக்கிக் கொண்டு செல்வோமே தவிர மைத்திரிபால சிறிசேனவின் பின்னால் செல்லமாட்டோம். கட்சியை சீரழிக்கும் எந்த நடவ டிக்கைகளையும்நாம்முன்னெ டுக்கமாட்டோம்.

கடந்த உள்ளூராட்சித் தேர்த லின்போது மகிந்த ராஜபக்ச வைத் தலைமை அமைச்சராக் குவோம் என்ற கோஷம் எழுப் பப்பட்டது. ஆனால்இதுசெய்யக் கூடிய காரியம் அல்ல என அப் போதேதெரிவித்தேன்.

பிரதேச சபைத் தேர்தலில் வெற்றி பெற்று மகிந்த ராஜபக் சவைத் தலைமை அமைச்ச ராக்குவது, என்றால் நாம் 95 பேரும் ஒன்றிணைய வேண் டும். அவரைத் தலைமை அமைச்சராக்க எமது பக்கம் பலம் இல்லை.

மைத்திரி - மகிந்த இணைந்துக் கொள்ள வேண் டும். அப்போது தான் அரசு ஒன்றை அமைக்க முடியும். மாறாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியை நிராகரித்து அரசை அமைக்கமுடியாது.

தாமரை மொட்டு என்ற கட் சியைவைத்துஎதையும்செய்ய முடியாது. இந்தக் கட்சியின் தலைவர்களாகும் நினைப்பில் பலர் உள்ளனர். இந்தக் கட்சி யைக் கொண்டு தலைமைத்து வத்தை அமைக்கமுடியாது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியி னால்மட்டுமேமக்கள்மத்தியில் தலைமைத்துவத்தைக் கொண்டுசெல்லமுடியும். மீண் டும் நாம் அனைவரும் இணைந்தால்மட்டுமேவெற்றி என்பது சாத்தியமாகும்.

இதனை சிறிலங்கா பொதுமக் கள் முன்னணியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும் - என்றார். (ரி2.61)

# இந்தோனேசியா நிலநடுக்கம் உயிரிழப்பு எண்ணிக்கை 150



யகார்த்தா, ஒக 8
இந்தோனேசியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 150ஆக அதிகரித்தது.
இந்தோனேசியாவின் லோம்பாக் தீவில் நேற்று முன்தினம் நள்ளிரவு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.0 அலகுகளாகப் பதிவாகியது. பத்து கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. சிலமணி நேரங்களுக்கு பின்னர் சுனாமி எச்சரிக்கை திரும்பப் பெறப்பட்டது. 91 பேர் உயிரிழந்தனர் என்று முதல்கட்டத் தகவல் வெளிவந்திருந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற சிலர் உயிரிழந்ததை அடுத்து உயிரிழப்பு எண்ணிக்கை 150ஆக அதிகரித்தது. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## ஹிரோசிமா நினைவுதினம் ஜப்பானில் மிக உருக்கம்

டோக்கியோ, ஒக. 8
இரண்டாவது உலகப்போரில் ஜப்பானின் ஹிரோசிமா நகரின் மீது அமெரிக்கா அணுகுண்டு வீசியதன் 73ஆவது நினைவுதினம் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது.
இரண்டாவது உலகப்போரில் ஜப்பான் தனது ஆதிக்கத்தை வெகுவாகக் கொண்டிருந்த காலத்தில் அந்த நாட்டின் மீது,அமெரிக்காவால் அணுகுண்டு வீசப்பட்டது. பல்லாயிரக் கணக்கான மக்கள் இந்தத் தாக்குதலில் கொன்று குவி க்கப்பட்டனர். லட்சக் கணக்கான மக்கள் தமது அவயங்களை இழந்தனர். ஹிரோசி மாவில் இன்று பிறக்கும் சில குழந்தைகள்கூட அணுக்கதிரின் தாக்கத்துக்கு உட்பட்டுப் பிறக்கின்றன என்கிறது ஆய்வு. இவ்வாறான கொடும் தாக்குதலை எதிர்கொண்டதன் 73ஆவது நினைவுதினத்தை நேற்றுமுன்தினம் கடைப்பிடித்தது ஹிரோசிமா. ஜப்பானின் தலைமை அமைச்சர் சின்சோ அபே உள்ளிட்ட பல்லாயிரக் கணக்கானவர்கள் இந்த நினைவு தினத்தில் கலந்துகொண்டனர். (ம)



## கனடாவுடனான உறவுகளை முறித்தது சவூதி அரேபியா



ரியாத், ஒக. 8
கனடாவுடனான அனைத்து உறவுகளையும் முறித்துக் கொள்வதாக சவூதி அரேபியா அறிவித்தது.
கனேடியத் தூதரை நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்ட சவூதி, கனடாவுக்கான தனது தூதரையும் அழைத்தது.
சவூதியில் பெண் செயற்பாட்டாளர்கள் அண்மைக்காலமாக கைது செய்யப்படுவது தொடர்பில் தனது கவலையை அண்மையில் வெளியிட்டிருந்தது கனடா.
இதையடுத்தே கனடாவுடனான தனது உறவுகளை நிறுத்துவதாக அறிவித்துள்ளது சவூதி.
கனடாவுடனான முதலீடுகள், அரசியல் உறவுகள் உள்ளிட்ட அனைத்தையும் நிறுத்துவதாக அறிவித்தது சவூதி. (ம)

## சவூதியின் முறுகல் ஈரானுக்கு வாய்ப்பு

தெக்ரோன், ஒக. 8
கனடாவுடனான உறவுகளைத் துண்டிப்பதாக சவூதி அரேபியா அறிவித்துள்ளமை ஈரானுக்கு சிறந்த வாய்ப்பு என்று கருதப்படுகிறது.
ஈரானுடன் தான் கொண்டிருந்த ஒப்பந்தங்களை முறித்துள்ள அமெரிக்கா ஈரானைத் தனிமைப்படுத்தும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இவ்வா றானதொரு பின்னணியில் கனடாவுடன் முரண்பட்டுள்ளது சவூதி. இதனால் கச்சாவுக்கு சவூதியை விடுத்து ஈரானைச் சார்ந்திருக்க வேண்டிய நிர்பந்தம் கனடாவுக்கு ஏற்பட்டுள்ளது.
அவ்வாறு கனடா ஈரான் இடையில் ஒப்பந்தம் ஏற்பட்டால் அது ஈரானைத் தனிமைப்படுத்தும் அமெரிக்காவின் திட்டங்களைப் பெரிதும் பாதிக்கும் என்பது அரசியல் வல்லுனர்களின் அவதானிப்பு. (ம)

# ஈரானா அமெரிக்காவா என்று தீர்மானியுங்கள் உலக நாடுகளை இப்படி எச்சரித்தார் ட்ரம்ப்

ஈரானுடன் வர்த்தகத்தில் ஈடுபடும் நாடுகள் எங்களுடன் வர்த்தகத்தில் ஈடுபட வேண்டாம் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.


ஈரான் மீது புதிய பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கான உத்தரவில் ட்ரம்ப் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கையெழுத்திட்டார். இதைத் தொடர்ந்து ஈரானுடன் வர்த்தகத்தில் ஈடுபடும் நாடுகள் அமெரிக்காவுடன் வர்த்தகத்தில் ஈடுபட வேண்டாம் என்றுள்ளார் ட்ரம்ப்.

இதுகுறித்து ட்ரம்ப் தனது கீச்சகத்தில், "ஈரான் மீது அதிகாரபூர்வமாக பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. நவம்பர் மாதம் இது அடுத்தகட்ட நிலையை அடையும். யாராவது ஈரானுடன் வர்த்தகம் செய்ய விரும்பினால் அவர்கள் அமெரிக்காவுடன் வர்த்தகத்தில் ஈடுபட வேண்டாம். நான் உலகத்தின் அமைதிக்காகவே இதைக் கேட்கிறேன். வேறு எதுவும் இல்லை" என்று பதிவிட்டுள்ளார்.

அமெரிக்காவின் பொருளாதாரத் தடை குறித்து ஈரானின் அதிபர் ரவுகானி, "அமெரிக்கா எங்களுடன் பேச்சு நடத்த உண்மையாகவே தயாராக இருந்தால் நாங்களும் எந்த நிபந்தனையும் இல்லாமல் அவர்களுடன் பேச்சு நடத்தத் தயாராக இருக்கிறோம்" என்று கூறியிருந்தார்.

ஈரானுடன் ஒப்பந்தம் பேண வேண்டாம் என்று இந்தியா, துருக்கி நாடுகளை அமெரிக்கா அண்மையில் வெளிப்படையாகவே கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)





# அமெரிக்காவில் தொடர் சூடு

அமெரிக்காவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 7 மணி நேரத்தில் பத்து இடங்களில் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து மூத்த பொலிஸ் அதிகாரி வாலர் தெரிவிக்கையில் 'சிகாகோ நகரில் ஞாயிற்றுக்கிழமை 7 மணி நேரங்களில் சுமார் பத்து துப்பாக்கிச் சூடுகள் வெவ்வேறு இடங்களில் நடந்தன. இந்தத் துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் 5 பேர் உயிரிழந்தனர். 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்தத் துப்பாக்கிச் சூடு சில இடங்களில் இலக்கு வைத்தும், சில இடங்களில் கும்பல் மோதலாகவும் நடந்துள்ளது. துப்பாக்கிச் சூடுகள் குறித்து விசாரணை நடந்து வரு கிறது அமெரிக்காவில் சமீப காலமாக துப்பாக்கிச் சூடு அதிகஅளவில் நடந்து வரும் இடமாக சிக்காகோ மாறியுள்ளது" என்றார்.

கடந்த ஜீன் மாதம் 25ஆம் திகதி சிக்காகோவில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 25 பேர் காயமடைந்தனர். 2 இருவர் உயிரிழந்தமை குறிப்பி

# திருமணம் செய்தார் ஹம்சா பின்லேடன்

அல்கொய்தா தீவிரவாத அமைப் பின் முன்னாள் தலைவர் ஒசாமா பின்லேடனின் மகன் ஹம்சா பின்லே டன் திருமணம் செய்துள்ளார்.

கடந்த 2001ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் திகதி இரட்டைக் கோபுரத் தகர்ப்புக்கு வானூர்தி யைக் கடத்திய தீவிரவாதி முகமது அட்டாவின் மகளை ஒசாமாவின் மகன் ஹம்சா மணந்துள்ளார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தத் தகவலை ஒசாமா பின் லேடனின் சகோதரர்கள் அகமது மற்றும் ஹசன் அல் அட்டாஸ் ஆகியோர் 'தி கார்டியன்' நாளே ட்டுக்கு அளித்த செவ்வியில் உறுதி செய்துள்ளனர்.

அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல் ஆகிய நாடுகளை கடுமையாகப் பழிவாங்குவேன் என்று ஹம்சா பின்லேடன் ஏற்கனவே அறிவித்திருந்தார். இதனால் அவர் தேடப்பட்டுவரும் தீவிரவாதியாக பன்னாட்டுச் சமூகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளார். (ம)





கடந்த 29ஆம் திகதி பங்களாதேஷில் இடம்பெற்ற சாலை விபத்தில் இரண்டு மாணவர்கள் உயிரிழந்த நிலையில், அந்த நாட்டின் தலைநகர் டாக்காவில் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் விளைவாக சாலை விபத்துக்களில் சாவை ஏற்படுத்தினால் அதையும் கொலைக் குற்றத்துக்கு நிகராகக் கருதித் தூக்குத் தண்டனை வழங்க பரிசீலித்து வருகிறது பங்களாதேஷ் அரசு. (ம)

# பலஸ்தீனத்தில் நடப்பதை உலகம் அறியவேண்டும்

## *இப்படித் தெரிவித்தார் தமீமி*

ஜெருசலேம், ஓக. 8

பலஸ்தீனத்தில் நடப்பதை உலகம் அறிந்துகொள்ள வேண்டும் என்று தெரிவித்தார் இஸ்ரேல் இராணுவச் சிப்பாயைத் தாக்கிய குற்றத்துக்காக சிறை சென்று மீண்டுள்ள பலஸ்தீனச் சிறுமி தமீமி.

பலஸ்தீனத்தில் பன்னாட்டு ஊடகங்களுக்கு நேற்றுமுன்தினம் செவ்வி வழங்குகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அவர்.



"நான் விடுதலைக்காக என்னைப் போராட்டக்காராகவே நினைத்துக் கொள்கிறேன். நான் எப்போதும் இஸ்ரேலால் பாதிக்கப்பட்டவளாக இருக்க மாட்டேன். எனக்கு சிறையில் கிடைத்த அனுபவம் மிகவும் கடினமானது. என்னால் அதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. சிறையிலிருக்கும்போது என்னைப் பற்றிய செய்திகள் எதையும் நான் பார்க்கவில்லை. ஆனால் எனது பெற்றோர்கள் எனக்கு நிறைய பேர் ஆதரவு அளித்து வருவதாகக் கூறினார்கள்.

பல இளம் பெண்கள் எனக்கு ஆதரவாக நீதிமன்றம் வந்திருந்தார்கள். நான் சிறையில் பன்னாட்டுச் சட்டங்கள் குறித்துப் படித்தேன். ஒரு நாள் நிச்சயமாக இஸ்ரேலுக்கு எதிராக வழக்குத் தொடுப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது. எனது நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும். விடுதலைக்குப் பின் கையில் விலங்கு இல்லாமல் வானத்தை என்னால் பார்க்க முடிகிறது. வீதிகளில் நடக்க முடிகிறது. நட்சத்திரங்களையும், நிலவையும் என்னால் பார்க்க முடிகிறது. அவற்றை நீண்ட நாள்களாக நான் பார்க்கவில்லை.

நான் தற்போது பலஸ்தீனம் அனுபவிக்கும் துன்பங்களின் அடையாளமாக இருக்கிறேன். இது எனக்குப் பெருமையாக இருக்கிறது. பலஸ்தீனத்தில் நடப்பதை உலகம் அறிந்துகொள்ள வேண்டும். பலஸ்தீனத்தின் குரலை உலக நாடுகளுக்கிடையே கொண்டு செல்வேன். இதில் எனக்கு எந்த துன்பமும் இல்லை. இது மிகப் பெரிய கடமைதான். எனினும் அதை நோக்கித்தான் என் பயணம் இருக்கிறது" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இவர்கள் ஏன் இப்படி!

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக மற்றொரு வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் மாகாணத்தின் முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரன். தன்னை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கியமை தவறு என்று தெரிவித்து அவர் தாக்கல் செய்த வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்கால உத்தரவைச் செயற்படுத்த மறுத்து நீதிமன்றத்தை அவமதித்துவிட்டார் என்கிற குற்றச்சாட்டின் கீழ் இந்தப் புதிய வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை நீதிமன்றம் விசாரணைக்கும் எடுத்துக்கொண்டுள்ளது.

வடக்கு மாகாணசபையின் ஆயுள்காலம் முடிவடைவதற்கு இன்னமும் 40 நாள்களே இருக்கும் நிலையிலும், இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அமைச்சுப் பதவியைத் திரும்பப் பெற்று இந்த 40 நாள்களுக்குள் மக்களுக்கு அவசரமாகச் சேவையாற்ற வேண்டும் என்பதற்காக இந்த வழக்கு முதலமைச்சருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்படவில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. அதேபோன்று இந்தப் பிரச்சினையை எந்தவழியிலாவது முடிவுக்குக் கொண்டு வந்து எஞ்சியிருக்கும் இறுதி நாள்களில் மிச்சம் மீதியாக மக்களுக்கு எதையாவது செய்வோம் என்கிற மக்கள் சிந்தனையுடன் இந்த வழக்குகளை எவரும் எதிர்கொள்ளவில்லை என்பதும் வெள்ளிடைமலை. ஒருவித "ஈகோ" பிரச்சினை காரணமாகவே வடக்கு அமைச்சரவைப் பிரச்சினை தொடர்ந்தும் இழுபட்டுச் செல்கின்றது என்பது மக்களுக்குத் தெரியாத இரகசியமும் அல்ல.

முதலமைச்சர் தரப்பும், டெனீஸ்வரன் தரப்பும் விட்டுக் கொடுப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் தெரியவில்லை. ஒருவர் முன்னாள் நீதியரசர், மற்றொருவர் சட்டத்தரணி. எனவே இருவருமே தங்களுடைய சட்டப் போராட்டத்தில் தீவிரமாக இருக்கிறார்கள். இரண்டு பேருமாக இதுவரையில் மூன்று வழக்குகளைத் தாக்கல் செய்துவிட்டார்கள். இத்தோடு இது நிற்குமா, இல்லை இன்னும் வளர்ந்துகொண்டே செல்லுமா என்பது அவர்கள் இருவருக்கும் மட்டுமே தெரிந்த உண்மை.

இந்தவிடயத்தில் டெனீஸ்வரனுக்கு அநீதி இழைக்கப்பட்டது என்பதை மறுப்பதற்கில்லை. பதவி வருவதும், பதவி போவதும் அரசியலில் ஒன்றும் பாரதூரமான பிரச்சினை அல்ல. முதலமைச்சர் என்கிற வகையில் அமைச்சர்களை நியமிக்கவும், பிடிக்கவில்லை என்றால் நீக்கவும் முதலமைச்சருக்கு இருக்கும் அதிகாரத்தின் மீதும் யாரும் கேள்வி கேட்க முடியாது. ஆனால், தன் அதிகாரத்தை அழுத்தமாகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, டெனீஸ்வரன் மீது மக்களிடம் தவறான எண்ணத்தை ஏற்படுத்தும் வகையில் முதலமைச்சர் செயற்பட்டது அவரது பதவிக்கும் நேர்மைக்கும் உரிய செயலல்ல என்பதும் ஏற்புடையதுதான். எனவே டெனீஸ்வரனின் சட்டப் போராட்டத்திற்கு ஒரு நியாயம் இருக்கின்றது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

அதேநேரத்தில், முதலமைச்சரும் சரி, டெனீஸ்வரனும் சரி அரசியலுக்கு வந்தது மக்களின் நலன்களைக் கவனிப்பதற்காகவும் அவர்களுக்குச் சேவையாற்றுவதற்காகவும் என்பதிலும் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. அப்படியிருக்கையில் அவர்களின் தனிப்பட்ட "ஈகோ"வுக்கு மேலாக மக்களின் நலன்தானே முக்கியமானதாக இருக்கவேண்டும். இங்கோ அப்படி நடக்கவில்லை என்பதுதான் வருத்தத்துக்குரியது. வடக்கு மாகாண அமைச்சரவை செயற்பட முடியாது முடங்கி இரண்டு மாதங்கள் ஆகப்போகின்றன. சபையின் பதவிக்காலம் முடிவடையும் வரை, இந்த நிலை தொடரவும்கூடும். அப்படிச் சபையின் நடவடிக்கைகள் முடங்கியிருக்கும் நிலைக்கு டெனீஸ்வரன் மற்றும் முதலமைச்சர் இருவருமே காரணம். ஆனால், அது பற்றிக் கவலைப்படும் நிலையில் அவர்கள் இருவரும் இல்லை. மக்கள் எக்கேடு கெட்டால் எமக்கென்ன எங்கள் "ஈகோ"க்களை விட்டுக்கொடுக்க மாட்டோம் என்று நிற்கிறார்கள்.

ஒரு வகையில், இந்தச் சட்டப் போராட்டத்தைப் பார்க்கும்போதும் இந்த அரசியல் தலைவர்கள் எவ்வளவு தூரம் சட்ட வல்லுநர்களாக இருக்கிறார்கள் என்று நினைத்துப் பெருமைப்படத் தோன்றுகிறது. அடுத்தகணமே, அவர்கள் ஏன் தமது வித்துவத் தனங்களை எல்லாம் தமிழர்களின் உரிமைகளை மீட்டெடுப்பதில் காட்ட மறுக்கிறார்கள் என்று நினைக்கும்போது வெறுப்பாகவும், விசனமாகவும் இருக்கிறது. ஒருவேளை அவர்கள் இந்தத் திறமையை எல்லாம் தமிழ் மக்களுக்காகச் செலவிட்டிருந்தார்கள் என்றால், என்றைக்கோ தமிழர்களுக்கு உரிமை கிடைத்திருக்கக் கூடுமோ!

# கலங்கிய குட்டையின் நிலையில் தென்பகுதி அரசியல்

சேரலாதன்

கூட்டு அரசின் ஆயுட்காலம் அடுத்த ஆண்டுடன் முடிவடையவுள்ள நிலையில், அரசுக்குள் பிளவை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது.

அடுத்த தமிழ், சிங்கள புதுவருடப் பிறப்புக்கு முன்பதாக மகிந்த ராஜபக்சவை, மைத்திரிபால சிறிசேனவே தலைமை அமைச்சராக நியமிப்பாரெனவும், சிறீலங்கா சுதந்திரக்கட்சி தனியாக ஆட்சியை அமைக்குமெனவும் பொது எதிரணியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். பொது எதிரணியினர் இவ்வாறு கூறிவருவது புதியதொரு விடயமெனக் கூறமுடியாது. வழக்கமானதொரு கருத்து வெளிப்பாடே அது.



### தமது எண்ணப்படி நாட்டின் நிர்வாகத்தை முன்னெடுத்தவர் முன்னாள் அரச தலைவர் மகிந்த


அரசதலைவராகச் சுமார் 10 ஆண்டுகள் பதவி வகித்தவர் மகிந்த ராஜபக்ச. தமது ஆட்சிக் காலத்தில் ஓர் அரசரைப் போன்றே அவர் நடந்து கொண்டார். அவரது சொல்லுக்கு மறுவார்த்தை கூறுவதற்கு அந்தக் காலகட்டத்தில் எவருக்குமே துணிவு இருந்ததில்லை. அவருக்கு எதிராக நடந்து கொண்டால் என்ன நடக்கும் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். அவரின் கீழ் ஓர் அமைச்சராகப் பணியாற்றியவர்தான் தற்போதைய அரசதலைவர். இந்த நிலையில் அவருக்குக் கீழ் பணியாற்றுவதற்கு மகிந்த முன்வருவதை ஏனோ ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால் மகிந்தவைச் சார்ந்தவர்கள் இதைச் சிறிதுகூட எண்ணிப் பார்ப்பதாகத் தெரியவில்லை.



இதைவிட, மகிந்த மிகப்பெரிய அளவில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது. அதைவிட, அவரது சகோதரர்கள் மீதும் இத்தகைய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. பிரபல விளையாட்டு வீரர் தாஜூதீனின் சாவு தொடர்பாக மகிந்தவின் குடும்ப உறுப்பினர்கள் சிலர் மீது சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் 'நல்லாட்சி' என்று தன்னைத்தானே கூறிக்கொள்ளும், முதுகெலும்பு இல்லாத இன்றைய கூட்டு அரசினால் இவர்களுக்கு எதிராக சட்டபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்க முடியவில்லை. கூட்டு அரசு சகலத்துக்கும் அஞ்சி அஞ்சியே தனது காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றது. மகிந்த தரப்புக்கு இது பெரும் வாய்ப்பாகவே அமைந்துவிட்டது.

### குள்ளநரித்தன அரசியலுக்குப் பெயர் பெற்றவர் ரணில்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க, தமக்கு எதிரான நடவடிக்கைகளையெல்லாம் அமைதியாகவே அவதானித்துக் கொண்டிருப்பதையும் காண முடிகின்றது. மைத்திரிபால சிறிசேனவை அரசதலைவர் பதவியில் அமர்த்துவதில் முக்கிய பங்கு வகித்த அவர், தமது பதவியைக் காப்பாற்றுவதற்கான வியூகங்களை வகுக்காமல் சும்மா இருக்கமாட்டார் என்பதை உறுதியாகக் கூறமுடியும். அரசியல் குள்ள நரித்தனத்தில் கை தேர்ந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் மருமகன் முறையான ரணிலும், அமைதியாக இருந்து குள்ள நரித்தனமாகக் காய்களை நகர்த்துவதில் வல்லவர். புலிகளின் துணைத் தலைவராகவும், சிறந்த தளபதிகளில் ஒருவராகவும் திகழ்ந்த கருணாவை புலிகள் இயக்கத்திலிருந்து பிரித்தெடுப்பதற்கு அவரது இந்தக் குள்ளநரித் தந்திரம் உதவியுள்ளது. ஆனால் இதுவே புலிகளுக்கு அவர்மீது கோபத்தை ஏற்படுத்த 2005ஆம் ஆண்டு இடம்பெற்ற அரசதலைவர் தேர்தலில் ரணில் தமது வெற்றி வாய்ப்பை இழப்பதற்குக் காரணமாகவும் அமைந்துவிட்டது. தோல்விகளைக் கண்டு துவளாதவர் ஒருவர் இந்த நாட்டில் இருக்கிறார் என்றால் ரணில் விக்கிரமசிங்கவையே அதற்கு உதாரணமாகக் குறிப்பிட இயலும். அந்த அளவுக்கு தமது மனதைத் திடப்படுத்திக் கொள்வதில் அவர் வல்லவர்.



### அடுத்த அரச தலைவருக்கான தேர்தலைக் குறிவைத்துக் காய் நகர்த்தும் ரணில்

தற்போது அடுத்த அரச தலைவர் தேர்தலைக் கருத்தில் கொண்டு ரணில் செயற்படுவதாகவே நினைக்கத் தோன்றுகின்றது. தேர்தலில் வெற்றிபெற வேண்டுமானால், தமிழர்களின் வாக்குகள் மிக அவசியமானவை என்பதை உணர்ந்து கொண்ட ரணில், அடிக்கடி வடபகுதிக்கு வருகை தருகின்றார். நிகழ்ச்சிகள் பலவற்றில் கலந்து கொள்கின்றார். அதுமட்டுமல்லாது, வடக்கின் அபிவிருத்தி தொடர்பாகவும் பேசுகின்றார். பலாலி வானூர்தி நிலையத்தை சிவில் விமானப் போக்குவரத்துக்கு இயங்க வைப்பது தொடர்பாகக் கவனம் செலுத்துகின்றார். மகிந்தவின் பரமவைரியும், ரணிலுக்கு வேண்டியவருமான சந்திரிகா அம்மையார் 2020க்குள் தமிழர்களுக்குத் தீர்வு கிடைத்துவிடுமெனக் கூறியுள்ளார். இவற்றையெல்லாம் பார்க்கும்போது இவர்களின் உள்நோக்கம் புலப்படுகின்றது.

அடுத்த அரச தலைவர் தேர்தலில் மகிந்த போட்டியிட முடியாத நிலை தோன்றினால், மகிந்த குடும்பத்துக்கு வெளியிலிருந்தே ஒருவர் போட்டியிடுவாரென வெளிவந்த அறிவிப்பு மகிந்தவுக்கு எதிரானவர்களுக்கு உற்சாகத்தை அளித்திருக்கக்கூடும்.

தென்பகுதியின் அரசியல் நிலைவரங்கள் கலங்கிய குட்டையைப் போன்று காட்சியளிக்கின்றது. இவற்றுக்குத் தெளிவு ஏற்படுவதற்கான அறிகுறிகளையும் காணோம். இதை அமைதியாக இருந்து பார்ப்பதைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறு மார்க்கம் எதுவும் கிடையாது. ■

இந்துமதி

# வடக்கு மக்களை அரவணைக்கப் பார்க்கின்றாரா தலைமை அமைச்சர்?



வடக்கை அபிவிருத்தி செய்வதே தமது அரசின் பிரதான இலக்கு எனக் கூறியிருக்கிறார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க. வடக்கின் அபிவிருத்தி தொடர்பான அரசின் திடீர் கரிசனையை ரணிலின் கருத்து வெளிப்படுத்துகின்றது.

**நாட்டில் வடபகுதியே முழு நாட்டிலும் அபிவிருத்தியில் அதிக பாதிப்பைச் சந்தித்தது**

நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது, வடபகுதி அபிவிருத்தி குன்றிய நிலையிலேயே காணப்படுகின்றது. போரைக் காரணங்காட்டியே நெடுங்காலமாக வடக்கின் அபிவிருத்தி புறக்கணிக்கப்பட்டமையே இதற்கான காரணமாகும். போர் ஓய்ந்த நிலையிலும், வடக்கு புறக்கணிக்கப்பட்டு வந்ததால் அபிவிருத்தியில் பின்தங்கிக் காணப்படுகின்றது. வடக்குக்கும் வறட்சிக்கும் நீண்ட தொடர்புகள் உள்ளன. போதிய நீர் வளம் இல்லாமை, குறைந்தளவு மழை வீழ்ச்சி ஆகியவை வடக்கை ஒரு வறண்ட பிரதேசமாக அடையாளம் காட்டி நிற்கின்றன.

**மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் பின்னணியில் வடக்கில் சிங்களக் குடியேற்றம் ஆதிக்கம் செலுத்துகிறதா?**

மகாவலி அபிவிருத்தித் திட்டம் தற்போதைய தலைமை அமைச்சர் தலைவராக இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. மறைந்த காமினி திசநாயக்க இதற்குப் பொறுப்பான அமைச்சராக இருந்தார். பெரும் நிதி இந்தத் திட்டத்திற்காகச் செலவிடப்பட்டது.

மகாவலி கங்கையின் நீரை வழிமறித்துத் தேக்கி வைக்கும் பொருட்டு பெரிய அணைக்கட்டுக்களும் அமைக்கப்பட்டன. ஆனால் அநுராதபுரம் வரை பாய்ந்து வந்த மகாவலி நீர் வடபகுதியை எட்டிக்கூடப் பார்க்கவில்லை.

ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்களக்குடியேற்றங்களை நிறுவும் பொருட்டு மகாவலி அபிவிருத்தித் திட்டம் அதற்கு விஸ்தரிக்கப்படவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த அரசின் அபிவிருத்தி இலக்கு சிங்களக் குடியேற்றம் தானா என்ற சந்தேகம் எழுவது நியாயமானதே.

முன்பொரு தடவை யாழ்ப்பாணக் குடாநாடு விரைவில் பாலைவனமாக மாறிவிடுமென எதிர்வு கூறப்பட்டது. ஆனால் ஆட்சிக்கு வந்த அரசுகள் இது தொடர்பாக எதுவித கரிசனையும் காட்டியதாகத் தெரியவில்லை.

இன்று வடபகுதியின் அபிவிருத்தி தொடர்பாக அக்கறையுடன் பேசிவருகின்ற தலைமை அமைச்சர், முதலில் இங்கு காணப்படுகின்ற வறட்சி நிலைக்கு நிரந்தரமானதொரு தீர்வுக்கு வழிகாண வேண்டும். வடக்கில் வறட்சி நீங்கிப் போதியளவு நீர் கிடைக்குமானால், உழைப்புக்குப் பெயர் போன வடபகுதி மக்கள் தாமாகவே பெரும் அபிவிருத்தியை ஏற்படுத்தி விடுவார்கள்.

> வடபகுதியைச் சேர்ந்த இலட்சக்கணக்கானவர்கள் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் அங்கிருந்து அனுப்பி வைக்கின்ற பணம் இங்குள்ளவர்களின் பொருளாதாரத்தில் பெரும் பங்கை வகிக்கின்றது. போருக்கு மத்தியிலும் வடபகுதி மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்காது உயிர் வாழ்ந்தமைக்கு இந்த புலம்பெயர் தமிழர்களால் இங்குள்ள தமது உறவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பணமே உதவியது.

அபிவிருத்தி என்று கூறும்போது, பொருளாதாரம், கல்வி, சிக்கலில்லாத வாழ்க்கைமுறை என்பவை உள்ளடக்கப்பட வேண்டும். வடபகுதியைச் சேர்ந்த இலட்சக்கணக்கானவர்கள் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் அங்கிருந்து அனுப்பி வைக்கின்ற பணம் இங்குள்ளவர்களின் பொருளாதாரத்தில் பெரும் பங்கை வகிக்கின்றது. போருக்கு மத்தியிலும் வடபகுதி மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்காது உயிர் வாழ்ந்தமைக்கு இந்த புலம்பெயர் தமிழர்களால் இங்குள்ள தமது உறவுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட பணமே உதவியது.

கல்வித் துறையைப் பொறுத்தவரையில் மாகாண ரீதியாக வடக்கு கடை நிலையில் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. இதற்குரிய காரணங்களை அறிந்து அரசு தேவையான உதவிகளை வழங்குவது அவசியமாகும். இங்குள்ள மக்களின் வாழ்க்கை மகிழ்ச்சியாகவும், நிம்மதியுடனும் அமைய வேண்டுமானால், பொருளாதார நிலையில் அவர்கள் தன்னிறைவு காண வேண்டும். மக்களுக்கு வருமானத்தைத் தரக்கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் வாயிலாகவே இது சாத்தியமாகும்.

**நாட்டின் வடபகுதி எப்போதுமே தென்பகுதியால் புறக்கணிப்புக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றது**

தெற்கில் மாறி மாறி ஆட்சியமைக்கின்ற அரசுகள், வடபகுதி மக்களுக்குத் தாம் வழங்குகின்ற வாக்குறுதிகளை நிறைவேற்றியதாக வரலாறே கிடையாது. அந்த மக்கள் தொடர்ந்து ஏமாற்றுப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். நல்லாட்சி அரசிலும் இதுதான் நடந்து கொண்டிருக்கின்றது. வடக்கை அபிவிருத்தி செய்வது தொடர்பாக அங்குள்ள மக்களுக்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால் அரசு இதில் நேர்மையாகச் செயற்படுமா என்ற சந்தேகம் அவர்களிடம் நிறையவே காணப்படுகின்றது. இதைப் போக்க வேண்டியது அரசின் முக்கிய பொறுப்பாகும்.

அரசு பொறுப்புடன் செயற்படுமானால், தமிழ்த் தலைமைகள் வடக்கின் அபிவிருத்தி தொடர்பான தமது ஆலோசனைகளை அரசிடம் சமர்ப்பிக்க வேண்டும். வடக்கு மக்கள் உரிமைகளும் கிடைக்காது, அபிவிருத்தியும் இல்லாது தொடர்ந்து அல்லல்களை எதிர்கொள்வது அவர்களின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல. உரிமைக்கான போராட்டம் ஒரு புறத்தில் இடம்பெறுகின்ற அதேவேளை, அபிவிருத்திக்கான தேடலும் இடம்பெற வேண்டும். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வடக்கு மக்களை அரவணைத்துச் செல்வதற்கான ஒரு முயற்சியாகவும் அபிவிருத்தி என்ற பதத்தை பயன்படுத்தியிருக்கலாம். இதன் உண்மைத் தன்மையைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# என் போன்றோருக்கு வீட்டு வசதி ஏற்படுத்தித் தரமாட்டீர்களா?

தமிழர் தாயகத்தில் நடந்த இறுதிப் போரில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நான், வலுவிழந்த நிலையில் 2009ஆம் ஆண்டு தொடக்கம் முடங்கிய நிலையில் வாழ்ந்து வருகிறேன்.

மூன்று மகன்மார் (மூவரும் 15 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள்) மனைவியுடன் மிகவும் வறுமை நிலையில் காலத்தை ஓட்டி வருகிறோம் நானும் எனது குடும்பத்தவர்களும். உடற் பாதிப்புக்கு நான் தொடர் சிகிச்சை பெற்று வருகின்றேன். ஆனால் எனக்கென்று வசிப்பதற்கு இதுவரை வீட்டுத்திட்டம் எதுவும் வழங்கப்படவில்லை.

ஒரு சிறு ஓலைக்குடிசையில் நீர், மின்சாரம், மலசலகூட வசதி எதுவுமே அற்ற நிலையில் பகலில் எமது குடிசையிலும் இரவானதும் உறவினர் வீட்டில் தங்குவதுமாக சுமார் எட்டு வருடங்களாக எமது அவல வாழ்க்கை தொடர்கிறது. 2010ஆம் ஆண்டில் இருந்து இடையிடையே வீட்டுத்திட்டப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், இன்றுவரை எமக்கு குடியிருக்க வீட்டு வசதி எதுவும் செய்து தரப்படவில்லை. என்னைப் போன்று ஒருசில குடியிருப்பு வசதி தேவைப்படும் குடும்பத்தவர்கள் நான் வசிக்கும் பிரிவில் வசித்து வருவது குறிப்பிடத்தக்க விடயம். ஒவ்வொரு வருடமும் பதிவுகள் நடைபெறும். இந்திய வீட்டுத்திட்டம், சீனாவின் வீட்டுத்திட்டம், பொருத்து வீட்டுத்திட்டம், இன்னும் எது எதுவோ-50ஆயிரம் வீடு, 25 ஆயிரம் வீடு என்று ஊடகங்களில் செய்திகள் வெளிவரும். பின்பு அவை அப்படியே அடங்கிப் போய்விடும்.

இந்த வருடமாவது வீட்டு வசதி கிடைக்குமென என்போன்ற பாதிக்கப்பட்டவர்கள் நம்பியிருக்கும் நிலையில், அரசியல்வாதிகள் தங்களுக்குள் எது எதுவோ குழப்பமடைவதை பத்திரிகைகள் ஊடாக அறிய முடிகிறது.

சாதாரண பொதுமக்களது நலன்குறித்து அக்கறை செலுத்தவேண்டிய அரசியல்வாதிகளே, அரச அதிகாரிகளே நீங்கள் கண்ணாடி வீட்டுக்குள் இருந்து வெளிவந்து என்போன்ற ஏழை மக்களின் குடியிருப்பு நிலைமையை ஒருமுறை வந்து பார்வையிட்டால், உங்களுக்கு யதார்த்தம் புரியும்.

என்போன்று வீடுகளற்ற நிலையில் வசிக்கும் குடும்பங்களுக்கு சீனாவோ, இந்தியாவோ, நோர்வேயோ எவராயிருப்பினும் வீட்டு வசதிசெய்து உதவினால் போதும். எமக்கு எவர் குற்றினாலும், அது அரிசியானால் சரி.

எனவே, வீட்டுத் திட்டத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரத் தரப்பினர்கள் என்போன்ற ஏழை மக்களின் நிலையை உணர்ந்து இந்த ஆண்டாவது எமக்கு வீட்டு வசதி ஏற்படுத்தித்தர ஆவன செய்யவேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட என்போன்றோரது தாழ்மையான கோரிக்கையாகும்.

*போரினால் பாதிக்கப்பட்டும்
குடியிருப்பு வசதியும் இல்லாது
வாடும் ஒரு அபலை.
வரணி*




**மேடம்:** தன்னம்பிக்கையுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**இடபம்:** மனச்சாட்சிப்படி நடந்து குடும்ப பெருமையை நிலைநாட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நேரும் குள்றுபடியை உடனடியாக சரிய செய்வது நல்லது. இலாபம் சுமார்.

**மிதுனம்:** எதிர்பார்ப்பு நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும். பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றுவர்.

**கடகம்:** உங்களின் இரக்க குணம் அறிந்து சிலர் உதவி பெறுவர். இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும்.

**சிங்கம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். இலாபம் சீராக இருக்கும். உடல்நலனில் கவனம் செலுத்தவும்.

**கன்னி:** மனதில் நேர்மை எண்ணம் மேலோங்கும். பிறருக்கு உதவி செய்ய முன்வருவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும்.

**துலாம்:** உங்களின் நற்செயலை சிலர்பரிகாசம் செய்து பேசுவர். எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். தொழில், வியாபார நடைமுறை சீராக இருக்கும். இலாபம் சராசரி அளவில் இருக்கும்.

**விருச்சிகம்:** நல்ல மனிதர்களின் அறிமுகம் கிடைக்கும். தாமதமான பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி உருவாகும். இலாபம் உயரும்.

**தனுசு:** மதி நுட்பத்துடன் செயல்படுவீர்கள். கடந்த கால முயற்சிக்கான நற்பலன் கிடைக்கும். தொழில்வியாபாரத்தில்இலாபம்உயரும்.பெற்றோரின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** பேச்சு, செயலில் தயக்கம் ஏற்படலாம். பணியில் மட்டும் கவனம் செலுத்தவும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பிராணிகளிடம் விலகியிருப்பது நல்லது.

**கும்பம்:** குடும்ப பிரச்னை குறித்து பிறரிடம் பேச வேண்டாம். எதிர்பார்ப்பு ஓரளவே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சீராக இருக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.

**மீனம்:** மனதில் தைரியம் குடியிருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். குடும்பத்தினர் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

# யாரோ யாரிடமோ

யாரோ யாரிடமோ தோற்றுப்போய் திரும்புகிறார்கள்
யாரோ யாரிடமோ தலை குனிந்து செய்வதறியாமல் திகைக்கிறார்கள்
யாரோ யாரிடமோ முணுமுணுக்க மட்டுமே முடிவதை நொந்துகொள்கிறார்கள்
யாரோ யாரிடமோ கைவிடப்பட்டதைக் குறித்து புகார் சொல்கிறார்கள்

யாரோ யாரிடமோ போகும் திசையை உறுதிப்படுத்திக் கொள்கிறார்கள்
யாரோ யாரிடமோ அதுவரைக் காத்த மௌனத்தை ஓசையின்றி
உடைக்கிறார்கள்

யாரோ எவரிடத்திலோ ஒரு முடிவை எடுக்கும்படி அவசரப்படுத்துகிறார்கள்
யாரோ எவரையோ திட்டமிட்டபடியே தொலைக்கிறார்கள்
யாரோ யார் யாரிடமோ தஞ்சமடைவதைத் தடுக்க முடியாமல் தவிக்கிறார்கள்

யாரோ எவரின் காயங்களையோ புறக்கணிக்கும் தந்திரங்களை அறிந்து
வைத்திருக்கிறார்கள்
யாரோ யார் வாசலிலோ வழக்கத்துக்கு மாறான மன உளைச்சலோடு
நிற்கிறார்கள்

யாரோ யாரிடமிருந்தோ வீசப்பட்ட சொற் கூர்மையால் கச்சிதமாக
வெட்டுப்படுகிறார்கள்
யாரோ யாரிடமோ மூர்க்கத்தின் முகமறிந்து புன்னகைக்கிறார்கள்

யாரோ யாரிடமோ பட்ட அவமானத்தைப் பகிரங்கமாய் பகிர
யாரோவால் நிர்ப்பந்தக்கப்படுகிறார்கள்

யாரோ யாரிடமோ ஒரு பசியை மட்டுமே யாசிக்கிறார்கள்
யாரோ எவருக்கோ ஒரு தத்துவத்தை மட்டுமே பிச்சையிடுகிறார்கள்

யாரோ யாரிடமோ எப்போதும் யாரோ போலவே தோன்றி மறைகிறார்கள்




# 2.0 பட கிளைமாக்ஸ் காட்சியை இன்னமும் மறக்க முடியவில்லை

- ஏ.ஆர்.ரஹ்மான்

ரஜினியின்'2.0', விஜய்யின்'சர்கார்', சிவகார்த்திகேயன்நடிக்கும் ஏலியன் படம், மணிரத்னத்தின் 'செக்கச்சிவந்த வானம்' எனத் தமிழிலேயே நிறையப் படங்களில் இசையமைக்க இருக்கிறார் ஏ.ஆர்.ரஹ்மான். பாலிவுட், ஹாலிவுட் படங்கள், இசைநிகழ்ச்சிகள் எனத்தீவிரமாக இயங்கிவருகிறார். மேலும் அவருடைய கதைதயாரிப்பில் உருவாகும் '99சாங்க்ஸ்' படத்தின் வெளியீட்டு வேலைகளிலும் இறங்கியிருக்கிறார்.

ஏ.ஆர்.ரகுமான் அளித்த ஒருசெவ்வியில், சங்கரின் 2.0 பற்றியும் கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு பதில் அளித்த ரகுமான், "2.0 போன்ற படத்தை ஷங்கரால் மட்டும்தான் உருவாக்க முடியும். அவர் விரும்பும் தரத்துக்கு வரும் வரை மிக மிக நுணுக்கமாக செயற்பட்டு வருகிறார்.

படத்தில்ஒருபாடலைப்பார்த்தேன். எந்தகிராபிக்ஷும் இல்லாமலேயேஅவ்வளவுஆச்சரியத்தைக்கொடுத்தது. முக்கியமாகப் படத்தின் மொத்தக் கிளைமாக்ஸ் காட்சியையும் பார்த்தேன். எனக்கு அதன் வியப்பு இன்னமும் நீங்கவில்லை. ஷங்கர் போன்ற திறமைசாலியால் இந்தியாவுக்கே பெருமை" என்று பதிலளித்தார்.

ரஜினிகாந்துடன், அக்ஷய்குமார், எமி ஜாக்சன் நடிக்கும் 2.0 படத்தின் இறுதிக்கட்ட வேலைகள் நடந்து வருகின்றன. முப்பரிணாம தொழில்நுட்பத்தில் மிகப் பிரம்மாண்டமான முறையில் உருவாகி வரும் இந்தப் படத்தின் கிராபிக்ஸ் பணிகளும் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளனவாம்.



## மகாபாரதம் உணர்த்தும் நீதிகள்

1.தனி மனித தர்மத்தை விட பொது தர்மமே சிறந்தது. முக்கியத்துவம் வாய்ந்தது...

2.தர்மமே அனைத்துக்கும் ஆதாரம், அத்தகைய தர்மத்துக்கு ஆதாரம் கருணையாகும்...

3. அகிலத்தையே வெல்லும் ஆற்றல் பெற்றிருந்தாலும், தர்மத்தின் பாதையிலிருந்து விலகினால் வீழ்ச்சி நிச்சயம்...

4. ஒட்டு மொத்த மனித வாழ்க்கையும் சங்கிலி தொடர்பு போல பிணைக்கப்பட்டுள்ளது. எல்லாம் முன்பே தீர்மானிக்க பட்டவை...

5.எமக்கு வரும் நன்மைக்கும் தீமைக்கும் நாமே காரணம்...

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | 1 | | | | | |
| 9 | 3 | 7 | | | | | | |
| 8 | | 5 | | 4 | | | 9 | |
| | | 3 | | 7 | | | | 4 |
| 4 | | | 6 | | 2 | | | 8 |
| 5 | | | | 8 | | | | |
| | 9 | | | 1 | | 4 | | 3 |
| | | | | | | 9 | 1 | 7 |
| | | | | | 7 | | 8 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 1 | 8 | 7 | 9 | 6 | 3 | 2 |
| 2 | 9 | 7 | 6 | 1 | 3 | 4 | 8 | 5 |
| 6 | 8 | 3 | 4 | 2 | 5 | 9 | 7 | 1 |
| 4 | 7 | 9 | 2 | 8 | 6 | 1 | 5 | 3 |
| 1 | 6 | 8 | 5 | 3 | 4 | 7 | 2 | 9 |
| 3 | 5 | 2 | 1 | 9 | 7 | 8 | 4 | 6 |
| 8 | 2 | 4 | 3 | 6 | 1 | 5 | 9 | 7 |
| 7 | 1 | 5 | 9 | 4 | 2 | 3 | 6 | 8 |
| 9 | 3 | 6 | 7 | 5 | 8 | 2 | 1 | 4 |

நேற்றைய விடை

**மகிழ்ச்சி**
என்பது
ஏசி ரூம் மாதிரி,
இருக்கிறப்ப
அனுபவிச்சுக்கணும்!
கூடவே வரணும்னு
எதிர்பார்க்கக் கூடாது!

வீடு கட்டும்போது இருந்த வேகம் இப்பொழுது கடனை கட்டும்போது இல்லையே ஏன்...?



வீட்டை மேஸ்திரி, சித்தாள், எலக்ட்ரிசியன் என பல பேர் சேர்ந்து கட்டினாங்க... கடனை நான் ஒருத்தன் மட்டும்தானே சேர் கட்ட வேண்டியிருக்கு.....

முகிலன்™@MJ_twets
நேரம் காலம் தெரியாமல் வேலை செய்கிறது கடிகாரம்

அமீர்@ameerfaj
தன் தவறை உணர்ந்தவர்களை மன்னியுங்கள், அவர்களை தண்டிக்காதீர்கள் ...

பிளாக் லைட்@BlackLightOfl
குறுஞ்செய்தி வருகையால் தானோ உறவுகள் கூட குறுகி போனது.!!

உதயன்
புதன் பொய்கை
ஓகஸ்ட் 08 2018
@UthayanPrint

> நீங்கள் ஒருபோதும் முயற்சி செய்யவில்லை என்றால், ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா என்பதை எப்படி தெரிந்துக்கொள் வீர்கள்?
> – ஜாக் மா

கே.எஸ்.சிவஞானராஜா

# உற்பத்தியாளர்களை ஊக்குவித்த கைத்தொழில் கண்காட்சி

மனிதனுக்கு இறைவனால் தரப்பட்ட மூலதனமே கடமையும் அதற்கானமுயற்சியும் உழைப்புமாகும். இந்த மூன்றும் இருந்துவிட்டால் நாட்டில் பஞ்சம், பிணி, பட்டினி எதுவுமே இல்லாது நாடும் வீடும் சுபீட்சமடைந்து, சொர்க்கமாக மாறிவிடும். இந்த உன்னத இலக்கை மனதிலே இருக்குமாறும், வாழ்விலே தொனிக்குமாறும் மற்றவர்களுக்கு இனிக்குமாறும் வழிகாட்டிய ஒரு அற்புதக் கண்காட்சிதான் யாழில் நடைபெற்ற "மாகாணக் கைத்தொழில் கண்காட்சி-2018" ஆகும். யாழ்ப்பாணம் வேம்படி மக



ளிர் உயர்தரப் பாடசாலையில் ஜூலை 28, 29 ஆகிய தினங்களில் பூரண நிறைவோடு அரங்கேறியது. முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனால் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.


## பொறுப்பு

கைத்தறி மற்றும் கைவினைப் பொருள்களை உற்பத்தி செய்யும் வடமாகாண உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண தொழில்துறை திணைக்களம், தேசிய அருங்கலைகள் பேரவை, மற்றும் புடைவைக் கைத்தொழில் திணைக்களத்துடன் இணைந்து பொறுப்பாகியும், பொறுப்பாக்கியும் வெல்லுமாறு நடத்தப்பெற்ற ஆச்சரியமான கண்காட்சி இதுவாகும்.

பார்ப்பவர்களை வியக்க வைத்து நம்பிக்கையூட்டிய ஒரு பெரும் வரப்பிரசாதமாக இக்கண்காட்சி நல்லதோர் செய்தியை எமக்கு அளித்தது எனலாம். இதனைப் பார்க்கும்போது எமக்குள்ளே ஒளிந்திருக்கும் சோம்பேறித்தனம் வெருண்டோடிற்று. எம் சமூகம் இன்னுமே விழிப்படையவில்லை என்ற செய்தி எம் ஒவ்வொருவரையும் வாட்டி வறட்சி செய்தது. எமது கரங்கள் சாப்பிடவும் வாகனம் ஓட்டவும் மட்டுந்தானா இயங்குகிறது என்ற தோல்வி மனப்பாங்கு என்னுள் கொதித்தது.

> ஒவ்வொரு விரலுக்குள்ளும் அபார சக்தி ஒளிந்திருப்பதையும், அந்த விரல்களினால் படைக்கப்பட்ட படையல்களையும் கண்ணுற்று வியப்புற்றேன். அதேபோலப் பார்வையாளர்களும் சொக்கி நின்றதையும் அவதானிக்க முடிந்தது.

ஒவ்வொரு விரலுக்குள்ளும் அபார சக்தி ஒளிந்திருப்பதையும், அந்த விரல்களினால் படைக்கப்பட்ட படையல்களையும் கண்ணுற்று வியப்புற்றேன். அதேபோலப் பார்வையாளர்களும் சொக்கி நின்றதையும் அவதானிக்க முடிந்தது. எல்லாவற்றையும் பறைசாற்றுவதாக நுழைவாயில் கட்டியம் கூறி நின்றது. அடேயப்பா அதன் அழகோ கொள்ளை அழகு. முழுக்க முழுக்க பனையோலைகளினாலும்,பனைமூலப்பொருள்களினாலும்கண்காட்சிவளைவு தோரணமாக வடிவமைக்கப்பட்டிருந்தது. வேம்படி வாசல் செம்மையாக ஒப்புரவு செய்யப்பட்டிருந்தது. உள்ளே நுழைந்தால் கிட்டத்தட்ட நூற்றுக்கணக்கான காட்சிக் கூடங்கள் பெறுமதியாக்கப்பட்டுப் பத்திரமாக்கப்பட்டிருந்தன. பலப்பல ஆக்கங்கள் கண்களுக்கு விருந்தாகின.



## ஆக்கங்கள்

கைத்தறி நெசவு உற்பத்திகள், சாறி, பெற்சீற், தலையணை உறை, சாரம், துவாய், களிமண் உற்பத்திகள், தும்பு, ஓலை, புல் சார்ந்த உற்பத்திகள், உலோகக் கைப்பணி பொருள்கள், ஆபரணங்கள், சங்கீத உபகரணங்கள், துணிகளினாலான கைப்பணிப் பொருள்கள், சிரட்டையிலானகைப்பணிப் பொருள்கள், சிப்பியிலான கைப்பணிப் பொருள்கள், பட்றிக், ரேந்தை, மர உற்பத்திப் பொருள்கள், தோற்பொருள்கள், கல்லாலான கைப்பணிப் பொருள்கள், வரைபுகளும் சிற்பங்களும் பாரம்பரியக்கலைகளும், தென்னை, பனை சார்ந்த உற்பத்திகள், நானாவித கைப்பணிப் பொருள்கள், நினைவுச் சின்னங்கள் இன்னும் பல அம்சங்களோடு கண்காட்சி பிரமிக்க வைத்தது.

## சிறப்பு

கால்களை இழந்தாலும் காலத்தை இழக்காத படைப்புக்கள் ஏராளம், விழிகளை இழந்தாலும் வாழ்க்கையை இழக்காத முயற்சிகள் ஏராளம், மேலும் நுணுக்கமான வேலைப்பாடுகளோடு, மிளிரும் வகையில் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்து பல கைவினை முயற்சியாளர்கள் இந்தக்கண்காட்சியில் மனமுவந்து தத்தம் தயாரிப்புக்களைக் காட்சிப்படுத்தியிருந்தது மட்டுமன்றி விற்பனைக்குமாக நிரப்படுத்தி அழகுபடுத்தியிருந்தார்கள். அத்துடன் விலைமதிக்க முடியாத பொக்கிசங்களான உலோகச் சிற்பங்கள், மரச் சிற்பங்கள், கருங்கற் சிற்பங்கள், மட்கல உருவங்கள், பனம் பொருள்கள், ஆபரணங்கள், நெசவுப் பொருள்கள், இசைக்கருவிகள், தென்னை சார்ந்த படைப்புக்கள், தோற்பொருள்கள், துணிகளில் தையல், இயந்திர வேலைகள், கடல்சார் பொருள்களின் அற்புதங்கள், மதம் சார்ந்த பண்பாட்டுப் பொருள்கள், ஏற்றுமதி தரத்திலான ஓலை முதுசொம்கள் என நூற்றுக் கணக்






கான கைவினைப் பொருள்கள் நெஞ்சைவிட்டகலாத வாஞ்சையோடு விளங்கிற்று.

இதைவிட தீவகங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட சுயமுயற்சி கைவினைப் பொருள்கள், உணவுப் பொருள்கள், மாற்றுத்திறனாளிகளின் கைவண்ணத்தில் உருவான அற்புதக் கற்பனை, பனைசார் பொருள்கள் மற்றும் உலர் உணவுப் பொருள்கள் மேலும்பெண் தலைமைத்துவக் குடும்பப் உறுப்பினர்களால் பாதுகாப்பாகவும், கவனமாகவும் தயாரிக்கப்பட்ட ஏற்றுமதி தரத்திலான உலர் உணவுப் பொருள்கள், மிகவும் தரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தன.

வடமாகாண தொழிற்துறை திணைக்கள அனுசரணையோடு, ஊர்காவற்றுறை, அனலைதீவு, அச்சுவேலி, நல்லூர், சங்கானை, கோப்பாய், சாவகச்சேரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, எழுதுமட்டுவாழ், மல்லாகம், அளவெட்டி, இணுவில், அரியாலை, கந்தர்மடம், புதுக்குடியிருப்பு, வவுனியா, மன்னார், பருத்தித்தறை, தோணிக்கல், மிருசுவில், நெடுங்கேணி, கொழும்புத்துறை, கணேஸ்வரம், கோம்பாவில், தீவகம் முழுவதுமாக இந்தக் கண்காட்சியைப் பெருமைப்படுத்தி பேறளித்தமையை பார்வையாளர்களால் உணரக்கூடியதாக இருந்தது. சுமார் நூற்றுக்கு மேற்பட்ட முயற்சியாளர்களின் காட்சிக் கூடங்கள் விந்தையளித்தன.

### தெரிவுகள்

இந்த வருடம் நடைபெற்ற இந்த கண்காட்சியிலே, மாகாணமட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நிலையாகக் கைப்பணித்துறையில் 212 ஆக்கங்களும், தேசிய கண்காட்சியான சில்ப அபிமானி-2018 அரச தலைவர் கைப்பணிகள் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட 151 ஆக்கங்களும் அதிமிகு அற்புதமானவையாகும்.

எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை கொழும்பு பண்டார நாயக்கா மாநாட்டு மண்டபத்தில் தேசியப் போட்டியும், தெரிவும் நடைபெற உள்ளது. பெரும்பாலும் பல பரிசில்களை வடமாகாணம் பெற்று இலங்கையில் முன்னணி வகிக்கும் என்பது எமது பிரார்த்தனையாகும்.

இலங்கையில் பொதுவாக ஆன்மிகம் வானுயரக் கொடிகட்டிப் பறக்கிற அளவுக்குச் செயற்பாட்டு முயற்சி, தொழில் முயற்சி, அபிவிருத்தி, கைத்தொழில், உழைப்பு, அரசியல் வெற்றிபெறவேயில்லை. எனவே ஆன்மிகப் பாதையில் மாற்றம் செய்தேயாகவேண்டும்.

இஸ்லாமிய மார்க்கம்

# மனிதப் பண்பை சிதறடிக்கும் வெறுப்பு

ஒரு மனிதர் மற்றொரு மனிதருக்கு அல்லது ஒரு சமூகம் மற்றொரு சமூகத்திற்கு துயரமான காலங்களில் துணை நின்று ஆதரவு தந்தால் பெரும் மதிப்பு பெறுவதற்கு அது துணை நிற்கும்.

'ஓ நம்பிக்கையாளர்களே! எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு, நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள். இதுவே இறையச்சத்திற்கு மிக நெருக்கமாகும்' என்று திருக்குர்ஆன் (5: 8) குறிப்பிடுகிறது.

ஒரு மனிதன் தன் மனதினுள் வெறுப்பை அனுமதிக்கச் செய்து விட்டால் அது அவனின் மனிதப் பண்பை சிறிது சிறிதாக சிதறடித்துவிடும். ஒரு மனிதன் இன்னொரு மனிதன் மீது, ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தின் மீது வெறுப்பை விதைப்பதும், விசத்தைக் கக்குவதும் இன்று அதிகரித்து வருகிறது.

சில தனிநபர்கள், குழுக்கள், அமைப்புகள், அரசியல்வாதிகள், ஊடகங்கள் என்று பல்வேறு தரப்பிலும் வெறுப்பு பரப்புரைகள் மூலம் மக்களை பிரித்தாளும் சூழ்ச்சி செய்வது காலமாக இது இருக்கின்றது. வெறுப்பு மனநிலையின் உச்சபட்சமாக சித்திரவதை செய்வது, தாக்கிக்கொள்வது என்பது அதிகரித்து வருகிறது. அதுபோன்ற செய்திகள் தினந்தோறும் வந்து கவலையடைய வைக்கின்றன. பிரச்சினை, பதற்றம், தாக்குதல் எனும் கொதிநிலையில் இந்தத் தேசம் சிக்குண்டுள்ளது. இதற்கு அடிப்படையில் வெறுப்பே முதன்மையாக நிலைகொண்டிருக்கிறது.

மனிதர்களிடம் பொதுவாக அறிவும், மனிதநேயமும், நற்குணமும், சகிப்புத் தன்மையும், விசாலமான இதயமும் மிகுந்திருக்கும். படைப்பினங்களில் சிறந்ததாக மனிதன் இருப்பதற்கு அதுதான் காரணமாக இருக்கிறது. ஆனால் வெறுப்பை திட்டமிட்டு விதைக்கின்றபோது மேற்குறிப்பிட்ட மனிதனின் அனைத்து தன்மைகளும் அவனது மனதிலிருந்து அழிக்கப்பட்டு விடும். அதனால்தான் சகோதரத்துடன் வாழ வேண்டியவர்கள் தங்களுக்குள் அடித்துக் கொள்கிறார்கள்.

'நேசிப்பவர் மீது குருட்டுத்தனமான நேசத்தைக் கொண்டிருக்க மாட்டார். அவ்வாறே வெறுப்பவர்கள் மீது கல்நெஞ்சம் கொண்ட, பிடிவாதமான, அடிப்படையற்ற கோபத்தை வெளிப்படுத்தவும் மாட்டார்' என்று வெறுப்பதிலும், நேசிப்பதிலும் நியாயமான அணுகுமுறைகளை மேற்கொள்ள இஸ்லாம் வழிகாட்டுகிறது.

அடிப்படையற்ற கோபம்தான் வெறுப்பின் மூலம் மக்களை துண்டாடி வருகிறது. அது பெரும் பாதிப்பினை ஏற்படுத்தி செல்கிறது. ஒரு சமூகத்தினர் மற்றொரு சமூகத்தின் மீது கடுமையாக நடந்து கொள்வதற்கு, அவர்கள் பின்பற்றும் மதம் ஒருபோதும் காரணமாக இருந்தது இல்லை இருப்பதும் இல்லை.



மதத்தை தீவிரமாக பின்பற்றுவதாக காட்டிக் கொள்ளும் சில சுயவர்களே காரணமாக இருக்கிறார்கள். ஏனென்றால் அனைத்து மதங்களும் நல்லவைகளை மட்டுமே சொல்கின்றன. அவைகளுடைய வார்த்தைகளில் எந்த தவறானவற்றையும் காணமுடியாது. வெறுப்பிற்கு பின்னிருக்கும் காரணிகளாக பொய்கள், திரித்தல்கள், உளறல்கள், அவதூறுகள் ஆகியவையே இருக்கின்றன. அவற்றை மனதில் போட்டு குழப்பி விடுவதின் மூலம் தேவையற்ற அச்சம் பிறக்கிறது. அந்த அச்சம்தான் எல்லா பிரச்சினைகளுக்கும் அச்சாணியாக இருக்கின்றது.

"பிறர் மீது கெட்ட எண்ணம் கொள்வது குறித்து உங்களை நான் எச்சரிக்கிறேன். ஏனெனில் கெட்ட எண்ணம் தான் பேச்சுகளிலேயே மிகவும் பொய்யானதாகும். (மற்றவர்களின் குறைகளை) துருவித்துருவி ஆராயாதீர்கள். ஒட்டுக்கேட்காதீர்கள். ஒருவரை ஒருவர் பொறாமை கொள்ளாதீர்கள். ஒருவரை ஒருவர் வெறுத்துக் கொள்ளாதீர்கள். ஒருவரை ஒருவர் பகைத்துக் கொள்ளாதீர்கள். அனைவரும் சகோதரர்களாக இருங்கள்" என்று நபிகள் நாயகம் மனித சமூகத்திற்கு அறிவிக்கின்றார்.

பிறர் மீது [illegible] எண்ணம் ஏற்படுவதற்கு முதற்கார[illegible] நம்பிக்கை[illegible] தன்மை நிலை கொண்டிருப்பதா[illegible]. முதலில் அனைவரும் சகோதரர்கள்; முடிவிலும் அதுவே. அவன் என் சகோதரன் என்ற எண்ணத்தை உள்ளத்தில் ஏற்படுத்திக் கொண்டால் வெறுப்பை விதைக்க நடைபெறும் முயற்சிகள் எந்நாளும் வெற்றிபெறாது.

# அகலிகைக்கு விமோசனம் தந்த இராமபிரான்

இரா. நிஷாந்தன்



கம்பராமாயணம் இலக்கியச் சுவையும், தெய்வீகச் சுவையும் நிறைந்த காப்பியமாகும். அத்தகைய கம்பராமாயணத்தில் பால காண்டத்தில் அகலிகைப் படலம் எனும் பகுதி அமைந்துள்ளது. அந்தப் படலம் அகலிகை சாபம் பெற்று பின் தன் சாபத்திற்கு விமோசனம் பெற்ற தன்மையினை எடுத்துரைக்கின்றது. தான் அறியாமல் செய்த தவறிற்காக சாபம் பெற்று பின் இராமபிரான் மூலம் சாபவிமோசனம் பெற்றுக் கொள்கின்றாள் அகலிகை எனும் மாது. இத்தகு காட்சியினை இங்கு காண்பது சிறப்பு.

**அழகுப் பதுமையாய் அகலிகை**

ஒரு முறை படைப்புக் கடவுளான பிரம்மர், தான் முன்பு படைத்த பெண்களின் அழகு நலன்களையெல்லாம் ஒன்று சேர்த்து தனி ஒரு அழகு மிக்கவளாக படைக்கப் பட்டவளே அகலிகையாவாள். அகலிகை என்றால் அழகு என்பது சிறிதும் குறைவில்லாதவள் எனப் பொருளாகும். இத்தகு அகலிகையின் ஈடு இணையில்லாத அழகினைக் கேள்வியுற்ற தேவர்கள் தலைவன் இந்திரன் தானே அகலிகைக்கு தகுந்த கணவன் என எண்ணம் கொண்டு அவள் நினைப்பால் வருந்தினான். ஆனால் விதி வசத்தால் அகலிகை கௌதமர் எனும் முனிவருக்கு மனைவியாகி விட்டாள். இந்த நிலை கண்ட இந்திரன், அகலிகை மீது கொண்ட அளவற்ற விருப்பத்தினை மறக்க முடியாதவானகி எப்படியும் அகலிகையை அடைந்து இன்பம் பெற வேண்டும் எனும் நோக்கில், ஒரு நாள், கௌதம முனிவர் இல்லாத நேரம் பார்த்து, அம் முனிவரின் ஆச்சிரமத்திற்கு கௌதம முனிவரின் உருவம் தாங்கி உள்ளே நுழைந்தான். அகலிகையும் உண்மையில் அது தன் கணவனே என எண்ணி அவன் விருப்பத்திற்கு உடன்பட்டிருந்தாள். அவ்வாறு இருக்கும் போது வந்திருப்பது இந்திரனே என்பதை அகலிகை அறிந்திருந்தாலும், அதனை மறுக்காது தானும் உடன்பட்டிருந்தாள் அகலிகை.

***புக்கு அவளோடும் காமப் புது மண மதுவின்***
***தேறல் ஒக்க உண்டு இருத்தலோடும் உணர்ந்தனள்***
***உணர்ந்த பின்னும் தக்கது என்று என்ன ஓரான்.***
***தாழ்ந்தனள் இருப்ப... என்கின்றாள் கம்பர்.***

***கௌதமர் ஆச்சிரமம் திரும்புதல்***

இது இவ்வாறு இருக்க வெளியே சென்ற, கௌதம முனிவரும், தான் சென்ற நேரம் நள்ளிரவுப் பொழுது என்பதை அறிந்து மீண்டும் தன் ஆசிரமம் நோக்கி விரைந்து வரலானார்.

***தாழா முக்கண்ணன் அனைய ஆற்றல்***
***முனிவனும் முடுகி வந்தான்..***

எனக்கம்பர் பாடுகின்றார். அதாவது, சிவபெருமானை ஒத்த கோபம் உடையவரான கௌதம முனிவரும் தன் ஆசிரமம் நோக்கி விரைந்து வரலானார் என்பது இதன் பொருளாகும்.

கௌதம முனிவரும் ஆசிரமத்தை நெருங்கவும், அதனையறிந்த இந்திரன் உடன் அங்கிருந்து விலகிச் செல்ல முற்பட்டான். அங்கு நடந்தவற்றை தன் திவ்ய திருஸ்டியின் துணை கொண்டு கண்டறிந்தார் கௌதமர். மறு கணமே கோபத்தின் உச்சிக்கே சென்று விட்டார்.

**இந்திரன் பெற்ற கடும் சாபம்**

உடன் இந்திரனை விளித்து, தேவேந்திரா, தேவர்களின் தலைவனாகிய நீ, இப்படி ஒரு அற்பமான செயல் செய்வதற்கு எவ்விதம் துணிவுற்றாய். நீ இவ்விடம் எத்தகு இன்பத்தை நாடி வந்தாயோ அதுவே உன் உடலில் ஆயிரம் குறிகளாக தென்படட்டும் எனச் சாபமும் அளித்து விட்டார். இதனை சிறிதும் எதிர்பாராத இந்திரன் கௌதம முனிவரின் பாதங்களில் வீழ்ந்து, முனி சிரேஸ்டரே. இத்தகு ஆயிரம் குறிகள் கொண்ட கோலத்துடன் நான் தேவலோகம் சென்று ஆட்சி செய்ய முடியாது. ஆகவே எனக்கு சாபவிமோசனம் தந்தருளுங்கள். என வேண்டி நின்றான். முனிவரும் இந்திரன் மீது பரிவு கொண்டு, அந்த ஆயிரம் குறிகளும் உனக்கு, ஆயிரம் கண்களாக தென்படட்டும் என மாற்றியமைத்தார். இதனால் சற்று மன நிறைவு அடைந்த இந்திரன் அவ்விடம் விட்டு நீங்கினான்.

**அகலிகைக்கு சாபம் தந்த கௌதமர்**

இந்த நிலையில், அகலிகை செய்வதறியாது நின்றி ருந்தாள். கௌதம முனிவரும், அகலிகையை நோக்கி, என் மனைவியாக இருந்த போதிலும், நீ இன்னொருவனுடன் மகிழ்ச்சியுடன் சேர்ந்திருந்தாய். கல்லினைப் போல எது வித உணர்வும் இன்றி நீயும் இந்திரன் விரு ப்பத்திற்கு உடன்பட்டமையால், நீ இக்கணமே கல்லாக மாறுவாய் என கடும் சாபம் அளித்தார். அகலிகையும், தன் கணவனிடம், நான் அறியாது செய்த இச் சிறு தவறிற்கு இவ்வளவு பெரிய தண்டனையா. இந்தச் சாபத்திற்கு விமோசனம் கூறியருளுங்கள் என வேண்டி நின்றாள். கௌதமரும் அகலிகையின் வேண்டுதலை ஏற்று, பகவான் விஸ்ணுவின் அவதாரமாகிய இராமபிரான் ஓர் காலத்தில் இவ்விடம் வருவான். அவனது திருவடிகள் கல்லாக இருக்கும் உன் மீது படும் போது, உன் சாபம் நீங்கப்பெறும், உன் பழைய வடிவத்தையும் பெற்றுக் கொள்வாய், எனக் கௌதமன் உரைத்து நின்றான். மறு கணமே, அகலிகை கல்லாக மாறினாள்.



கௌதமரும், தன்மனதை இறுக்கிக் கொண்டு தவம் புரியத் தொடங்கினான்.

**அகலிகை கல்லாகிக் கிடத்தல்**

அகலிகையோ உணர்ச்சிகள் அனைத்தும் அடங்கிய கற்சிலையாக மாறிவிட்டாள். அந்தக் கல்லின் மீது வெய்யில் அடிக்கின்றது, மழை பொழிகின்றது. காற்று வீசுகின்றது, பறவைகள் வந்து அமருகின்றன. தனக்கு விமோசனம் நல்கும் இராமபிரான் வருகையை எதிர் பார்த்து நினைவற்ற பேதையாக கல்லாக கிடக்கின்றாள்.

**இராமபிரான் விஸ்வாமித்திரருடன் வருதல்**

இது இவ்வாறு இருக்க, பகவான் விஸ்ணு நிலவுலகில் தர்மம் தனை நிலை பெறச் செய்வதன் பொருட்டு இராமர் எனும் நாமம் தாங்கி மனித உருவில் அவதாரம் செய்தருளினார். இந்நிலையில் அசுரர்கள் மூலம் தன் யாகத்திற்கு ஏற்படும் இடையூறுகளை நீக்கும் பொருட்டு, இராமபிரானை தன்னுடன் அனுப்பி வைக்குமாறு இராமரின் தந்தை தசரதனிடம், வேண்டினார். முதலில் அதற்கு மறுப்புத் தெரிவித்த அரசனும் பின் ஒருவாறு இராமனை முனிவருடன் அனுப்பி வைக்க சம்மதித்தர். அதன் படி அரக்கர் அழிவினை ஆரம்பித்து வைக்கும் நோக்குடன் இராமனைத் தன்னுடன் அழைத்துச் செல்கின்றார். அதன்படி, முதலில் தாடகையை வதம் செய்து, சுபாகுவையும் வதைத்து, தன் அம்பினால் மாரீசனை நெடுந்தூரம் தள்ளி வீழ்த்தி, யாகத்தினை அசுரரிடம் இருந்து காத்த பின்பு மிதிலையை நோக்கி, பயணிக்கின்றனர் மூவரும்.

**இராமன் அகலிகைக்கு விமோசனம் நல்குதல்**

மிதிலைக்கான பயணம் செய்யும் வழியில் அகலிகை கல்லாக கிடக்கின்ற இடத்தினை வந்தடைகின்றனர். விஸ்வாமித்திர முனிவரும், அகலிகையின் வரலாற்றினை இராமனுக்கு உரைக்கின்றார். மேலும், அகலிகை சாபம் பெற்ற தன்மையினையும், விமோசனம் தர வேண்டிய அவசியத்தையும் எடுத்துரைக்கின்றார். இராமனை நோக்கி, இராமா, கல்லாக கிடக்கும் அகலிகைக்கு, உன் திருவடிகள் வாயிலாக சாப விமோசனம் அளித்தருள்வாயாக, அத்தகு சந்தர்ப்பத்தினை எதிர் நோக்கியே அகலிகையும் நெடு நாள்கள் காத்திருக்கின்றாள். எனக் கூறி நின்றார். அதன்படி, இராமனின் முனிவரது வேண்டுதலை ஏற்று, தன் தாமரை மலர் போன்ற திருப்பாதங்களை கல்லாகக் கிடக்கும் அகலிகையின் மீது பதித்தான். மறு கணமே கல்லாக கிடந்த அகலிகை, தன் சாபம் நீங்கி, பழைய உருவத்தினை அடைகின்றாள். இதனை,

***கண்ட, கல்மிசை காகுத்தன் கழல் துகள் கதுவ***
***உன்;ட பேதமை மயக்கு அற வேறுபட்டு உருவம்***
***கொண்டு மெய் உணர் பவன் கழல் கூடிய ஒப்பு***
***பண்டை வண்ணமாய் நின்றனள்.***

எனக் காட்டுகின்றார் கம்பர்.

**அகலிகை இராமன் திருவடிகளைத் தொழுதல்**

அகலிகையும், தனக்கு மறு வாழ்வு அளித்த, இராமபிரானின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினாள். இராமனும், அகலிகையை தன் தாய் போலவே கருதி, அவளை தூக்கி எடுத்து, தன் கரங்கள் கொண்டு அவளை தானும் வணங்கினான். பின், அவ்விடம் கௌதம முனிவரும் வந்திடவே, அவர்கள் இருவரையும் ஒன்று சேர்த்து விட்டு அவர்களிடம் இருந்து விடை பெற்று மிதிலை நோக்கிச் செல்லலாகினர்.

ஒரு முறை படைப்புக் கட்வுளான பிரம்மர், தான் முன்பு படைத்த பெண்களின் அழகு நலன்களையெல்லாம் ஒன்று சேர்த்து தனி ஒரு அழகு மிக்கவளாக படைக்கப்பட்டவளே அகலிகையாவாள். அகலிகை என்றால் அழகு என்பது சிறிதும் குறைவில்லாதவள் எனப் பொருளாகும். இத்தகு அகலிகையின் ஈடு இணையில்லாத அழகினைக் கேள்வியுற்ற தேவர்கள் தலைவன் இந்திரன் தானே அகலிகைக்கு தகுந்த கணவன் என எண்ணம் கொண்டு அவள் நினைப்பால் வருந்தினான்.

# பண்பாட்டு மரபுரிமைகளின் பேணுகையும் மீளுருவாக்கமும்

யோகநாதன் யகேன்

> இலங்கைத் தமிழர்களுடன் செம்பு, வெண்கலம், பித்தளை வார்ப்பு பொருள்களை இணைத்து நோக்குமிடத்து திராவிடம் தளுவிய இந்திய கலைநயத்தின் போக்கை ஆரம்பத்தில் பிரதிபலித்திருந்தாலும், அதன் பின்பான காலங்களில் வார்ப்புதொழில் இலங்கை தமிழர்களுக்கான மரபுத் தொழிலாக மாற்றங் கண்டது. இதற்கு ஆதாரமாக, 'அபயகிரி, ஜேதவனராமய' அகழ்வுகள் அநுராதபுர காலத்து வார்ப்புத் தொழின்மை பற்றி பேசுவதற்கும், ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் உகந்தபொருள் களை வெளித்தந்துள்ளது.

### மரபின் விதி மீறல்

சமகாலத்தில் கலை.கைவினை என்ற சொல்லாடல்களுக்குரிய பொருள்விளக்கம் சார்ந்து மேலைத்தேய கோட்பாடுகளையும், தத்துவார்த்த பின்புலங்களையும், சிந்தனைகளையும் அவ்வாறே பதிவிறக்கம் செய்துகொண்டுள்ளோம். சமூகத்துக்கான அல்லது சமூகக் குழுமங்களுக்கான அழகியல் சார்ந்ததும், உருவாக்க காரணகாரியம் சார்ந்ததுமான சிந்தனைகளைப் புறந்தள்ளியுள்ளோம். சமகால கலையுலகத்தின் ஒத்தியங்கல் என்ற வகுதிக்குள் மேலைத்தேய படிமங்களை திணித்துள்ளோம். கலைகள், கைவினைகள் என அவைகளுக்கான கருத்தியல்கள் அசட்டுத்தனமானவையாக அவதானம் கொள்ளப்படுகின்றன. தனித்துவமான பண்பாட்டினுள் மரபறுப்பு வீரியமாக நடந்தேறுகிறது. காலனித்துவத்தின் மேலாதிக்கங்கள் தந்தவையும் இவையே தான். மேலைத்தேய அறிஞர்களின் கலை தொடர்பான கூற்றுக்களையும் கொள்கைகளையும் எடுத்து நோக்கின், அவை அப்பர் சுவாமிகள், குமரகுருபரர் போன்ற கீழைத்தேய ஆளுமைகளின் கலைத்துவம் தொடர்பான கண்டு கொள்ளல்களை சிதைவுறச் செய்துள்ளன. கீழைத் தேய பிரதேசங்கள் யாவற்றிலும் இந்த நிலமையே வியாபித்துள்ளது.

### கலைகள் அற்புதமானவை

ஆம், 'எட்டெட்டிருங்கலை ஆனாய்..', 'ஆய கலைகள் அறுபத்துநான்கு..' என செய்யும் தொழிலைக் கலைகளாகப் போற்றியவர்கள் எம் முன்னோர். ஆனாலும், இந்த நிலமைகள் மாற்றங்கண்டுள்ளன. இன்று தொழில்வினை முனைப்போர் கலை, கைவினை எனும் சமூக சிந்தனை இடர்ப்பாட்டால் அந்தரிக்கின்றனர். தொழில் ஆளுமை இரண்டாம் நிலையை அடைந்துள்ளது. வருமானம் குறைவ டைந்துள்ளது. கலைகளாக பார்க்கப்பட்ட, போற்றப்பட்ட தொழில்கள் அத்தனையும் குழுமத்தின் மரபுத்தொடர்ச்சியை இழந்து காணாமல் போகத் தொடங்கியுள்ளன.

### தமிழர் மரபு

குறிப்பாக வார்ப்புத் தொழில் சமகாலத்தில் பெற்றுள்ள இடத்தை ஆரம்பகாலங்களுடன் ஒப்பிட்டு நோக்கும் போது, 'செம்பு யுக காலம், வெண்கல யுக காலம், பித்தளை யுக காலம், இரும்பு யுக காலம்' எனக் கற்காலத்தை பிந்திய பயன்பாட்டு உலோகப் பாவனை பொருள்களை கருத்தில் கொண்டு இவ்வாறு தரப்படுத்தப்பட்டுள்ளதை காணலாம். வெண்கலத்தையும், செம்பையும், பித்தளையையும் தமிழர் மரபோடு ஒப்பிட்டுப் பேசும்போது, ஆய்வாளர்களும் அறிஞர்களும் சிந்துவெளி நாகரிகத்தின் சிற்பங்கள், இலட்சணைகள், பாவனைப் பொருள்களுடன் இணைத்து அக்காலத்தின் மீதான ஆழமான பார்வையோடு மேல்வரும் வார்ப்புப் படைப்புக்கள் பற்றிய அவதானத்தை முன்னிலைப்படுத்துவது வரலாற்றில் கட்டாயமாகின்றது.

இலங்கைத் தமிழர்களுடன் செம்பு, வெண்கலம், பித்தளை வார்ப்புப் பொருள்களை இணைத்து நோக்குமிடத்து, திராவிடம் தழுவிய இந்திய கலைநயத்தின் போக்கை ஆரம்பத்தில் பிரதிபலித்திருந்தாலும், அதன் பின்பான காலங்களில் வார்ப்புதொழில் இலங்கைத் தமிழர்களுக்கான மரபுத்தொழிலாக மாற்றங் கண்டது. இதற்கு ஆதாரமாக, 'அபயகிரி, ஜேதவனராமய' அகழ்வுகள் அநுராதபுர காலத்து வார்ப்புத் தொழின்மை பற்றிப் பேசுவதற்கும், ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் உகந்தபொருள்களை வெளித் தந்துள்ளது.

இதற்குப் பின்பான பொலன்னறுவை காலத்தில் குறிப்பாக, சோழராட்சி உச்சம் பெற்றிருந்த காலத்தில் 'திராவிட இந்துச் சிற்பங்கள், இந்து ஆலய அலங்கார இறை கருத்தியல் சார் பொருள்கள்' என வெண்கல, பித்தளைப் பாவனை அதிகமாகக் காணப்பட்டது. ஆங்காங்கே வார்ப்புக் கலைஞர்களின் வார்ப்பு வேலைப்பாடுகள் வழிபாட்டுப் பொருளாகவும் மாறியது. திருகோணமலை, பதவியா போன்ற இடங்களில் கிடைக்கப் பெற்ற படிமங்களும், பயன்பாட்டு பொருள்களும் கிழக்கு இலங்கைக்கான வார்ப்புப் பொருள் பாவனையை தெளிவுற எடுத்தியம்பி நிற்கிறது. ஆரம்பத்தில் இறக்குமதிப் பொருள்களாக பயன்கொண்டபோதும், பிற்காலத்தில் அவற்றை வார்த்து உருவாக்கவும் ஆரம்பித்தனர்.

### தனித்துவம்

தமிழர் பிராந்தியங்களைப் பொறுத்தவரையில், 'யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு' மாவட்டங்களும், அவை சார்ந்த பிரதேசங்களும் 30 வருடங்களுக்கு மேலாக உலோகப் பொருள்களினூடாக பேணப்பட்ட மரபுரிமைகள், பண்பாடுகள் சார்ந்தவற்றைப் பாதுகாக்கவும், அவை பற்றிய ஆழமான சிந்தனைகளை மீள் எழுச்சி பெறச் செய்யவும் தவறிவிட்டன.



உள்நாட்டு போரும், நிச்சயத்தன்மையற்ற வாழ்க்கைமுறையும், அதிகரித்த போர் அழிவும் இதற்கு காரணங்களாக அமைந்துள்ளன. திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களும் இத்தகைய நிலமைகளை எதிர்கொண்டாலும், மட்டக்களப்பு மாவட்டம் ஓரளவு பழமைகளுடன் கூடிய பண்பாடுகளை இன்றளவும் வெளிப்படுத்தி நிற்கிறது.

மட்டக்களப்புக்குரிய வெண்கல, பித்தளை, செம்புப் பொருள்களின் பயன்பாடு என்பது, 'இறைகருத்தியலுடன் தொடர்புபட்ட தன்மை, அப்பொருள்களின் பாவனைமுறைகள் சடங்கு சம்பிரதாயங்களோடு தொடர்புபட்ட தன்மை' என்ற அடிப்படையில் தனித்துவம் பெறுகிறது. மட்டக்களப்பில் வார்த்தல் பொருள்களுக்குரிய சமூகப் பெறுமானம் தொடர்பில் பேசத்தூண்டுகின்றது. உண்மையில் செம்பு, பித்தளை, வெண்கலப் பொருள்கள் தொடர்பான விஞ்ஞான விளக்கங்களை அறிஞர்கள் வாயிலாக அறிந்திராத போதும், பயன்பாட்டின் அடிப்படையில் கிடைத்த அனுபவம் கொண்டு உலோக உபகரண பாவனை தருகின்ற மருத்துவக் குணங்களைப் புரிந்துகொண்டனர். இவை தவிர சமூக அந்தஸ்து, கௌரவம் என்பவை உலோகப் பாத்திரங்களின் பயன்பாட்டிலும் தங்கியிருந்தது. விருந்தினராக அயல்வீடுகளுக்கு செல்வோருக்கும், அதே போன்று விருந்தினராக வருகை தருவோருக்கும் அவர்கள் கொண்டுள்ள சமூக அந்தஸ்தின் அடிப்படையில் விருந்துபசாரம் வழங்கப்பட்டது. அவை கௌரவத்துக்கு ஏற்றாற்போல் உலோக பாத்திரங்களிலேயே வழங்கப்பட்டது.

'சேவரைக்கால், வட்டில், படிகம்' போன்ற பாத்திரங்களின் பாவனைமுறைமை இத்தகு பண்பாட்டின் போக்கை காலங்காலமாகக் காவிச்சென்றன. கால நகர்வில் அனைத்தும் மாற்றங் கண்டுள்ளது. இன்று இவ்வகையான பொருள்களின் சமூகமட்டப் பாவனை குறைவடைந்துள்ளது. அவற்றோடு இணைந்த பண்பாடும் பழக்கவழக்கங்களும் அருகிப்போயுள்ளன. ஆரம்பகாலத்தில் திருமணச் சடங்கின் போது மணப்பெண் வீட்டார் குத்துவிளக்கு, ஏனைய பண்ட பாத்திரங்களைச் சீராகக் கொடுத்து புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதிப்பர். 'பெண் விளக்கேற்றல்' என்ற பண்பாட்டின் அடியொற்றிய செயல் விளைவான பித்தளை விளக்கு கொடுத்து விடுதல் என்ற காரியம் தற்காலத்தில் இடம்பெறுவதில்லை.

### தனித்துவங்களின் பிறழ்வு

காலனித்துவ ஆதிக்கத்தின் தாக்கம் தாண்டி உலக வர்த்தகப் போக்கு மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் போன்றவை செம்பு, பித்தளை, வெண்கலப் பொருள்களின் பாவனையைக் குறைக்க ஆரம்பித்தன. திறந்த பொருளாதாரக்கொள்கையின் வழி, "பயன்பாட்டுக்கு இலகுவான புதிய கண்டுபிடிப்புகளை சந்தைப்படுத்துவதற்குரிய களமாக இலங்கையை மாற்றியது. ஆங்காங்கே இறையியல் சார்ந்த சிலைகள், சிற்பங்கள், ஆயுதங்கள் என சடங்குடன் தொடர்புபட்டவை தவிர ஏனைய பாவனை முறைமைகள் அல்லுலோகத்துக்கு மாறியது. பிளாஸ்ரிக் பொருள்களின் இலகுத்தன்மையான பாவனையும், மலிவான விலையும் உலோகம் மீதான நாட்டத்தைக் குறைத்தது. தமிழர் பிரதேசங்களில் வார்ப்பு உலோகங்களுடன் தொடர்புபட்டிருந்த கலாசாரத்தின் தொடர்ச்சித்தன்மை விடுபட்டுப் போயுள்ளது. சமகாலத்தில் ஆங்காங்கே சிறிய அளவில் இத்தகு பாவனை முறைமை தென்பட்டாலும் பெரும் பண்பாட்டு அம்சத்தை நாம் இழந்துவிட்டோம் என்பதே உண்மை.

### பண்பாட்டின் சிதைவான வியாபாரப் பெறுமானம்

இவ்வாறு பயன்பாடு குறைந்ததும், இருப்பில் இருக்கும் பித்தளை, வெண்கல, செம்புப் பண்டபாத்திரங்கள் முதலில் வீட்டின் மூலைகளில் தஞ்சமடைந்தன. பின்னர் அவை வீட்டின் பின்புற தாழ்வாரங்களில் அடைக்கலமாகின. அதற்குச் சற்றே பின்னான காலங்களில் உருக்கு உலோக விற்பனை பொருள்களாக அவை மாற்றம் கண்டன. செம்பு, பித்தளை, வெண்கல உலோகங்களுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டது. மீள்பாவனைப் பயன்பாட்டுக்கான உருக்குத் தொழிற்சாலைகள் இவற்றை குறைந்த விலையில் பெற்று பயன்கொண்டன. உள்ளூர் கொள்வனவாளர், பிராந்திய கொள்வனவாளர், மாவட்டக் கொள்வனவாளர் என மாகாண அடிப்படையான சந்தைப் பரம்பல் விரிவாக்கமடைந்தது. கண்டி, யாழ்ப்பாண, மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களை பிரதிநிதித்துவம் செய்த வியாபாரிகள் இத்தகு வியாபார நடவடிக்கைகளில் ஆட்சி அதிகாரம் புரிந்தனர்.

வெளிநாடுகளில் இருந்து உல்லாச பிரயாணிகளாக வருகை தருவோர், ஞாபகார்த்த பொருள்களாக மரபார்ந்த, அலங்கார வனப்பு நிறைந்த சிறிய வார்ப்பு பொருள்களைப் பெற்றுச் செல்கின்றனர். பண்பாட்டின் மரபுத்தொடர்ச்சியைப் பேசுகின்ற பொருள்களை எமது சமூகம் அறிந்துகொண்டுள்ளதை விடவும், அதிகமாக வெளிநாடுகளில் இருந்து வருகின்ற சுற்றுலாப்பய ணிகள் அறிந்து வைத்திருக்கின்றனர்.

(21ஆம் பக்கம் பார்க்க)

# பண்பாட்டு மரபுரிமைகளின்...

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்து ஆலய கலாச்சாரங்களில் பழமை வாய்ந்தவைகளை இன்றளவும் நல்ல விலை கொடுத்து வெளிநாட்டவர்கள் பெற்றுக்கொள்கின்றனர்.

செம்பு, பித்தளை,வெண்கலப் பொருள்களை தற்போது வீடுகளில் பாவனையில் கண்டு கொள்ள முடிவதில்லை. குறிப்பாக மட்டக்களப்பில் இவ்வகை உலோகங்களின் பாவனையை ஆலயங்களிலும், சடங்குகளிலும் மட்டுமே காணமுடிகின்றது. இவற்றோடு தொடர்புடையதான சமூக வாழ்தல் முறையை அனைவரும் மறந்து போய்விட்டனர்.

**மட்டக்களப்பும் கலைத்துவமும்**

கடந்த பத்து வருட காலப்பகுதியில் பாவனைப் பொருளாக இருந்த உலோக வார்ப்புப் பொருள்களை மட்டக்களப்பில் காணமுடியவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்தவரையில், ஓட்டமாவடி தொடக்கம் அக்கரைப்பற்றுவரை ஏறத்தாழ 60 வரையான உலோக கொள்வனவு வியாபார நிலையங்கள் காணப்படுகின்றன. இவை தவிரவும் உலோகப் பொருள்களை பெற்றுக்கொடுக்கும் இடைத்தரகர்கள் என பயன்பாட்டில் உள்ள பொருள்களின் ஏற்றுமதி என்பது ஒரு தொழிற்முயற்சியாக மாறிவிட்டது. இருந்தபோதும் இவ்வகை உலோகங்கள் தொடர்பான அவதானமும் தேடலும் பண்பாடு சார்ந்த பேசுபொருளாக மாற்றம் பெற்றதை தொடர்ந்து கல்விப்புலமைகளும், பல்கலைக்கழகங்களும் இவை குறித்துக் கரிசனை கொண்டுள்ளன.

**கலைத்துவத்தின் காப்பாளன்**

மட்டக்களப்பில் கலாநிதி தெ.பிரதீபன் தன்னார்வத்தோடு செயற்பட்டு வருகிறார். குறிப்பாக உலோகப் பொருள்களின் பாவனை முறைமை, அவற்றின் இன்றைய அருந்தல் தன்மை குறித்து புரிந்துணர்வு பெற்றதோடு, தன்னுடைய சமூகத்தை ஆத்மார்த்தமாக அடையாளம் க்ண்டுகொண்டு இவ்வகையான வார்ப்புலோகப் பொருள்களைச் சேகரிக்க ஆரம்பித்தார்.

மட்டக்களப்பு மாவட்டம் முழுமையுமாக உள்ள உலோக கொள்வனவுக் கடைகளுடன் தொடர்புகளைப் பேணி, தன்னுடைய பொருளாதார நிலைக்கு ஒத்தவிதமாக பொருள்களைச் சேகரிக்க ஆரம்பித்தார். உலோக வார்ப்பு உள்ளுர் கலைஞர்களோடு கலந்துரையாடினார். தன்னைச் சார்ந்துள்ள குறுகிய சமூக வட்டத்துடன் சிறு கலந்துரையாடல்களை மேற்கொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்தினார். இத்தகு செயல் வினையின் பிரதிபலிப்பு வெற்றியளித்துள்ளது. சேகரித்த பொருள்களை காட்சிப்படுத்த முடிந்துள்ளது. ஆறுமாதகாலம் தனிமனித முயற்சியாக மேற்கொண்ட பண்பாடு சார்ந்த சேகரிப்பாக இது அமைந்துள்ளது. இவை அனைத்தும் மட்டக்களப்பு பிரதேசத்தின் 'சுதேச வார்ப்பு'க் கலைக்குச் சொந்தமானவையா அல்லது இந்திய, அரேபிய நாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்டவையா என்ற கேள்விகளை ஏற்படுத்தினாலும், சேகரிக்கப்பட்ட அத்தனை பொருள்களும் 300 தொடக்கம் 400 வருட கால பழமை வாய்ந்தவை என்பதில் ஐயமில்லை.

ஏனைய கலைகளுடன் குறிப்பாக, கிழக்கிலங்கைக்கு உரியதான ஓவிய வெளிப்பாடுகளில் கூட இந்தப்பொருள்கள் போன்ற பழமை வாய்ந்த வெளிப்பாடுகள் இருந்தமைக்கான சான்றுகளை காணமுடியாது. ஒரு இனக்குழுமத்தின் வாழ்வியல் தொடர்ச்சியை அறிந்துகொள்ள உதவும் இத்தகு பொருள்களின் சேமிப்பாளனாக கலாநிதி தெ.பிரதீபன் திகழ்வது மகிழ்ச்சி.

வறுமை, போட்டித்தன்மையான வாழ்க்கை முறை, அழகியல் சார்ந்ததும் புராதனம் சார்ந்ததுமான விளக்கமின்மை போன்றவையே கலைத்துவமான பொருள்களின் அழிவு நிலைக்குக் காரணமாக அமைந்துள்ளன. பிரதீபன் மேற்கொண்ட முயற்சியின் பலாபலனாய் பண்பாட்டின் அடையாளம் சார்ந்த பொருள்களை வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்யாமல் ஆவணப்படுத்தி சேகரிக்க வேண்டும் என்ற நோக்கம் மக்களிடையே வலுப்பெற்றுள்ளமை நோக்குதற்குரிய அடைவு.



**மரபுரிமைகளுடன் இணைந்த பழக்கவழக்கங்களைப் பேணுவோம்**

ஆக, இனத்துவ அடையாளமாக விளங்குகின்ற வெண்கல,பித்தளைப் பொருள்களை பாதுகாப்பதற்கு அவை தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகள் கிராமமட்டங்களில் முன்னெடுக்கப்பட வேண்டும். ஆரோக்கியமான வாழ்வு, மரபுரிமைகளுடன் இணைந்த பழக்கவழக்கங்கள், அழகியல் சிந்தனைகள் என ஏராளமானவற்றை வார்ப்புப் பொருள்களின் பயன்பாட்டின்மையால் இழந்துவிட்டோம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இன்றைய கால நகர்வில் இறையியல் சார்ந்த கருத்தியலுடன் இவை உபயோகம் கொள்ளப்படுவதும், பேணப்படுவதும் மனங்கொள்ளத்தக்கது. ஒவ்வொருவரும் பண்பாட்டு மரபுரிமைகளைப் பேணுவதென்பது எதிர்காலம் பற்றிய காப்பீட்டையும், அடுத்துவரும் தலைமுறையினருக்கான பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதாக அமையும். கலாநிதி தெ.பிரதீபனின் கண்காட்சியின் பிரதான நோக்கமும் இதனையே உணர்த்தி நிற்கிறது.

*கட்டுரையாளர்: போதனாசிரியர்,*
*கிழக்குப் பல்கலைக்கழகம்.*

**நாளை**

**09.08.2018**

வியாழக்கிழமை

**ஆடி 24**

திதி: திருவாதிரை காலை 7.05 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் பி.இ. 05.28 வரை
சுபநேரம்: 07.34 – 09.04 வரை
ராகுகாலம்: 01.34 – 03.04 வரை

## அழகிய மலரே அழகிய தமிழே



பிரகதி

அழகிய மலரே அழகிய தமிழே
எப்படிப் பூத்தாயோ ?
நீ என்றும் வாடியதில்லை
நீ என்றும் அரும்பிய மலராய்
பல வண்ணங்கள் கொண்ட அழகிய மலராய்
என்றும் நீ இளமையுடன் இருப்பாய்
என் உயிர் என இருக்கும் என் தாய் மொழியே
நீ மொட்டு அரும்பினாய், மலர்ந்தாய், விதை கூடத் தூவி விட்டாய்
என்றும் நீ வாடமாட்டாய்
நீ உத்திரத்தினுள் பிறந்தவள்
இயற்கையின் மடியில் தவழ்ந்தவள்
இந்த விண்ணுக்கும் மண்ணுக்கும் சொந்தம் கொண்டாட வந்தவள்
ஆதியும் நீ தான் அந்தமும் நீ தான்
விடை தெரியாமல் விழிக்கும் நாங்கள்
தமிழ், தமிழ் என்று கூப்பாடு போட்டு உன்னை காக்க மறக்கின்றோமே
உன்னைக் கண்டால் ஊக்கம் பிறந்திடுமே
உன்னையேசோர்வாக்கிச்செய்யும்இந்தஉலகினைஎனதெனக்கூறுவதோ
தமிழே உன்னைக் கற்று வீழ்ந்ததில்லை
வீழ்ந்தவன் கூட எழுந்து நடப்பான்
மாய்ந்தவன் கூட உன்னைக் கற்க மீண்டும் பிறப்பு எடுப்பான்
தமிழே இன்னும் நாங்கள் உறங்கிவிடவில்லை
மீண்டும் எழுவோம் உன்னை தாலாட்டிட
உன்னை மீண்டும் புதுப்பித்திட
எங்கள் பழமையை காத்திட
எங்கள் முன்னோரை சேமித்து வைத்த கருவூலம் காத்திட
எங்களை தலை நிமிரச் செய்தாய் நீ
உன்னை ஒரு போதும் தலை குனிய வைக்க மாட்டோம்
அழகிய மலரே அழகிய தமிழே
அரும்பிய மலரே
கனிந்தும் எங்கள் இளவரசியாய் உலகம் முழுக்க வலம் வருபவளே
நீ எல்லோருக்கும் இன்றும் புதிராய் விளங்குகின்றாய்
ஆனால் எல்லாம் உள்ளடைக்கி இருக்கின்றாய்
நீ மீண்டும் பவனி வர நான் உன்னை போற்றுவேனே
அழகிய மலரே முதன் மொழியே
தாய் மொழியே தமிழ் மொழியே
வாழிய வாழியவே

## 'அவள் பெயர் தமிழ்'



இவள் நளினமானவள்,
இவள் மென்மையானவள்,
இவள் வசீகரமானவள்ஆனால்
கடுங்கோபக்காரி.

நாவுக்குள் அடங்காதவள்,
விரல்களில் அகப்படாதவள்,
இவள் பேரழகை முழுமையாக
அனுபவித்தவர்களே சான்றோர்களென இப்புவி புகழும்.

ஆனாலும் இருதயம் இவளால்தான் இயங்குகிறது.

நுரையீரல் இவளால்தான்
சுவாசிக்கிறது, ஆம்

அவள் பெயர்தான் "தமிழ்"...

*-நன்றி இணையம்*

# மனிதநேயம் புரியும் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்

எஸ்.யேசுதாஸ்

**தேவை**

மனிதப் பிறவியிலே சராசரி மனிதனுக்குரிய உடல் உள ஆற்றல், ஆளுமை மற்றும் பகுத்தறிவுத் திறன்களுக்குக் குறைவான வலுவுடையோரை வலுவிழந்தோர், மாற்றுத் திறனாளிகள், சிறப்புத் தேவையுடையோர் எனப் பல சொற்பதங்கள் கொண்டு அழைக்கின்றோம். இயற்கையாகவும், ஆயுதமோதல்களாலும், விபத்து அசம்பாவிதங்களாலும், நோய்களாலும் இத்தகு நிலை ஏற்படுகிறது.

உண்மையில் சிறப்புத் தேவையுடையவர்கள் சமூகத்தின் அங்கத்தவர்களாக நோக்கப்பட வேண்டும். சமூக நிலைத் திருப்பில் முன்னிலைப்படுத்தப்படாத இவர்களுடைய எதிர்காலம் சுபீட்சமாக அமைய வேண்டும். சமூகத்தின் அங்கத்தினராக மதிப்பாக, சுயசெயற்பாட்டுடன் வாழ வழி ஏற்படுத்தி கொடுக்கப்பட வேண்டும்.

**பயன்**

இதற்கு முன்னுதாரணமாக யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் திகழ்கிறது. மகத்தான மனித நேயப்பணியை ஆரம்பித்து அர்ப்பணிப்பான சேவையை வழங்கிவருகிறது. வலுவிழந்தோருக்கு ஆதரவுக்கரம் நீட்டி அவர்களை வலுவூட்டி வாழ்வாதார நிழல் கொடுக்கும் பெருவிருட்சமாக நிலைபெற்றுள்ளது.

கடந்துவந்த பாதையில் இழப்புகளை பலமுறை சந்தித்தபோதும் இலக்கை அடையும் முயற்சியிலும், சமூகப் பணியின் கனதியிலும் எவ்வித தொய்வுமின்றி சமநோக்குத் தன்மையுடனும் செயலாற்றி வருகிறது. 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியின் பின்பு இனப்போர் தீவிரமடைந்தது. உடல் அவயவங்களை இழப்போரின் தொகையும் திடீரென அதிகரித்தது. போக்குவரத்துக் கெடுபிடிகள், உயிருக்கு உத்தரவாதமற்ற நிலை போன்றன கொழும்பு சென்று செயற்கை உறுப்புக்களைப் பொருத்துவதை சாத்தியமற்றதாக்கியது. இளையோர் வகைதொகையின்றி கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டனர். அவர்களுடைய நலன்களைக் கவனிக்கவும், அவர்களுக்காக குரல்கொடுக்கவும் யாழ்ப்பாணம் அன்னையர் முன்னணி என்ற அமைப்பு தீவிரமாக செயற்பட்டு வந்தது.

> 31வருடகால அனுபவங்களைக் கொண்டுள்ள இந்த நிறுவனத்தின் பன்னாட்டு தரத்திற்கு ஈடான நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டு செயற்கை அவயவங்கள் உருவாக்கி வருகிறது. இதுவரை 6 ஆயிரத்து 786 பயனாளிகளுக்கு செயற்கை கால்களும், 569 பயனாளிகளுக்கு செயற்கை கைகளும் பொருத்தப்பட்டுள்ளன. அத்துடன் சார்புறுப்புக்கள், சிறப்புத் தேவையுடையோர் பயன்படுத்தும் சக்கரநாற்காலிகள், முச்சக்கர வண்டிகள், சக்கர இருக்கைகள், நடைதாங்கிகள், ஊன்றுகோல்கள் என்பவற்றைத் தயாரித்து வழங்கி வருகிறது.

**ஆரம்பம்**

இந்த சந்தர்ப்பத்திலே செயற்கை அவயவங்களை உள்ளூரில் வைத்து பொருத்துவதும், உற்பத்தி செய்வதுமே தீர்வாகும் என்பதை உணர்ந்து கொண்ட அன்னையர் முன்னணி, கொழும்பில் செயற்கைப் பாதங்களைப் பொருத்திவந்த கொழும்பு நட்புறவுச்சங்கம் மற்றும் தொண்டு அமைப்பான 'றோராட்' நிறுவனம் என்பவற்றின் வழிகாட்டலில் இந்தியாவின் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலையில் இருந்து தேவையான செயற்கை அவயவங்களைப் பெற்றது. 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் அமைந்துள்ள தற்போதைய அமைவிடத்தில் உற்பத்திகளை ஆரம்பித்தது. கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் செயலாளர் 'சுவர்ணா பேடினன்ட' ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் செயற்பாடுகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

"சாணேற முழம் சறுக்குவது போல" இந்திய அமைதிப்படையின் வருகையோடு ஜெய்ப்பூர் நிறுவனத்தின் செயற்பாடுகள் 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் முடங்கியது. மீண்டும் 1989, 1990, 1995, 2000ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட தீவிர போர் நடவடிக்கை காரணமாக சொத்திழப்பு ஏற்பட்டது.

ஆனாலும் பரோபகாரிகளின் உதவியும், வெளிநாடுகளில் பயிற்சிபெற்ற பணியாளர்களின் புதிய தொழில்நுட்பங்களும், அவர்கள் கொண்ட ஊக்கமும் விவேகமும், தலைமைத்துவக் கட்டமைப்பின் ஆலோசனைகளும், ஊழியர்களின் அயராத உழைப்பும் ஜெய்ப்பூர் நிறுவனத்துக்கு உயிர் கொடுத்தது.

**பணியாளுமை**

இங்கு பணியாற்றும் அநேகர் மாற்றுத் திறனாளிகள் என்பது குறிப்பிடத்தக்கது. வலுவிழந்த மக்களோடு உறவாடி உடல் உளவடுக்களைக் களைந்து வழமைக்கு மாற்றுவதென்பது இலகுவான காரியமல்ல. முதலில் அவர்கள்மீது கரிசனைகாட்டி தன்னம்பிக்கையூட்டி உயர்வுக்கு ஊனம் ஒரு தடையல்ல உள்ளத்தில் உறுதிகொண்டால் எதையும் சாதிக்கலாமென இங்குள்ள தலைமையும் ஊழியர்களும் தமது கனிவான வார்த்தைகளால் திடமளிக்கிறார்கள். அன்பு, அரவணைப்பு, பரிவு என்பன மருத்துவ சிகிச்சையைவிட மன உடைவுகளை ஆற்றும் வலுமிக்க ஔடதமாகும் என்பதை இவர்களின் அணுகுமுறை வெளிப்படுத்தி நிற்கின்றன.




**சேவை**

31வருடகால அனுபவங்களைக் கொண்டுள்ள இந்த நிறுவனத்தின் பன்னாட்டு தரத்திற்கு ஈடான நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டு செயற்கை அவயவங்கள் உருவாக்கி வருகிறது. இதுவரை 6 ஆயிரத்து 786 பயனாளிகளுக்கு செயற்கை கால்களும், 569 பயனாளிகளுக்கு செயற்கை கைகளும் பொருத்தப்பட்டுள்ளன. அத்துடன் சார்புறுப்புக்கள், சிறப்புத் தேவையுடையோர் பயன்படுத்தும் சக்கரநாற்காலிகள், முச்சக்கர வண்டிகள், சக்கர இருக்கைகள், நடைதாங்கிகள், ஊன்றுகோல்கள் என்பவற்றைத் தயாரித்து வழங்கி வருகிறது.

மேலும், 'உளவளச்சேவை, இயன்மருத்துவ சேவை, என்புமுறிவுநெறி மருத்துவசேவை, சமூக விழிப்புணர்ச்சி, பொருளாதார மேம்பாடு, மருத்துவ சேவைகள், வெளிக்கள புனர்வாழ்வுச் சேவைகள்' என இன்னோரன்ன செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. மூளை முடக்குவாதமுள்ள சிறுவர்களுக்கான மருத்துவ சேவையும் இடம்பெறுகிறது. 'செரிபல் பால்சி லங்கா பௌண்டேசன்' நிறுவனத்தின் அனுசரணையுடன் சிறப்பு மருத்துவ முகாம்களை நடத்தி மூளை முடக்குவாதமுள்ள சிறுவர்களுக்கு சக்கரநாற்காலிகளை வழங்கி அவர்கள் வாழ்வுரிமைக்கு உறுதுணை புரிகின்றது.

31ஆவது ஆண்டு நிறைவையொட்டி கனடாவிலுள்ள பன்னாட்டு மருத்துவ கழகத்தின் அனுசரணையுடன் கடந்தவாரம் 10பயனாளிகளுக்கு சக்கரநாற்காலிகள் வழங்கப்பட்டன.

வலுவிழந்தோர் இரண்டாந்தரக் குடிமக்கள் அல்ல, அனைத்து துறைசார் செயற்பாடுகளிலும் சம அந்தஸ்திற்கு உரித்துடையவர்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் பல நடவடிக்கைகளை இந்த நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது. அவர்களின் ஆற்றல்கள் திறமைகளை வெளிக்கொணரும் வண்ணம் வருடாந்தம் விளையாட்டுப் போட்டிகள், கலைநிகழ்வுகளை நடத்தி அவர்கள்பால் சமூகத்தின் கவனத்தை ஈர்த்து வருகின்றது.

போர் தீவிரமடைந்த காலப்பகுதிகளில் நாடிவந்த பயனாளிகளின் தொகை அதிகரித்தமையையும் குறிப்பாக, 2009 ஆம் ஆண்டு இறுதிப்போர் இடம்பெற்றதன் பின்னர் பயனாளிகளின் வருகை மேலும் அதிகரித்ததை புள்ளிவபரங்கள் புலப்படுத்துகின்றன.

**நிர்வாக ஆளுமைகள்**

இவ்வாறு வலுவிழந்தோருக்கு வரப்பிரசாதமாக விளங்கும் யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் உயர்வுக்கும், சமூகநலத் தொண்டுக்கும் அதன் நற்சாரதிகளாகத் திகழும் நிர்வாக கட்டமைப்பினர் என்றும் பாராட்டப்பட வேண்டியவர்கள். ஆண்களால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்களே தடம்புரளும்போது முற்றிலும் பெண்புத்திஜீவிகளை நிர்வாக முகாமைத்துவ தலைமையாகக் கொண்டு 31 வருடகாலம் வளர்ச்சிப் பாதையில் சென்றுகொண்டிருப்பது ஆச்சரியமூட்டும் செய்தியாகும்.

ஆரம்பகாலம் முதல் இன்றுவரை ஜெய்ப்பூரோடு தமது வாழ்நாளை சங்கமமாக்கிக்கொண்ட தலைவர் மருத்துவ கலாநிதி ஜெ.கணேசமூர்த்தி, பொருளாளர் மருத்துவ கலாநிதி எஸ்.தெய்வேந்திரன், செயலாளர் ஏ.அலோசியஸ் மற்றும் உறுப்பினர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவை போற்றுதற்குரியது.

**விழிப்புணர்வும் மனிதநேயமும் கொள்வோம்**

இந்த நிறுவனம் எம் மண்ணில் சேவையாற்ற பொருளாதார பலம் இன்றியமையாததாகும். பன்னாடுகள் மற்றும் அரச தொண்டு நிறுவனங்களின் உதவிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் நிதிவளம் மிக்க பரோபகாரிகள், வர்த்தகர்கள் மதசார் அமைப்புக்கள் பொதுமக்கள் வழங்கும் தாராள உதவிகளும் விழிப்புணர்வுமே மனிதநேயத்தின் வலுவான காக்கும் கவசமாக அமையும்.

**"அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை**
**மறத்தலின் ஊங்கில்லை கேடு."**

## மரண அறிவித்தல்



### முருகன் கணபதிப்பிள்ளை (பப்பன்)

நீர்வேலி தெற்கை பிறப்பிடமாகவும், நீர்வேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் கணபதிப்பிள்ளை (பப்பன்) 06.08.2018 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் - வள்ளி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நீலன் - சடைச்சி தம்பதிகளின் மருமகனும், யோகம்மாவின் அன்புக் கணவரும், சசிலாவின் தந்தையும், காலஞ்சென்ற சிவராசாவின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, கதிரன் மற்றும் வீரசிங்கம், அன்னமுத்து, காலஞ்சென்றவர்களான சின்னையா, அசோகன் ஆகியோரின் அருமைச் சகோதரரும், தர்ஷிகா, தசிகரன், தனு, சிதுர்ஷன் ஆகியோரின் அருமைப் பேரனும், ஆதவன், அருச்சுனன் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2018) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீர்வேலி மேற்கு,**
**மாலை வைரவர் கோயிலடி,**
**நீர்வேலி.**

(CS/18359)(11,17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**0214919328**



**NORTH LANKA IIT**

"Place for your future"

உயர் பட்டப்படிப்புக் கற்கை நெறிகளுக்கு
யாழ் மண்ணில் மிகச் சிறந்த தெரிவு

அரிய சந்தர்ப்பம் !
New Batch ஆரம்பம்

உங்களின் சம்பள உயர்வு,
பதவி உயர்வுகளுக்குமான
கற்கை நெறி



(Top Up Degrees)

**Bachelor of Education - (B.Ed) &**
**Master of Education - (M.Ed)**

தகைமை

Duration - 1 Year

B.Ed - College of Education Teachers or Training College Teachers in the relavant field
M.Ed - B.Ed. or P.G.D.Ed.

05.08.2018 இலிருந்து பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் !
உங்கள் பதிவுகளுக்கு இன்றே விரையுங்கள்




Top Floor, People's Bank Building Stanley Road, Jaffna.
Tel. 021-4927088 | 0767504535

## மரண அறிவித்தல்



மண்ணில் 10.01.1943
விண்ணில் 04.08.2018

### இளையதம்பி தங்கமயில்

நாகர்கோயிலைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி தங்கமயில் கடந்த (04.08.2018) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இளையதம்பி - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் குமாரசாமி - கற்பகம் தம்பதிகளின் அன்பு மருமகனும் கனகம்மாவின் (இளைப்பாறிய தாதிய அலுவலகர்) அன்புக் கணவரும் கனகம்மா, பாக்கியதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கிருபாகரன், பாபு, சுதாகரன், கவிதா, கருணாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதர்சினி, சுபோதினி, வர்சிகா, சுபாஜினி, சத்தியமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் லிபேதிகா, தாரணி, காவியன், புவின், வாசனா, விதுசன், அக்சயன், தமிழ்அன்பன், தமிழ்முகிலன், இசைநிலா, கவினா ஆகியோரின் அன்புப் பேரனும் செல்வராசா, செல்வராணி, பராசக்தி, ஆனந்தசிவம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.08.2018) வியாழக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இத்தியடிப் பிள்ளையார் கோவிலடி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(C 33678/15/1)

## நமது மாணவர்களுக்கு உயர்தரமான நவீன கல்விமுறையை வழங்கும் ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறைகள் இரண்டை குளியாப்பிட்டியவில் அபான்ஸ் திறந்து வைத்தது.




இலங்கையின் ஒவ்வொரு பிள்ளைக்கும் நவீன கல்வி முறையை பெற்றுக்கொள்வதற்கான தனது உரிமையை உறுதிசெய்யும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஸ்மார்ட் கிளாஸ் திட்டத்தின் கீழ்,நவீன ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறைகள் 2 அண்மையில் குருநாகல் மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்டது. இலங்கையின் கல்வி அமைச்சர் கௌரவ. அகில விராஜ் காரியவசம் அவர்களால் குளியாப்பிட்டிய மத்திய மாவித்தியாலயத்தில் மற்றும் குளியாப்பிட்டிய சாராணாத் வித்தியாலயத்தில் ஜூலை 13 மற்றும் 18 ஆகிய திகதிகளில் ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறைகள் இரண்டும் திறந்துவைக்கப்பட்டன. இந்த . நிகழ்வில் அபான்ஸ் நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர்கள் மற்றும் கல்வி அமைச்சின் சிறப்பு விருந்தினர்கள் கலந்து சிறப்பித்தனர்.

அண்மையில் பதுளை விஷாகா மகளிர் உயர்தர பாடசாலையில் திறந்துவைக்கப்பட்ட முதலாவது அபான்ஸ் ஸ்மார்ட் வகுப்பறை திட்டத்தை தொடர்ந்து தற்போது இதன் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை கல்வித்துறையில் நவீன கல்விமுறை உட்கட்டமைப்பு வசதிகளுடன் புரட்சிகரமான அடுத்தகட்டத்தை நோக்கி செல்லும் முகமாக கல்வி அமைச்சுடன் இணைந்து தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சுமுன்னெடுக்கும் இத்திட்டத்திற்கு அபான்ஸ் நிறுவனம் பூரண அனுசரணை வழங்கியுள்ளது. இத்திட்டமானது கல்விதாரிகள் மற்றும் வியாபாரிகளின் மத்தியில் சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளதோடு, இத்திட்டம் மூலம் இலங்கையின் பொருளாதார மேம்பாட்டிற்கு விசே... களிப்பை வழங்க முடியும் என்பதே அ... நம்பிக்கையாகும்.

ஞாபகம்... கல்வி கற்கும் பாரம்பரிய முறைகளை ... நவீன கல்விசார் முறைமைகளின் மூல... களுக்கும், மாணவர்களுக்கும் இ... த செயல்திறனுடன் அபான்ஸ் ஸ்ப... கருத்தாக்கம் செயல்படுத்தப்படு... மூலம் மாணவ மாணவிகள் ஆக்கப்பூ... சிந்தித்தல், நேர்மறையான சிந்தனைக... ம்படுத்துதல் மற்றும் பாரிய அறிவாற்றல்... உள்வாங்கிக்கொள்வதற்கான வாய்ப்புக... இதன்மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு இடையிலான செயல் எதிர்செயல்களுடன் அனைவரையும் ஒன்று திரட்டி பாடத்திட்டங்கள் மற்றும் கல்விசார் நடவடிக்கைகளை மிகவும் சிறப்பாக் ஒரு சூழலில் செயற்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் இங்கு கிடைக்கின்றது.

ஹையர் நிறுவனத்தினால் விசேடமாக தயாரிக்கப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் விசேட கணினிகளின் உதவியோடு சகல ஸ்மார்ட் கிளாஸ் அறைகளும் உருவாக்கப்பட்டுள்ளன. சகல ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஹையர் மடிக் கணினிகள் வழங்கப்படுவதோடு, இவை வயர்லெஸ் அக்ஸஸ் பொயின்ட் ஒன்றின் மூலம் கிளாஸ் ரூம்கிளவுட் ஒன்றுடன் தொடர்பு படுத்தப் படுகிறது. வயர்லெஸ் அக்ஸஸ் பொயின்ட் ஒன்றின் செயல்பாட்டுடன் மற்றும் ஸ்மார்ட் கிளாஸ் அறைகளின் செயற்பாட்டை கட்டுப்படுத்தும் செயலி ஒன்றின் ஊடாக ஆசிரியர்களுக்கு தனது மாணவர்களின் நடவடிக்கைகளை மிகவும் நெருக்க மாக கண்காணித்து தேவையான கல்விசார் வழிக்காட்டல்களை வழங்கமுடியும். மாணவர் களுக்கு இடையில் ஒருவருக்கு ஒருவர் இணைந்து செயற்படுத்தும் திட்டங்கள், விளக்கவுரைகள் மேற்கொள்ளும் போது மிகவும் நன்மை பயக்கும் வகையில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடு வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் போது Hi Board ஒன்றுக்கு புரொஜெக்ட் செய்யும் வசதி உள்ளதோடு, இதில் இடைவினை செயற்பாட்டுடைய ஸ்மார்ட் திரையொன்று உள்ளதோடு, ஆற்றல்மிக்க கண்ணாடிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள பெக்போர்டு பேனலும் இந்த ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறையில் உள்ளது. இதில் சாதாரண சோக், டஸ்ட்லஸ் சொக் மற்றும் மாக்கர் பேனைகளால் எழுதக்கூடிய வசதி உள்ளது. இந்த டிஸ்பிளே உபகரணங்களில் பல வடிவங்கள், குறிகள் மற்றும் அறிவியல் ஆய்வுகளுக்கான பில்ட் இன் உதவியுடன், மென்பொருள் இயங்குவதால் ஆசிரியர்களுக்கு செயல் திறனுடன், மிகவும் இலகுவாக விரிவுரைகளை மேற்கொள்ள முடியும். மேலும் Hi Board மூலம் மேற்கொள்ளப்படும் பாடத்திட்டங்கள் தன்னியக்கமாக மாணவர்களின் மடிக்கணினிகளுக்கு பதிவேற்றம் செய்யப்படுகின்றது.

வகுப்பறைமுடிந்ததன் பின்னர் மாணவர்களுக்கு தமது மடிக்கணினியை சார்ஜிங் டொலியில் வைத்துவிட்டு செல்லமுடியும், அதேபோல் மடிக்கணினியை திருடர்களிடமிருந்தும், மின்னணு சேதங்களிலும் பாதுகாத்துக்கொள்ள முடியும். இந்த ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறையின் ஒவ்வொரு மடிக்கணினியும் ஆசிரியர்களின் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளக்கூடிய தொழில்நுட்ப சிறப்பம்சம் உள்ளதால் மாணவர்கள் தேவையற்ற விதத்தில் இணையங்களில் உலாவுதல், USB பிளாஸ் ட்ரவ்ஸ் மற்றும் CD மூலம் காணொளிகளை பார்வையிடுதல் போன்ற சலுகைகள் தடைசெய்யப்பட்டுள்ளது.

உங்கள் கல்வி நிறுவனத்திற்கும் ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறைகள் திட்டத்தை செயற்படுத்துவதற்கு தேவையாயின் 0775 289270 என்ற இலக்கத்தை தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

---

## மூன்றாவது ஆண்டாகவும் SLT Speed Up சைக்கிள் சவாரி செப்டெம்பரில்

நாட்டின் சைக்கிளோட்டத்தை அடுத்த கட்டத்திற்கு இட்டுச்செல்லும் இலங்கையின் நீண்டதூர சைக்கிளோட்ட பந்தயமான "SLT Speed Up சைக்கிள் சவாரி" மூன்றாவது முறையாகவும் வரும் செப்டெம்பரில் நடைபெறவுள்ளது.

ஆண்களுக்கான பந்தயம் வரும் செப்டெம்பர் 4 ஆம் திகதி ஆரம்பமாகி செப்டெம்பர் 8 ஆம் திகதி முடிவடையவுள்ளது. பெண்களுக்கான போட்டி செப்டெம்பர் 7 மற்றும் 8ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதோடு இலங்கை சைக்கிள் பந்தய வரலாற்றில் முதல் முறை நடைபெறவிருக்கும் இரண்டு நாள் போட்டிகள் இலங்கை மகளிர் சைக்கிளோட்ட வீராங்கனைகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இலங்கை சைக்கிள் பந்தய வரலாற்றை மாற்றும் வகையில், முதல் முறையாக விசேட தேவை உடையோருக்கான பாரா சைக்கிள் பந்தய நிகழ்வும் செப்டெம்பர் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

820 கிலோமீற்றர் தூரம் கொண்ட ஆடவர் மற்றும் 175 கிலோமீற்றர் தூரம் கொண்ட பெண்கள் ஆகிய இரண்டு பிரிவு போட்டிகளும் கொழும்பில் இருந்து ஆரம்பமாகி குளியாபிட்டியவில் முடியும். 75 கிலோமீற்றர்கள் கொண்ட பாரா போட்டி குருநாகலில் ஆரம்பித்து குளியாபிடியில் முடியவுள்ளது.

இலங்கையின் முதன்மையான தொலைத்தொடர்பு வழங்குனரான சிறிலங்கா டெலிகொம் (SLT), இலங்கை சிக்கிள் சம்மேளனத்துடன் (CFSL) இணைந்து இந்த போட்டிகளை நடத்துகிறது.

சிறிலங்கா டெலிகொம், சைக்கிளோட்ட வீரர்கள் இருக்கும் இடத்தை கண்டுபிடிக்க தானியங்கி கண்காணிப்பு அமைப்பு, முடிவுகளை கணிக்க மின்னணு நேர அமைப்பு உட்பட புதிய அம்சங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களை இந்த ஆண்டு போட்டிகளில் பயன்படுத்தவுள்ளது. இலங்கையின் சைக்கிள் பந்தயத்தின் தரத்தை உயர்த்த மற்றும் மேம்படுத்தும் நோக்கிலேயே இது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சைக்கிளோட்டம் நாட்டின் பிரபலமான விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கையாக உள்ளது. இந்த முக்கியத்துவத்தை புரிந்த SLT ஒரு சமூக பொறுப்புவாய்ந்த கூட்டுத்தாபனம் என்ற வகையில் நாட்டின் திறமைகளை கண்டறிய 2016இல் SLT Speed Up சைக்கிள் சவாரி போட்டியை அறிமுகம் செய்தது. முந்தைய இரண்டு போட்டிகளும் பெரும் வெற்றி பெற்றது.

இளைஞர்களிடையே ஆர்வத்தை அதிகரிக்கும் வகையில் அணிகளில் குறைந்தது இரு சைக்கிளோட்ட வீரர்கள் 23 வயதுக்கு குறைந்தவர்களாக இருப்பதை ஏற்பாட்டாளர்கள் ஊக்குவித்துள்ளனர்.

நாட்டின் சைக்கிள் பந்தயத்தில் ஆர்வமுள்ளவர்களின் விளையாட்டுப் போட்டிக்கு அப்பால் இந்த சைக்கிள் பந்தயத்தின் சுகாதார, சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார பெறுமானங்களை அதிகரிக்கவும் SLT இலக்காக கொண்டுள்ளது.

இலங்கையின் சைக்கிள் பந்தய அட்டவணையில் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட மற்றும் மதிப்புமிக்க பிரபலமான SLT Speed Up சைக்கிள் சவாரியில் வெற்றி பெறுபவர்களுக்கு மிக உயர்ந்த பணப்பரிசுகள் வழங்கப்படும். ஆடவர் பிரிவில் வெற்றியாளருக்கு ஒரு மில்லியன் ரூபாய் வழங்கப்படுவதோடு பெண்கள் பிரிவில் வெற்றிபெறுபவர்கள் மற்றும் பாரா பந்தயத்தில் வெற்றி பெறுபவர்களுக்கு முறையே ரூபாய் 250,000 மற்றும் ரூபாய் 150,000 வழங்கப்படும்.

---

# University of Jaffna
## Department of Zoology
### Extension Programmes in Molecular Biology 2018 / 2019
### Certificate Course in Molecular Biology Laboratory Techniques

Application are invited from suitable candidates (see below for required qualifications) who wish to follow the Certificate Course in Molecular Biology Laboratory techniques (Extension programmes) conducted by the Department of Zoology, University of Jaffna.

**Certificate Course in Molecular Biology Laboratory Techniques**

**Minimum qualification requirements:** This certificate programme is of vocational nature and does not carry any credits. This programme is parallel to the SLQF level 1 and NVQ LEVEL 2 (Certificate where the minimum entry requirements will be completion of G.C.E. Advanced Level (Biology/ Biotechnology) or with any other professional experience or qualification which deemed acceptable to the selection panel.

**Course structure:** The proposed course unit does not have any credit value and it consists of 80 contact hours including the practical sessions and theory classes.

**Registration fee:** 1, 000.00 LKR

**Course fee:** 15, 000.00 LKR to be paid upon registration (all inclusive)

Payable at after the selection of application (on or before the30th September 2018)

**Selection method:** By application screening and first come first served basis as the seat number is limited to 20 per batch

**Course duration:** 10 weekends

**Evaluation:**Candidates will be evaluated by means of continuous assessments, successful completion of experiments and on spot evaluation by the instructors.

**Award of certificate:** Candidates who successfully complete the course will be awarded with a certificate signed by Course coordinator, Dean/ Science and the Vice-Chancellor. Awardees can use abbreviation of the certificates as *Cer in MolBiol Lab Tech.*

**Application**

Specimen application form can be obtained from the University of Jaffna website: http://www.jfn.ac.lk/index.php/call-appli-molecular-biology-laboratory-techniques/

The completed self-made application can be sent as a scanned copyto thulasiwilliam@gmail.comor by post to Dr. Mrs. T.W.Shanthakumar, Coordinator, Certificate Course in Molecular Biology laboratory Techniques, Department of Zoology, University of Jafffna, P.O. Box. 57, Thirunelvely, Jaffna **on or before 1st September 2018.**

**For further details please contact:**

Dr. Mrs. T.W.Shanthakumar: thulasiwilliam@gmail.com

Fax: 0212222685

(10)

---

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
### பெறுகை அறிவித்தல்
### 2018/2019ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு, காவற்கடமை, சாரதி சேவைகளுக்கான விலைமனுக் கோரல்

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் 2018/ 2019ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு (Cleaning Service), காவற்கடமை, சாரதி போன்ற சேவைகளை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இல | சேவை | எதிர்பார்க்கப்படும் / தேவையான ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| NP/14/41(15)/02/PC/01 | சாரதி சேவை | 03 |
| | சாரதி உதவியாளர் | 03 |
| NP/14/41(15)/02/PC/02 | சுத்திகரிப்பு சேவை | கேள்விப் படிவத்திற்கு அமைவாக |
| NP/14/41(15)/02/PC/03 | பாதுகாப்பு சேவை | 03 |

01 சேவை வழங்குநர்கள் சுத்திகரிப்பு, காவற்கடமை, சாரதி சேவை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.

02 சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

03 சேவை வழங்குநர்கள் பெறுகை ஆவணங்களை வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 08.08.2018 தொடக்கம் 23.08.2018 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ 2000.00 ஐச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

04 பெறுகை ஆவணங்கள் 24.08.2018 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு "தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்". என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

05 கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

க.தர்சன்
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

(m.33667) (13.17)

## கிளிநொச்சியில்...

**கிளிநொச்சி, ஓக 8**

உதைபந்தாட்டக் கம்பம் சரிந்து வீழ்ந்து கிளிநொச்சியில் மாணவன் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை உதயநகர் பகுதியில் உள்ள மைதானம் ஒன்றில் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கிளிநொச்சி மத்தியமகா வித்தியாலயத்தச் சேர்ந்த மாணவனான மோகனதாஸ் மதியமுதனே இவ்வாறு உயரிழந்துள்ளார்.

உதைபந்தாட்ட கம்பம் சரிந்து தலையில் வீழ்;ததில் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டு சிகிச்சை பெற்ற போதும் அதில பயனேதுமின்றி மாணவன் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. இறப்பு குறித்த விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டனர்.

(21,35)

## மடு...

ஆவணி மாதத் திருவிழா நேற்று முந்தினம் திங்கட்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

மடுத் திருத்தலத் தின் பரிபாலகர் அருட்தந்தை எமிலியானுஸ் பிள்ளை தலைமையில் இடம்பெற்ற கொடியேற்ற நிகழ்வில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மடு பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார் உற்பட அருட்தந்தையர்கள் அருட் சகோதரிகள் மற்றும் பக்தர்களும் கலந்து கொண்டனர். திருவிழா தொடர்ச்சியாக நவ நாள் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப் படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை வேஸ்பர் ஆராதனையும் அதனைத்தொடர்ந்து மறு நாள் 15 ஆம் திகதி புதன் கிழமை காலை 6.30 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் தலைமையில் ஏனைய மறைமாவட்ட ஆயர்கள் இணைந்து கூட்டுத் திருப்பலியாக திருவிழாத் திருப்பலியை ஒப்பக்கொடுக்கவுள்ளனர்.

(21,56)

## அரசிலிருந்து...

கட்சித் தகுதியை வழங்குவது ஏற்றுக்கொள்ள முடியாது. எதிர்க்கட்சிப் பதவி வேண்டும் என்றால் அவர்கள் அரசை விட்டு வெளியேற வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிப் பதவி தொடர்பாக நேற்று நாடாளுமன்றில் நடந்த விவாதத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்துள்ளதாவது:

நாடாளுமன்றத்தில் வெவ்வேறு கட்சிகள் பிரதிநித்துவப்படுத்துகின்றன. அவற்றில் அரசில் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ஒரு தரப்பினர் எதிரணியில் அங்கம் வகிக்கின்றனர். எனினும் அவர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாகவே உள்ளனர். அவ்வாறு இருக்கையில் எதிர்க்கட்சிப் பதவியை தரக்கோருகின்றனர். ஆனால் இது சாத்தியமற்றதாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் 23 பேர் அமைச்சரவையில் உள்ளனர். அரசின் தீர்மானங்களை முன்னெடுக்கின்றனர். ஆகையால் அதே அணியை எதிர்க் கட்சியாக அங்கீகரிக்கக் கோருவது ஏற்றுக் கொள்ள முடியாது - என்றார்.

(ற-61)




### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்
### விலைமனு கேள்விக்கான அழைப்பு
### மருத்துவ உபகரணங்கள், அலுவலகப் பொருள்களுக்கான பெறுகைகள்
### HSDP, PSDG, Line ministry– 2018

பிராந்திய பெறுகைகள்குழு தகுதியான, தகைமை வாய்ந்தவர்களிடம் கீழ்வரும் பொருள்களுக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது.

| Reference No | Item | Qty | Bid Security |
|---|---|---|---|
| NP/RDHS/LM/ME/01 | Multiparamonitor | 17 | 60,000.00 |
| | Infusion Pumps | 16 | |
| | Micro hemato crit | 05 | |
| | Adjustable bed | 18 | |
| NP/RDHS/PSDG/OE/01 | Mattress (Single bed) | 50 | 10,000.00 |
| | Almerah Half | 02 | |
| | Wooden Rack | 05 | |
| NP/RDHS/HSDP/ME/12 | Medical Refrigerator | 04 | 20,000.00 |
| | ICU Ventilator | 01 | |
| | Duppler Scan | 01 | |
| | Duppler Hand | 01 | |

| Reference No | Item | Qty | Bid Security |
|---|---|---|---|
| Np/RDHS/LM/OE/01 | Fax Machine | 01 | 40,000.00 |
| | Airconditioner 18000BTU | 10 | |
| | Airconditioner 9000BTU | 01 | |
| | Airconditioner 24000BTU | 02 | |
| | Airconditioner 36000BTU | 03 | |
| | Refrigerator | 12 | |

* ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கமுடியாத கேள்விபத்திர பணம் ரூபா 500/=

1. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 2222278 / 4557. ext 20) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
2. ஒவ்வொரு பெறுகைக்கும் மேலே சொல்லப்பட்ட பொருத்தமான உத்தரவாத முறி (Bid Security) இணைக்கப்படுதல் வேண்டும். உத்தரவாத முறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
2. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் 'Application for Bid documents' என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மேலே குறிப்பிட்ட தொகையை காசாக செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் 09.08.2018 தொடக்கம் 28.08.2018 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.30 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
3. விலைக்கேள்விகள் **29.08.2018** ஆம் திகதி **10.00** மணிக்கு முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ மேலதிக பிரதிப்பணிப்பாளர் (நிதி) அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் 29.08.2018 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு திறக்கப்படும் இதற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சமூகமளிக்கலாம்.

வைத்திய கலாநிதி க.நந்தகுமாரன்
தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

(IN/33669)(10)






## SARUKAYA CONSTRUCTION (pvt) LTD (CIDA Grade C4)

எமது நிறுவனம் சார்பாக யாழ்.பல்கலைக்கழகத்தின் யாழ்/ கிளிநொச்சி வளாகங்களில் வேலை செய்வதற்குப் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

1. **Quantity Surveyor**
2. **Work Supervisor**
3. **Draughtsman**
4. **Electrician**

தகைமை உடையோர் கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்குத் தங்களது சுயவிவரக்கோவையினை 03 நாள்களுக்குள் அனுப்பி வைக்கவும்.

**Email:- vacancynsc@gmail.com**
**Fax :- 021 221 3663**

## SARUKAYA CONSTRUCTION (pvt) LTD (CIDA Grade C4)


எமது நிறுவனம் சார்பாக யாழ்.பல்கலைக்கழகத்தின் யாழ்./ கிளிநொச்சி வளாகங்களில் வேலை செய்வதற்குப் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

**1) காப்பென்ரர் 2) மேசன்**
**3) வளிசீராக்கி (AC) பொருத்துநர்**
**4) வெல்டர் 5) அலுமினியம் பொருத்துநர்**
**6) கூலியாள்கள்**

தகைமை உடையோர் தொலைபேசியின் ஊடாக அலுவலக நேரத்தில் தொடர்புகொண்டு நேரில்வரவும்.

தொடர்புகளுக்கு
**இல.09, நந்தாவில் ஒழுங்கை, தாவடி.**
**077 712 0945, 021 221 3663**

## மரண அறிவித்தல்



பிறப்பு 02 . 12 . 1954
இறப்பு 05 . 08 . 2018

## சிவகுரு அரசலிங்கம்

**(குறாஸ் புடைவைகடை உரிமையாளர்)**

பருத்திக்கலட்டி சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவகுரு அரசலிங்கம் 05.08.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சிவகுரு - சின்னம்மா தம்பதியரின் செல்வப் புதல்வனும், காலஞ்சென்ற பொன்னையா மற்றும் இலட்சுமி தம்பதியரின் மருமகனும், சறோஜினியின் அன்புக் கணவரும், அரவிந், அபிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், குமுதன், துஷனா ஆகியோரின் மாமனும், சண்முகலிங்கம், சிவசோதிலிங்கம், லிங்கேஸ்வரி, லிங்கசோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தாரா, குட்டி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.08.2018) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : **குடும்பத்தினர்.**

**குறாஸ் -077 510 1092** (CC2914)

## கண்ணீர் அஞ்சலி

06.08.2018 அன்று அமரத்துவம் அடைந்த எமது பாடசாலை ஆசிரியர்

**திருமதி**
**பிறேமா இந்திரன்**



பிறப்பு 19.10.1963 இறப்பு 06.08.2018

அவர்களின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி விப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

**துயர் பகிர்வோர்**
**யாழ்/இளையதம்பி இந்து வித்தியாலய பாடசாலைச் சமூகம்**

(cs.16471) (13.17)

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் பொதுச் சபை உறுப்பினரான
திருமதி **சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்**
(சிரேஷ்ட விரிவுரையாளர் - வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லச் சிறார்கள்.**
**சைவ வித்தியா விருத்திச் சங்கம்,**
**கலாசாலை வீதி, திருநெல்வேலி.**

(cs.14559) (13.17)

## MINISTRY OF HOUSING AND CONSTRUCTION
## DEPARTMENT OF BUILDINGS
## INVITATION FOR BIDS

**Additional Work of Pharmacy Building at Ayurvedic Hospital, Kaithady.**

1. **The Chairman, Regional Procurement Committee,** on behalf of the **Department of Buildings** now invites sealed bids from eligible and qualified bidders for **"Additional Work of Pharmacy Building at Ayurvedic Hospital, Kaithady"** as described below and estimated to cost Rs.2.82 million.(Excluding VAT)
   The construction period is **60 Days**
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been black listed and shall be registered in the field of building construction for Grade C7 or above with the Construction Industry Development Authority (CIDA), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
4. Interested bidders may obtain further information from the **Chief Engineer's Office (Zone 2), Department of Buildings,** and inspect the Bidding Documents at the same address on any working day from **9:00hrs to 16:00 hrs.**
   Contact numbers are: Phone: 021 - 2222781,
   Facsimile : 021 - 2222781
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Jaffna** from **08.08.2018** until **23.08.2018** from **9:00hrs to 15:00 hrs** upon payment of a non refundable fee of Rupees Two thousand & Five hundred only **(Rs.2,500/-).**
6. Bids shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Jaffna to reach on or before 10.00 hrs on 24.08.2018.** Bids will be opened soon after closing at the **Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Jaffna** in presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid for a period of 91 Days from the last date fixed for receiving of Bids or any extended period.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - in the form included in Section 09 of the bidding document
   - in favour of **Director General of Buildings**
   - for an amount of **Rs.56,000.00**
   - valid up to **21.12.2018**
   - issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data

**Eng. A.Nawas Atham**
**Director (R2)**
**Department of Buildings**
**2nd Floor,"Sethsiripaya",**
**Battaramulla.**

## வாகனம் விற்பனைக்கு

PP - XXXX Batta தரமான நிலையில் உள்ளது. கைக்கு (80 000/=) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - **077 210 6324, 077 159 7587**

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் மொத்த பலசரக்கு வியாபார நிலையத்திற்கு சிட்டை எழுதுநர் விற்பனைப் பிரதிநிதி உடன் தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
**தொடர்பு - 071 766 7715**

## வாடகைக்குண்டு

பருத்தித்துறை வீதியில் சகல வசதிகள் கொண்ட ரெஸ்ரோறண்ட் வாடகைக்குண்டு.
**077 486 0517, 077 595 2245**

## காணி விற்பனைக்கு

இல.22/3, புங்கன்குளம் றோட், கனகர் சந்திக்கு அருகில் (கொழும்புத்துறை சுவாமியார் வீதியில்) நில.பரப்பு 07 குளி 09 காணி விற்பனைக்கு உண்டு.
ஆனந்தன்- **077 329 1501/ 077 196 8633**

## வேலையாள் தேவை

A.D சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் வாகனம் ஓட்டுவதற்குத் தேவை.
பருத்தித்துறை வீதி, நீர்வேலி (கந்தசாமி கோயில் அருகில்)
077 789 0398

## காணி விற்பனைக்கு

கிளிநொச்சி, கணேசபுரம் கிராமத்தில் அமைந்துள்ள 1/4 ஏக்கர் காணித்துண்டு விற்பனைக்குண்டு.
**தொடர்பு - 077 746 6598,**
**0041 766401962** (Viber)
**0033 6451 46150** (Viber)

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பிரபல உணவகம் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை.
- **உணவு பரிமாறுபவர்** (Waiters / **ஆண்** ( Hotel Management **விரும்பத்தக்கது**)
- **காசாளர் பெண்** (Cashier) **பெண்** ( A/L)
- **அரவை தொழில் தெரிந்தவர்கள்**

**உணவு, தங்குமிட வசதி இலவசம், சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.**
**தொடர்பு - 077 3287 485**

## தொழில்நுட்ப உத்தியோகத்தர் (IO) தேவை

யாழ்.நகர் **A9** வீதியில் நிர்மாணிக்கபட்டுக் கொண்டிருக்கும் 4 மாடிகளைக் கொண்ட கட்டடத்துக்கு தகைமையுள்ள. **Finishing** வேலையில் அனுபவம் மிக்க தொழில்நுட்ப உத்தியோகத்தர் முழுநேரமாகத் தேவை.
தகைமை, தொழில் செய்த முகவரிகள், அனுபவகாலம் என்பன தெளிவாகக் குறிப்பிட்டு விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி..

**விளம்பர இல. 1010**
**மே/பா உதயன்**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(CS/18806) (13.17)

## E.S Printers

மக் பிரின்ட் (MUG) 450/=



# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472

## கருணாநிதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் பரிசீலிக்கப்படும் என்று அறிவித்தார் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி.

இரவு 8 மணியளவில் தலைமைச் செயலர் கிரிஜா வைத்தியநாதனின் சார்பில் ஓர் அறிக்கை வெளியானது. அதில் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியின் சில நிலைப்பாடுகள் வெளிப்படுத் தப்பட்டன. அந்த அறிக்கையில் 'சென்னை - மெரீனா கடற்கரையில் நினைவிடங்கள் அமைப்பது தொடர்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் நடை பெற்று வருவதால் தி.மு. கழகத்தின் கோரிக்கையை சாதகமாகப் பரிசீலிக்க முடியாதுள்ளது. பதிலாக கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக் கழகத்துக்கு எதிராக 2 ஏக்கர் நிலத்தை கலைஞரின் நினைவிடத்தை அமைக்க அரசு பரிந்துரைக்கிறது' என்று குறிப்பிட்டிருந்தது. இதனால் கருணாநிதி யின் உடல் எங்கு அடக்கமாகும் என்பது தொடர்பில் நேற்று இரவு குழப்பநிலை இருந்தது.

**தொடர் கோரிக்கையும் தொண்டர்கள் போராட்டமும்**

இரவு 8.30 மணியளவில் தி.மு. கழகத் தின் செயல் தலைவர் ஸ்டாலின், அண்ணா நினைவிடத்துக்கு அருகில் கலைஞரின் உடலை அடக்கம் செய்ய அனுமதி தரும்படி தமிழக முதல்வரை மீண்டும் கோரிக்கை வைத்தார். 'அண்ணா நினைவிடத்துக்கு அருகில் அடக்கமாவது கலைஞருக்கு உரிய தார்மீக உரிமை' என்றும் ஸ்டாலின் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். இரவு 9 மணியளவில், கருணாநிதியை அண்ணா நினைவிடத்துக்கு அருகில்தான் அடக்கம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி தி.மு.கழக தொண்டர் களும், இரண்டாம் நிலை அரசியல் தலைவர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட னர். இதனால் பொலிஸார் அவ்வப்போது தடியடி நடத்தியதையும் அவதானிக்க முடிந்தது.

**சட்ட உதவியை நாடிய தி.மு.க**

அண்ணா நினைவிடத்துக்கு அருகில் கருணாநிதியை அடக்கம் செய்வதில் சட்டச் சிக்கல் உள்ளது என்று தெரிவித்து தமிழக அரசு கைவிரித்த நிலையில் இரவு 9.30 மணியளவில் நீதிமன்றத்தின் உதவியை நாடியது தி.மு.க. தமிழக உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி குலுவாடி ரமேஸ் இரவு 11 மணியளவில் தி.மு. கவின் கோரிக்கை தொடர்பில் விசாரிக்க ஒப்புதல் வழங்கினார். இதனால் இதன் தொடர்ச்சியான நகர்வு கள் இன்றும் இருக்கலாம் என்கின்றனர் அவதானிகள். (ம)

## அறிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு, ஓக.8

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனின் கருத்துத் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணை அறிக்கை சட்டமா அதிபரிடம் வழங்கப்பட வில்லை. அது வழங்கப்பட்ட பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இவ்வாறு சபாநாய கர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தொடர்பாக நாடாளு மன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வ ரன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அரச நிகழ்வொன்றில் கூறிய கருத்து தெற்கில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. அதையடுத்து அவர் வகித்த இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து விலகியிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் உரை தொடர்பில் தெற்கில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடு களுக்கு அமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். இது தொடர்பில் பலரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப் பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் நேற்று நாடாளுமன்று சென்றிருந்தார். அவர் ஆளும்கட்சியின் பக்கம் பின்வரிசையில் அமர்ந்திருந்தார். அப்போது ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தொடர்பில் எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை என்ன? என்று கேள்வியெ ழுப்பினார். அதற்குப் பதிலளித்த சபாநாயகர் கரு ஜயசூரிய, விசாரணை அறிக்கை சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்படவில்லை. அவரிடம் ஒப்படைத்ததும் அறிக்கையை அவர் என்னிடம் கையளிப்பார். அதன்பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கையை முன்னெடுக்க முடியும் என்று தெரிவித்தார். (ற)

---

### முன்பள்ளி ஆசிரியர் டிப்ளோமா பயிற்சி நெறி

- UGC (இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு) ஆல் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.
- பயிற்சி நிறைவில் வேலைவாய்ப்பு.
- கற்கைநெறி கட்டணம் மிகக் குறைவு.
- பயிற்சிநெறியின் போது கற்பித்தல் பயிற்சி வழங்கப்படும்.
- அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
- தகுதி – O/L
- காலப்பகுதி - 01 வருடம்

**வகுப்புகள் ஆரம்பம் : 12.08.2018 ஞாயிறு காலை 9.00**


JATE PVT LTD. மூன்றாம் நிலை கல்விக்கான யாழ் அக்கடமி
JAFFNA ACADEMY FOR TERTIARY EDUCATION
Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
T.P. No.:- 077 3867458, 021 2216933

குறிப்பு.-
மேற்படி நிறுவனத்திற்கு கணினி பெண் உதவியாளர் தேவை.
தொடர்பு - 077 386 7458

(CS 18852/15/17)

---

### ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**சி.சுந்தரலிங்கம்**
**(தங்கசோதி)**
(முன்னாள் சிவகுரு வித்தியாசாலை - சமையலாளர்)

பிறப்பு 28.04.1957
இறப்பு 21.07.2017

திருப்பூர் வீதி, மயிலிட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி சுந்தரலிங்கம் அவர்களின் ஓராண்டு நினைவுதினம் நாளை (09.08.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதையும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்

சிவன்கோயில் வாசல்,
வல்வெட்டித்துறை.

மனைவி -
சு.இராஜலட்சுமி

(CS/00560)(11,17)

---

### மரண அறிவித்தல்

## கதிரன் மாணிக்கம்



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட கதிரன் மாணிக்கம் கடந்த (06.08.2018) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான கதிரன் - செல் லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் அன் புக் கணவரும் கந்தையா, சின்னத்தம்பி, அருந்தவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, நாகம்மா ஆகியோரின் அன்புமைத்துனரும்பாசமலர், தவமலர், தர்மராசா(ரகு), சசிமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரபாலன், லலிதராணி, ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்புமாமனாரும் சதீஸ், றெஜினா, திஷாந், சகன்யா, றோபிதா, சரண்யா, சுகன்யன், றோகிணி ஆகியோரின் அன்புப் பேரனும் நேருஜா, கஸ்மியா, அனன்யா ஆகியோரின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2018) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரிபான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கைதடி மேற்கு, கைதடி.**
**077 839 7725**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 18848/15/17)

---


### விசேட அற்றோனி தத்துவத்தை இரத்து செய்தல்

இல. 147, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி என்ற முகவரியைச் சேர்ந்த கனகசபை தர்மராஜா ஆகிய நான் பிரசித்த நொத் தாரிசு தா. அரியரத்தினம் அவர்களால் 20.04.2012 ஆம் திகதி 5301 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விசேட அற்றோணித்தத்துவம் (அதிகார தத்துவம்) மூலம் இல:90 கனகாம்பிகைக்குளம் கிளிநொச்சி என்ற முகவரி யைச்சேர்ந்த இராசரத்தினம் கிரிதரன் என்பவரை எனது அற்றோணித்தத்துவராக நியமித்து இருந்தேன். இன்றிலி ருந்து இராசரத்தினம் கிரிதரன் அவரை எனது அற்றோ ணித்தத்துவகாரரிலிருந்து நீக்கம் செய்கின்றேன் என்று பிரசித்த நொத்தாரிசு தா. அரியரத்தினம் அவர்களால் 20.04.2012 அன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட 5301 ஆம் இலக்க அற்றோணித்தத்துவபத்திரத்தை நான் மீள பெற்றுக் கொள்கிறேன் என்றும் இன்றிலிருந்து இ.கிரிதரனால் செய்யப்படும் எச்செயலிற்கும் நான் பொறுப்பாளி இல்லை என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

---

### மரண அறிவித்தல்கள்

## இமானுவேல் லூயிஸ் அன்ரனி



தோற்றம் 18.06.1976 மறைவு 06.08.2018

சில்லாலையைப் பிறப்பிடமா கவும் பருத்தித்துறையை வசிப் பிடமாகவும் கொண்ட இமானுவேல் லூயிஸ் அன்ரனி (பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்) கடந்த (06.08.2018) திங்கட்கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இமானு வேல் மற்றும் மரியம்மா தம்பதி களின் அன்பு மகனும் ஆனந்தராஜா - சுமதி தம்பதிகளின் அன்பு மரு மகனும் சியாமளா (கரவெட்டி பிரதேச செயலக அபிவிருத்தி உத்தி யோகத்தர்) வின் அன்புக் கணவரும் வருணிஜன், டினுஜன், இனோஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சேவியர், காலஞ்சென்ற மேரி யூட் அன்ரனி மற்றும் வசந்தா, வனஜா, வனிதா, அருட்தந்தை ஜோர்ஜ் அன்ரனி (செபமாலைத் தாசர்சபை), ஜோசப் அன்ரனி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நெல்சன், ரட்ணகுமார், தேவ ரஞ்சித், அழகுராணி, சுமிதா, பிரசாந்தி, பிரியதர்சினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதியஞ்சலிக்காக இன்று (08.08.2018) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு (புனித யாகப்பர் ஆலயத்திற்கு முன்பாக) என்னும் முகவரியில் வைக்கப்பட்டுபுனித யாகப்பர் ஆலயத்தில் முற்பகல்10.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 558 7303**

**தகவல்: குடும்பத்தினர்.**

---



## மாசிலாமணி சம்பந்தன் (சாம்)

**(முன்னாள் உற்பத்தி முகாமையாளர் - (Production Manager) மகாராஜா நிறுவனம்)**

மணியகாறன் வளவு, பறாளாய் வீதி, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, அமெரிக்காவை வதிவிடமாகவும் கொண்ட மாசிலாமணி சம்பந்தன் 05.08.2018 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாசிலாமணி - சிவயோகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், MFSஜெயசிந்த் (சிந்தியா) வின் பாசமிகு கணவரும், W.T.டல்ரீன் சுந்தரி (சுந்தி - அமெரிக்கா) கிளிவ்ராஜன் (ராஜன் - கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், W.திரோன், U.M.மிதிலா ஆகியோரின் மாமனாரும், W.தியாரா, W. டிரவின், W.திரஸ்டன் (அமெரிக்கா), S.H.திவ்யா, S.D.டினையா, S.J. எடவின்டு (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பேரனும், சிவசண்முகமூர்த்தி (பேபி - புளொலி), காலஞ்சென்ற கனேஷகுமார் மற்றும் ஜெயானந்தன் (சாளி - கொழும்பு) ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் Mahinda Panagoda Florist.No.400D, New Kandy Road, Thalagama, Koswatta மலர்ச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இறுதிக் கிரியைகள் நாளை (09.08.2018) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியள வில் நடைபெற்று பொறளை இந்து மயானத்தில் பிற்பகல் 4.30 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS/18840)(11/17)

**011 256 9265. 077 348 8883**

சிவமயம்

## கோண்டாவில் குமரகோட்டம்



### சித்திபைரவ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் திருமஞ்ச வெள்ளோட்டமும் திருமஞ்சத் திருவிழாவும்

**08.08.2018 புதன்கிழமை**

திருமஞ்ச உருவாக்கம் - சிற்ப சக்கரவர்த்தி ஜீவரத்தினம் ஸ்தபதி அவர்களின் இளையமகன் ஜெயதீஸ் அவரும் குழுவினரும், ஜீவரத்தினம் ஸ்தபதி கலாசங்கமம், திருநெல்வேலி.

கோண்டாவில் குமரகோட்டம் பதியுறையும் அருள்மிகு சித்திபைரவ முத்துமாரி அம்பாளுக்கு நிகழும் மங்களகரமான விளம்பி வருடம் ஆடித்திங்கள் 23 ஆம் நாள் (08.08.2018) புதிய மூன்று வாசல் திருமஞ்ச வெள்ளோட்டவிழா நடைபெற திருவருள் பாலித்துள்ளது. அனைத்து அம்பாள் மெய்யடியார்களையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

**08.08.2018 புதன்கிழமை காலை 10 மணியளவில் திருமஞ்ச வெள்ளோட்டமும் சிற்பக்கலைஞர்கள் கௌரவிப்பும் நடைபெறும்.**

**இரவு 7 மணியளவில் திருமஞ்சத்திருவிழாவும், ஈழத்து நாதஸ்வர வித்துவான் குமரன் குழுவினரின் விசேட மங்கள வாத்திய இசைக் கச்சேரியும் நடைபெறும்.**

அனைவரும் வருக அம்பாள் அருள் பெறுக

கோண்டாவில் குமரகோட்டம்.

திருமஞ்ச உபயகாரர் வை.ஜெகநாதன் குடும்பம்.

## மரண அறிவித்தல்

### திருமதி நவமணி கதிரமலை



மண்ணில் 21.07.1934

விண்ணில் 07.08.2018

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு மாளிகாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவமணி கதிரமலை நேற்று (07.08.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு சுந்தரம் (ஆச்சி) தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான அப்பச்சி முத்துப்பிள்ளை (கந்தரோடை) தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அப்பச்சி கதிரமலையின் (ஓய்வு பெற்ற படவரைஞர், கந்தரோடை) அன்பு மனைவியும் ஜெயலட்சுமி (ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), சோதிமதி (வவுனியா), சிறிபரன் (London), தயாளினி (கொழும்பு) கேதீஸ்வரி (Holland) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்றவர்களான கணேசமூர்த்தி (உத்தியோகத்தர், சிமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை), நகுலேஸ்வரம்பிள்ளை (ஓய்வு பெற்ற உதவி தொழில் ஆணையாளர், வவுனியா) மற்றும் அலிசன், கனேந்திரன் (கணக்காளர், சென். தோமஸ் கல்லூரி கொழும்பு), தயாபரன் (Holland)) ஆகியோரின் அன்புமாமியும் கஜதாரணி, ரகுலவரணி, யுதீஸ், நிகர்ஜன், Dr.திருமகள் - Dr. திருவருட்செல்வன், Dr. யசீவன் - Dr. விஜய தர்சினி, அரவிந் - சோபனா, மயூரி, லினேஸ், நாராயணி, விதுஷன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் திருக்கார்த்திகன், ராகவர்ஷனி, சப்தகன், சேயோன், ஹர்சன் ஆகியோரின் அன்புப்பூட்டியும் காலஞ்சென்றவர்களான பத்மநாதன் (ஓய்வு பெற்ற எழுதுவினைஞர்), வேலாயுதம்பிள்ளை (ஓய்வு பெற்ற பொலிஸ் பரிசோதகர் கொழும்பு) மற்றும் நடராசா (ஓய்வு பெற்ற முகாமையாளர், மரக்கூட்டுத்தாபனம்), துரைசிங்கம் ( ஓய்வு பெற்ற விளையாட்டு அதிகாரி) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.08.2018) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு இல.24, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, கந்தரோடை சுன்னாகத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கைப்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**கந்தரோடை, சுன்னாகம்.**


கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 325
சீட்டிழுப்பு திகதி: 2018.08.07
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 89,842,538/-
T 27 34 37 72

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 335
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.08.07
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 57,713,500/-
வெற்றி இலக்கங்கள்
39 51 58 65 M

நியத ஜய
சீட்டிழுப்பு வாரம் 691
வர்ணம் : ஆரஞ்சு
திகதி 2018.08.07
வெற்றி இலக்கங்கள்
03 20 41 43 Y
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 13,411,984/-

ராசி
திகதி 07.08.2018
வெற்றி வாரம் 2343
வர்ணம் நீலம்
மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 01 15 21 54
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 4, 784, 548/=
2018.08.08ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 839
சீட்டிழுப்பு திகதி 2018.08.06 திங்கட்கிழமை
H 14 16 64 65
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 47,710,248/-
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்



ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472 esprintersjaffna@gmail.com



## மாபெரும் இசைநிகழ்ச்சி



அர்ச்சனா | ரமணி அம்மா | வர்ஷா | ஜஸ்கரன் சிங்

ஆகஸ்ட் 11 மாலை 4.00 மணிக்கு குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானம், நெல்லியடி.

ஆகஸ்ட் 12 மாலை 4.00 மணிக்கு வெலிங்டன் தியேட்டர் சதுக்கம் [லிங்கம் கூல்பார் முன்பாக] யாழ்ப்பாணம்.

Rs 300/= Rs. 500/= Rs. 1000/= மற்றும் VIP டிக்கெட்ஸ்

K.T.Prassath - 078 612 5929, 071 381 5114

Event Management - Ceylon Art Creation ( K.T.பிரசாத்)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண நிகழ்வும்

தோற்றம் 20 . 02 . 1949

மறைவு 11 . 07 . 2018



கடந்த (11.07.2018) புதன்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் கோபாலசிங்கம் நாகேஸ்வரி

அவர்களது 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நாளை (09.08.2018) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம்பெறும். தங்களை இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்.

நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

021 223 1527, 076 928 7321

## காற்றின்...

திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டிலும் , நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளிலும் (குறிப்பாக நாட்டுக்கு தென்கிழக்காகவும் வடமேற்காகவும் உள்ள கடற்பரப்புகளில்) காற்றின் வேகமானது குறிப்பிட்ட மட்டத்துக்கு அதிகரிக்கும் சாத்தியம் தற்போதும் உயர்வாகக் காணப்படுகின்றது.

மத்தியமலைப்பிரதேசங்களிலும்மற்றும்ஊவா, சப்ரகமுவ, வட, வடமத்திய, தென் மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் குருநாகல் மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

சப்ரகமுவ, மத்திய, மேல் மற்றும் தென் மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் 50 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-7)

## கடற்படை...

நிலத்தை வழங்க முடியாது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. மன்னார்மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இணைத்தலைவர்களில் ஒருவரான சாள்ஸ் நிர்மலநாதன் இது தொடர்பாக கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

போர் முடிவுற்ற பின்னர் புதிதாகப் படைமுகாம் அமைக்கும் தேவை இல்லை. புதிதாக 4 முகாம்கள் அமைப்பதற்காக தலா 2 ஏக்கர் வீதம் கடற்கரைப் பிரதேசத்தில் 8 ஏக்கர் கோரப்பட்டுள்ளது. இது மீனவர்களின் வாழ்வாதாரத்தைச் சிதைக்கும் செயலாகும். மன்னாரில் உள்ள பல கடற்படை முகாம்கள் சுற்றுலா மையங்கள் போன்றே இயங்குகின்றன. அதனால் நிலங்களை வழங்க முடியாது.

மன்னாரில் கரையோரங்கள் பல கடற்படையினர் மற்றும் ஏனைய திணைக்களங்களின் பிடியில் இருக்கின்றன. அதனால் மீனவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இந்த நிலையில் மேலும் நிலங்களைக் கோருவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

இந்தமுடிவைஅங்கிருந்தவர்கள்ஏற்றுக்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-105)

## 1,760...

கப்பட்டுள்ளன என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

மூனாமடு இராணுவமுகாமுக்கு அருகே உள்ள காணி ஒன்றில் இருந்தே இந்தத் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன. காணியில் வசிக்கும் பெண் கழிவுகளைப் புதைப்பதற்கு குழி வெட்டியபோது துப்பாக்கி ரவைகள் தென்பட்டுள்ளன. அதையடுத்து அருகில் உள்ள இராணுவ முகாமுக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு இராணுவத்தினர் தகவல் வழங்கியுள்ளனர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் துப்பாக்கி ரவைகளை மீட்டனர்.

மீட்கப்பட்ட துப்பாக்கி ரவைகள் ரி56 ரகத் துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படுபவை என்று கூறப்படுகின்றது. பொலிஸார் இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-21-110)

## உமிக்...

விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் அங்கு குவிக்கப்பட்டிருந்த உமி தீப்பற்றியிருந்தது தெரியாது குவியலின் மீது பாய்ந்துள்ளார். அதன்போது தீக்காயங்களுக்கு உள்ளானார் என்று தெரிவிக்கப்படுகின்றது. சிறுவனின் பெற்றோர்கள் வெளிநாட்டில் பணிபுரிகின்றனர் என்றும், சிறுவன் உறவினர்களுடன் வளர்கின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகள் வவுனியா பொலிஸாரால் மேற்கொள்ளப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-110)

## பொது...

டையில் தமக்கே எதிர்க்கட்சிப் பதவி தரப்பட வேண்டும் என்று கூட்டு எதிரணியினர் கோரிக்கை விடுத்தனர். இந்த விடயத்தைக் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடிய பின்னர், சட்ட ஆலோசனைகளைப் பெற்று முடிவை இந்த வாரத்தில் அறிப்பேன் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று வாய்மூல விடைக்கான வினா நேரம் முடிந்த பின்னர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பிய கூட்டு எதிரணியின் குழுத் தலைவர் தினேஸ் குணவர்த்தன வைத்த கருத்தை அடுத்து சபையில் சர்ச்சை ஆரம்மானது.

நாடாமன்றத்தில் எதிர்க்கட்சியில் எமக்கே அதிகளவிலான ஆசனங்கள் உள்ளன. தற்போது எமது குழுவில் 70 பேர் உள்ளனர். எனவே எதிர்க்கட்சித் தலைவர் பதவி எமக்கே பெற்றுத் தரப்பட வேண்டும் என நாம் கோரினோம். எழுத்து மூலமும் சபாநாயருக்கு அறிவித்தோம். இன்று (நேற்று ) தீர்மானத்தை வழங்குவதாகக் கூறியிருந்தீர்கள். புதிய தீர்மானமொன்றை வழங்குவதாகவே கூறினீர்கள். எங்கே அந்தத் தீர்மானம்?. எமக்கு எதிர்க்கட்சிப் பதவி தரவேண்டும். சம்பந்தனுடன் எமக்கு தனிப்பட்ட பிரச்சினை இல்லை. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி தலைவராக இருந்த போதும் அவருக்கு கீழ் நாம் செயற்பட்டுள்ளோம். சம்பந்தன் எமக்கு பிரச்சினையில்லை. ஆனால் நாடாளுமன்றத்தில் ஜனநாயக உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். சம்பிரதாயத்தை மீறிச் செயற்படக் கூடாது. நாடாளுமன்றத்தின் ஜனநாயகம் தற்போது செல்லா காசாக மாறிவிட்டது. ஆகவே எதிர்க்கட்சித் தலைவர் பதவியை எமக்குப் பெற்றுத் தர வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

அப்போது சபை முதல்வரும், அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல எழுந்து கருத்துத் தெரிவித்தார். கூட்டு எதிரணி என்பது ஒரு கட்சியல்ல. அது ஒரு கும்பல் என்று அவர் கிண்டலடித்தார். அப்போது பக்கத்தில் அமர்ந்திருந்த அமைச்சர் ஜோன் அமரதுங்க, அது கட்சியல்ல, ஆவா கும்பல் என்றார்.

கிரியெல்லவின் கருத்தால் கூட்டு எதிர்க்கட்சியினர் சீற்றமடைந்தனர். அமைச்சருக்கு எதிராகக் கோசமிட்டனர்.

அதன்பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும எழுந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் விவகாரத்தில் ஆளும் கட்சி ஊடகங்கள் இரா.சம்பந்தனையும், தினேஸ்குணவர்த்தனவையும்சம்பந்தப்படுத்துகின்றன. தமிழ் ஊடகங்கள் இரா.சம்பந்னை முதன்மைப்படுத்திக் கருத்து வெளியிடுகின்றன. எமக்கு அவ்வாறான நோக்கமில்லை. ஆசன மட்டத்தில் எமக்கே அதிக ஆசனங்கள் இருக்கின்றன. ஒப்பீட்டு அடிப்படையில் எமக்கே எதிர்க்கட்சிப் பதவி வழங்கப்பட வேண்டும் - என்றார்.

தற்போது எதிர்க்கட்சியில் 7 வீதத்தை கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் 2.8 வீதத்தை கொண்ட கட்சிக்கு எதிர்க்கட்சி பிரதம கொறடா பதவியும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் 31 வீதத்தைக் கொண்ட எமக்கு ஒழுங்காக நேரம்கூட ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. நாடாளுமன்றத்தின் பழைய கட்சிகளான சமசமாஜக் கட்சி உட்பட பொதுஜன ஐக்கிய முன்னணி போன்ற கட்சிகளைப் பிரதிநிதித்துப்படுத்துவர்களே இந்த கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். ஆகவே இது குறித்து அவதானம் செலுத்த வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

உடனே எழுந்த சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல, சரி ஏனையவர்களை விட்டுவிடுங்கள். நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி என்ன? கூறுங்கள், உங்களின் கட்சி என்ன ? என்று கேட்ட போது டலஸ் அழகப்பெரும உட்பட ஏனையோர் திக்குமுக்காடி பதிலளிக்க முடியாமல் திண்டாடினர்.

கிரியெல்லவுக்கு எப்போதும் குழப்புவதே வேலையாகும் என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமாள் 100 நாள் ஆட்சியின் போது சுதந்திரக் கட்சியின் பலர் ஆளும் கட்சியில் இருந்த போதும் எதிர்க்கட்சித் தலைவராக நிமல் சிறிபால டி சில்வாவே செயற்பட்டார். ஆகவே நிமல் சிறிபால டி சில்வாவுக்கு எதிர்கட்சித் தலைவர் பதவி வழங்கியதைப் போன்று தினேஷ் குணவர்தனவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணக்கார, விமல் வீரவன்ச ஆகியோர் வலியுறுத்தினர்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை எமக்கு நீங்கள் பெற்றுத் தரமாட்டீர்கள். உங்களுக்கு உயர்மட்டத்தில் இருந்து அழுத்தம் வருவதனை நாம் அறிவோம். ஆகவே இந்தச் சந்தர்பத்தில்தான் முதுகெலும்புடன் செயற்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவரான இரா.சம்பந்தன், தெற்குப் பிரச்சினை மாத்திரமின்றி வடக்கு மக்களின் பிரச்சினை பற்றிக் கூட நடாளுமன்றத்தில் பேசுவது கிடையாது. அவர் ஒரு சிலரின் அழுத்தங்களின் பிரகாரமே அந்தக் கதிரையில் உள்ளார். ஆகவே அவரைப் பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக்க பெர்ணான்டோ கூறினார்.

எந்தவொரு அழுத்தமும் என்மீது பிரயோகிக்கப்படவில்லை. நான் அழுத்தங்களுக்கு அடிப்பணிய மாட்டேன். இது தொடர்பில் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் சட்ட ஆலோசனைகளைப் பெற்று இந்த வாரமளவில் அறிவிப்பேன் என சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார். (ற-61)

## முதுபெரும்...

குழாய் மாற்றப்பட்டது. இதையடுத்து அன்றைய தினம் பின்னிரவு அவரின் உடல்நிலை மோசமடைந்தது. அன்று முதல் அவரின் உடல்நிலை தொடர்ந்து ஏற்ற இறக்கமாகவே இருந்தது. இதனால் கோபாலபுரத்தில் உள்ள அவரது வீட்டில் இருந்து சென்னை காவேரி மருத்துவ மனைக்கு அவர் மாற்றப்பட்டார். கடந்த பத்து நாள்களாக காவேரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்றுவந்த அவரின் உடல் நிலையில் இடையிடையே அவ்வப்போது ஏற்ற இறக்கங்கள் ஏற்பட்டன. எனினும் ஒருமுறையேனும் 'கவலைக்கிடம்' என்ற பதத்தை காவேரி மருத்துவதுனை பாவிக்கவில்லை. 'பின்னடைவு' என்கிற பதத்தையே அது பாவித்து வந்தது. நேற்றுமுன்தினம் மாலை 'கருணாநிதியின் உடல்நிலையில் மிகப்பெரும் பின்னடைவு' என்று குறிப்பிட்டி ருந்தது. நேற்று மதியம் 'கருணாநிதியின் உடல்நிலை கவலைக்கிடம்' என்று குறிப்பிட்டது. நேற்று மாலை 5 மணியளவில் 'கருணாநிதியின் உடல் செயலிழக்கிறது. அவர் மிகவும் கவலைக்கிடமாக உள்ளார்' என்று குறிப்பிட்டது. இதைத் தொடர்ந்து மாலை 6.40 மணியளவில் வெளியிட்ட அறிக்கையில் 'கருணாநிதி காலமானார்' என்று மருத்துவமனை உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

6.10க்கு மறைந்தார்

கருணாநிதியின் உடல்நிலை தொடர்பில் நேற்று மாலை 5.30 மணி முதல் உச்சக்கட்டப் பதற்றநிலை நிலவியது. தி.மு. கழகத்தின் செயல் தலைவர் ஸ்டாலின், முதலமைச்சர் பழனிச்சாமி, பாதுகாப்புத்துறை அதிகாரிகள் ஆகியோர் திடீர் சந்திப்பு நடத்தினர். கருணாநிதியின் வீட்டார் மருத்துவ மனையை விட்டு வெளியேறி கோபாலபுரம் வீட்டுக்கு கண்ணீர் மல்கத் திரும்பினார்கள், மதுக் கடைகள் மாலை 6 மணியுடன் மூடப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது, பொலிஸார் குவிக்கப்பட்டனர், தமிழகத்துக்குள் நுழைவதற்கு பேருந்துகளுக்குத் தடை விதிக்கப்பட்டது, மெரீனாவில் பொலிஸார் குவிக்கப்பட்டனர் இவை அனைத்தும் கருணாநிதி தொடர்பில் ஏதோவொரு இமாலயச் செய்தியைச் சொல்வதற்குத்தான் என்று ஊகிக்க முடிந்தது. அனைத்தும் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதை அடுத்து கருணாநிதி 6.10க்கு மறைந்தார் என்று 6.40 மணிக்கு அறிவிக்கப்பட்டது. (ம)

## தொண்டர்கள்...

கத்தின் தலைமையகம், கோபாலபுரம் இல்லம் ஆகியவற்றுக்கு முன்னால் தொண்டர்கள் வெளிப்படுத்திய சாவு ஓலம் காண்போர் அனைவரையும் நிலைகுலைய வைத்தது என்கின்றன இந்திய ஊடகங்கள்.

கருணாநிதி காவேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நாள்முதல் பல்லாயிரக் கணக்கான தொண்டர்கள் மருத்துவ மனைக்கு முன்பாகத் திரண்டிருந்தனர். இரவு, பகல் பாராது 'வா தலைவா வா... எழுந்து வா...' என்று அவர்கள் முழக்கமிட்டுக் கொண்டிருந்தனர். நேற்று மாலை 6.40 மணிக்கு வெளியான அறிக்கையை அடுத்து சாவு ஓலத்தில் அதிர்ந்தது காவேரி. கருணாநிதி மருத்துவமனையில் இருந்து வெளியே செல்லும்போது தமது அலைபேசியில் உள்ள விளக்குகளை இயக்கவைத்து, கையசைத்து அவருக்கு விடை கொடுத்தனர்.

'கலைஞரின் மறைவை அடுத்து தி.மு. கழகத்தின் தொண்டர்கள் அத்துமீறாது, தவறான முடிவுகளை எடுக்காது கலைஞரதும், தி.மு. கழகத்தினதும் பெருமையை நிலைநாட்டும்படியாக அமைதி காக்கவேண்டும். நடந்து கொள்ள வேண்டும்' என்று தி.மு. கழகத்தின் செயல்தலைவரும், எதிர்கட்சித்தலைவருமான ஸ்டாலின் நேற்று இரவு 7.40 மணியளவில் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டார். (ம)

## மக்கள்...

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க.

எதிர்க்கட்சிப் பதவி தொடர்பில் நேற்று நாடாளுமன்றில் நடந்த விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார். அவர் தெரிவித்துள்ளதாவது:

எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தரக் கோரிப் பொது எதிரணியினர் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுக்கின்றனர். 42 உறுப்பினர்கள் இருந்தபோதும், பின்னர் 54 உறுப்பினர்கள் இருந்தபோதும் எதிர்க்கட்சிப் பதவியைக் கேட்டனர். இப்போது 70 பேர் உள்ளபோதும் எதிர்க்கட்சிப் பதவியைக் கோருகின்றனர். இவர்களின் கோரிக்கையில் எந்தவித அடிப்படை நியாயப்பாடுகளும் இல்லை.

நாடாளுமன்றில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆறு கட்சிகள் உள்ளன. அந்தக் கட்சிகளில் இருந்தே உறுப்பினர்கள் நாடாளுமன்றைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். 19ஆம் திருத்தத்துக்கு அமைய கட்சித் தன்மைகளைக் கைவிட்டுச் செயற்பட முடியாது. அவ்வாறு செயற்பாட்டால் எதிர்க்கட்சி ஒன்று இல்லாத நிலைமை தோன்றும்.

தற்போது எதிர்க்கட்சியினர் எண்ணிக்கை குறைவுதான். 3 கட்சிகளுமாகச் சேர்த்து 23 பேர்தான் உள்ளோம். நாம் பலம் குறைந்த எதிர்க்கட்சிதான். அதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். சில சந்தர்ப்பங்களில் பலவீனமாகவே உள்ளோம். ஆனால் நாடாளுமன்ற விதிமுறைகளுக்கு ஏற்ப தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முதன்மை எதிர்க்கட்சியாகச் செயற்பட முடியாது என்று ஒருபோதும் கூற முடியாது. பொது எதிரணியினர் தமக்குத்தான் மக்கள் பலம் உள்ளது என்கிறார்கள். 70 பேர் எதிர்க்கட்சியாக உள்ளனர் என்கின்றனர். முன்னாள் அரச தலைவர் ஒருவரும் இருக்கின்றார். அனுபவம் மிக்க தலைவர்கள் உள்ளார்கள் என்கிறீர்கள். இத்தனை பேசும் 70 பேர் ஏன் 23 பேரைக் கண்டு அஞ்ச வேண்டும். உங்கள் பலத்தைக் காட்டி அரசை விட்டு வெளியேறி எதிர்க்கட்சியில் அமர்ந்து கொண்டு ஆட்சியைக் கைப்பற்ற முடியுமே?. அதை விடுத்து ஏன் 23 பேர் உள்ள அணியில் தஞ்சம் புகுந்து செயற்பட வேண்டும்? - என்றார். (ற)

## அஞ்சலியும்...

சென்னை காவேரி மருத்துவமனையில் நேற்று மாலை 6.10 மணிக்கு இவ்வுலகை விட்டு பிரிந்து சென்றார் கருணாநிதி. அவரின் உடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக எப்போது வைக்கப்படும், எப்போது அடக்கமாகும் என்பது தொடர்பில் நேற்றுப் பெரும் எதிர்பார்ப்பு நிலவியது. இதன்படி சென்னை ராஜாதி ஹோலில் இன்று அதிகாலை 4.30 மணிமுதல் பொதுமக்களின் அஞ்சலிக்காக கருணாநிதியின் உடல் வைக்கப்படவுள்ளது. எனினும் எப்போது அவரின் உடல் அடக்கமாகும் என்பது, மெரீனா கடற்கரையா அல்லது அண்ணா பல்கலைக் கழக பகுதியா என்ற குழப்பத்தால் நேற்றுப் பெரும் சிக்கலுக்குள்ளேயே இருந்தது. (ம)

## கருணாநிதி மறைவுக்கு...

'திமுக தலைவர் கருணாநிதியை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், தொண்டர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். மிகப்பெரிய தலைவரை, இந்தியாவில் குறிப்பாக தமிழகம் இழந்து தவிக்கிறது. அவரது ஆன்மா சாந்தியடையப் பிராத்திக்கிறேன்" என்று இந்தியத் தலைமை அமைச்சர் மோடி தெரிவித்தார்.

"கருணாநிதியின் மறைவு அறிந்து வேதனை அடைந்தேன். கலைஞர் என்று அன்போடு அழைக்கப்பட்டவர் நம் வாழ்வில் வல்லமை மிக்க மரபினை விட்டுச் சென்றிருக்கிறார். எனது ஆழ்ந்த இரங்கலை அவரது குடும்பத்தாருக்கும், கோடிக்கணக்கான மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டார்.

'தமிழக மக்களால் அதிகம் விரும்பப்பட்டவரும், தமிழக அரசியலில் 60 ஆண்டுகளுக்கும் அதிகமாக மிக நீண்ட பயணத்தையும், அழியா அடையாளத்தையும் கொண்ட பேருருவம் கருணாநிதி. அவரின் மறைவால், இந்திய அரசு தனது சிறந்த மகனை இழந்துவிட்டது. அனைவராலும் விரும்பப்படும் மிகச்சிறந்த தலைவரை இழந்துவாடும் அவரின் குடும்பத்தாருக்கும், லட்சக்கணக்கான இந்தியர்களுக்கும் என ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறேன்' என்று காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி குறிப்பிட்டார்.

'கருணாநிதி அளப்பெரும் ஆற்றல். அவர் அறிஞராகவும் போராளியாகவும் இருந்தவர்' என்று கவிப்பேரரசு வைரமுத்து குறிப்பிட்டார். இவர்களைவிட அரசியல் பிரபலங்கள், கலைஞர்கள், திரையுலகத்தினர் என்று நூற்றுக் கணக்கானவர்கள் தத்தமது இரங்கல் குறிப்பில் குறிப்பிட்டனர். (ம)



## சென்றலைட்ஸ் 'பி' கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஓக. 8
யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் 'பி' பிரிவில் சென்றலைட்ஸ் பி அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் அமைந்துள்ள கூடைப்பந்தாட்டத் திடலில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. சென்றலைட்ஸ் பி அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் அணி மோதியது. 62:59 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சென்றலைட்ஸ் பி அணி கிண்ணம் வென்றது.
(ம-23)

## வல்வை எப்.சி. அணி இலகுவாக வென்றது!

யாழ்ப்பாணம், ஓக. 8
வடக்கு - கிழக்கு பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை எப்.சி. விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
கிளிநொச்சி உதய தாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை எப்.சி. அணியை எதிர்த்து மாந்தோட்டம் எப்.சி. அணி மோதியது. ஆட்டநேர முடிவில் 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது வல்வை எப்.சி. அணி. வல்வை எப்.சி. அணியின் சார்பாக பீமா 2 கோல்களையும், கலிஸ்ரர் 2 கோல்களையும், ஞானரூபன் ஒரு கோலையும் பதிவுசெய்தனர். ஆட்டநாயகனாக வல்வை எப்.சி. அணியின் கலிஸ்ரர் தெரிவு செய்யப்பட்டார்.
(ம-23)

## தமிழ் யுனைற்ரெட் அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 8
வடக்கு - கிழக்கு பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் தமிழ் யுனைற்ரெட் அணி வெற்றிபெற்றது.
கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மட்டுநகர் சுப்பர் கிங்ஸ் அணியை எதிர்த்து தமிழ் யுனைற்ரெட் அணி மோதியது. 4:0 என்ற கோல் கணக்கில் தமிழ் யுனைற்ரெட் அணி வெற்றிபெற்றது.
(ம-23)

# றேஞ்சர்ஸ் அணி மகுடம் சூடியது!



யாழ்ப்பாணம், ஓக. 8
பொலிகை பாரதி விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட 17 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி கிண்ணம் வென்றது.
பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டம் நடைபெற்றது. சுஜாஸ் தலைமையிலான றேஞ்சஸ் அணியினை எதிர்த்து திசாந் தலைமையிலான நவிண்டில் கலைமதி அணி மோதியது.
ஆரம்பம் முதல் விறுவிறுப்பாக இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தினர். கோல்கள் இல்லாமல் முடிவடைந்தது முதலாவது பாதி.
இரண்டாம் பாதி ஆரம்பித்த 10ஆவது நிமிடத்தில் றேஞ்சர்ஸின் சார்பில் லக்சிகன் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். அடுத்த சில நிமிடங்களில் அதாவது ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்தில் மற்றொரு கோலையும் பதிவு செய்து 2:0 என்ற கோல் கணக்கில் சம்பியனானது றேஞ்சர்ஸ். ஆட்ட நாயகனாக லக்சிகன் தெரிவு செய்யப்பட்டார். (ம-108-422)



கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தில் புதிதாக இணைந்து கொண்ட உருத்திரபுரம் மகா வித்தியாலயம், வட்டக்கச்சி மத்திய கல்லூரி, இரமநாதபுரம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு பிரிட்டன் தமிழ் கிரிக்கெட் லீக்கால் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் தலைவர் விக்கினராஜா தலைமையில் அண்மையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.
(ம-23)

## இன்றைய மோதல்கள்

**வடக்கு - கிழக்கு கால்பந்துத் தொடர்**
வடக்கு - கிழக்கு பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வவுனியா வாரியர்ஸ் அணியை எதிர்த்து அம்பாறை அவேஞ்சர்ஸ் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நோதன் எலைட் அணியை எதிர்த்து ரிங்கோ ரைட்ரென்ஸ் அணி மோதவுள்ளது.

**கைதடி தெற்கு ச.ச.நிலையத்தின் கரப்பந்தாட்டம்**
கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 63ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் அமரர் சின்னத்துரை பரமேஸ்வரி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான கரப்பந்தாட்டத் தொடரில் 'பி' பிரிவினருக்கான அரையிறுதியாட்டங்கள் கைதடி தெற்கு சனசமூக நிலைய மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. இதன்படி மாலை 6 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் சிவகுமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றல் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
(ம-23)

## வளர்மதி வென்றது

யாழ்ப்பாணம், ஓக. 8
கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 63ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் அமரர் சின்னத்துரை பரமேஸ்வரி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 'பி' பிரிவினருக்கான ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
கைதடி தெற்கு சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதியது. முதலாவது செற்றை 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது மோகனதாஸ் அணி. வளர்மதி அணி இரண்டாவது மற்றும் மூன்றாவது செற்களை முறையே 25:22, 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.
(ம-23)

# சிறப்புத் தேவையுடையோர் தேசிய கால்பந்து அணி வல்வையைச் சேர்ந்த இரண்டு வீரர்களுக்கு இடம்





யாழ்ப்பாணம், ஓக. 8
இலங்கை சிறப்புத் தேவையுடையோர் கால்பந்தாட்ட அணிக்கு வல்வையைச் சேர்ந்த இரு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வீரர்களான கர்ணன் மற்றும் மயூரன் ஆகியோரே அவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கடந்த வருடம் மற்றும் அண்மையில் இடம்பெற்ற ஆட்டங்களில் சிறப்பாக செயற்பட்ட இவர்கள் இலங்கை தேசிய அணிக்கான தெரிவு குழுவின் கவனத்தை ஈர்த்திருந்தனர்.
(ம-108)


# இலங்கை அணி வெற்றிபெறுமா?


தென்னாபிரிக்கா - இலங்கை அணிகளுக்கு இடையிலான நான்காவது ஒரு நாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. தென்னாபிரிக்க அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது.

மூன்று ஆட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில் மூன்றிலும் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றுவதை உறுதி செய்துள்ளது. ஆக, எஞ்சியுள்ள இரண்டு ஆட்டங்களில் வெற்றிபெற்றாலும் கிண்ணத்தைக் கைப்பற்ற முடியாது என்கிற நிலையே இலங்கைக்கு உள்ளது. இத்தகையதொரு பின்னணியில் சொந்த மண்ணில் கௌரவ நிலையிலாவது தொடரை இழக்க வேண்டுமாயின் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நிலையில் இன்று களமிறங்குகிறது இலங்கை அணி.

கண்டியில் இந்த ஆட்டம் நடைபெறுகிறது. கடந்த ஆட்டமும் கண்டியில் நடைபெற்றது. இரண்டு அணிகளின் சார்பிலும் பவுண்டரிகள் தாராளமாகக் குவிக்கப்பட்டன. இதனால் துடுப்பாட்டத்துக்குச் சாதகமான வகையில்தான் இன்றும் ஆடுகளம் அமையும் என்பது பொதுவான எதிர்பார்ப்பு. பகலிரவு ஆட்டமாக இன்றைய ஆட்டம் நடைபெறவுள்ளது.

(ம)





# மீண்டும் முதலிடத்தை பிடிப்பார் ஸ்ரீவ் சிமித்

## ஸ்ராக் நம்பிக்கை

ஆஸ்திரேலிய அணியின் நட்சத்திர வீரரான சிமித், பன்னாட்டு டெஸ்ட் தரப்படுத்தலில் மீண்டும் முதலிடம் பிடிப்பார் என்று நம்பிக்கை தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ராக்.

சுமார் மூன்று வருட காலமாக பன்னாட்டு கிரிக்கெட் சபையின் டெஸ்ட் ஆட்டங்களுக்கான துடுப்பாட்டத் தரப்படுத்தலில் முதலிடத்தில் தொடர்ந்து வந்தார். ஆனால் இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஆட்டத்தில் அதீத பெறுபேற்றை வெளிப்படுத்திய கோக்லி சிமித்தின் முதலிட அந்தஸ்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார். இதன்படி தற்போதைய தரப்படுத்தலில் கோக்லியே முதலிடத்தில் உள்ளார். இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார் ஸ்ராக்.

"கடந்த சில வருடங்களாக சிமித் எப்படி விளையாடினார் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர் கடுமையாக விளையாடக் கூடியவர். மற்ற எந்த வீரரையும் விட அதிக பந்துகளைச் சந்திக்கக் கூடியவர். அவர் கிரிக்கெட்டை மிகவும் நேசிக்கக் கூடியவர். சிமித் மற்றும் வோர்ணர் ஆகியோர் மீண்டும் பன்னாட்டுக் கிரிக்கெட்டுக்குத் திரும்பி, அவர்களுடைய சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி, சதங்களைக் குவித்து சவாலானவர்களாக இருப்பார்கள். சிமித் மீண்டும் முதலிடத்தைப் பிடிப்பார்" என்று ஸ்ராக் மேலும் தெரிவித்தார்.

(ம)



அச்செழு வளர்மதி - புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற நட்புரீதியிலான கால்பந்தாட்டத்தில் 1: 0 என்ற கோல் கணக்கில் வீனஸ் அணி வெற்றிபெற்றது. (ம-114)

# கலைமதி அபாரம்

யாழ்ப்பாணம், ஓக. 8

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 63ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கலைமதி அணி வெற்றிபெற்றது.

கைதடி தெற்கு சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பி பிரிவு அணிகளுக்கு இடையிலான இந்த ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றல் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. முதலாவது செற்றை 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது சென்றல் ஸ்ரார். அடுத்த இரண்டு செற்களையும் முறையே 25:13, 32:30 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது கலைமதி அணி.

(ம-23)

# கலைமதி நேர்செற் வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 8

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 63ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் கலைமதி அணி வெற்றிபெற்றது.

நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 25:21, 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய கலைமதி அணி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்றது.

(ம-23)



# விலகல்

தென்னாபிரிக்க அணியின் தலைவர் டு பிளாசிஸ் இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரின் எஞ்சிய ஆட்டங்களில் இருந்து விலகினார்.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதல் மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றுவதை உறுதிசெய்துள்ளது தென்னாபிரிக்க அணி. இந்த நிலையில் கையில் ஏற்பட்ட காயம் காரணமாக ஏனைய இரண்டு ஆட்டங்களில் இருந்தும் விலகினார் பிளாசிஸ்.

(ம)

# ஜேர்மனி வீரர் மரியோ ஓய்வு

ஜேர்மனியின் மூத்த கால்பந்தாட்ட வீரரான மரியோ கோமேஸ் பன்னாட்டு கால்பந்தாட்ட அரங்கில் இருந்து ஓய்வை அறிவித்தார்.

ரஷ்யாவில் அண்மையில் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில் ஜேர்மனி அணிமீது மிகப்பெரியதொரு எதிர்பார்ப்பு நிலவியது. இந்தத் தொடரில் நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் களமிறங்கியமை, மரியோ, ஓசில் உள்ளிட்ட ஜாம்பவான்களை தன்னகம் வைத்திருந்தமை என்பன ஜேர்மனி மீது மிகப்பெரியதொரு எதிர்பார்ப்பு நிலவக் காரணம் என்று சொல்லலாம். எனினும் லீக் சுற்றுடன் வெளியேறி பேரதிர்ச்சி கொடுத்தது ஜேர்மனி. இதையடுத்து மூத்த வீரர்களின் மீது கடும் சொற்தாக்குதல் நடத்தப்பட்டது. மரியோ கோமேஸ் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளானார். இந்த நிலையில் அவர் பன்னாட்டு அரங்கில் இருந்து விடைபெறுவதாக நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

2007ஆம் ஆண்டில் இருந்து ஜேர்மனி அணிக்காக விளையாடி வந்த கோமஸ் 78 ஆட்டங்களில் விளையாடி 31 கோல்களைப் பதிவுசெய்துள்ளார். தனது ஓய்வு குறித்து பதிவிட்டுள்ள கோமஸ், 'தற்போது நான் ஓய்வு முடிவை அறிவிக்கும் நேரமாகும். இது திறமையுள்ள ஏராளமான இளைஞர்களுக்கு, அவர்களுடைய கனவை நனவாக்க வாய்ப்பாக அமையும்" என்றார்.

நட்சத்திர வீரர் ஓசில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஓய்வை அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

(ம)





காரைநகர் – மணற்காடு

# அருள்மிகு தேவி கும்பநாயகி முத்துமாரி அம்மை

## ஆடித் திருக்குளிர்த்தி - 2018

அம்பிகை அடியார்களே!

சைவமும் தமிழும் இந்து தர்மமும் தழைத்தோங்கும் புண்ணிய பூமியாகத் திகழும் காரை நகர் என்னும் கிராமத்தின் மத்தியில் யாழ்.குடாநாட்டின் கண்ணே உள்ள நவசக்தி பீடங்களில் ஒன்று என்ற சிறப்பைப் பெற்ற மணற்காடு என்னும் புராதன திருத்தலத்தில் கோயில் கொண்டு கும்ப நாயகி என்னும் சிறப்புத் திருநாமத்துடன் வீற்றிருந்து தன்னை நாடிவரும் அடியவர்களின் இன்னல்களை நீக்கி அவர்கள் வேண்டியதை வாரிவழங்கும் அம்பிகையின் ஆடித் திருக்குளிர்த்தி அஷ்டோத்தர சகஸ்ரமஹா சங்காபிஷேகம் (1008) உற்சவநாயகி (எழுந்தருளி அம்பாள்) அம்பிகையின் மஹா சங்காபிஷேகம் (1008) பரிவார மூர்த்திகள் ருத்ராபிஷேகம் வீரமாகாளி அம்பாள் பஞ்சவிம்சதி கலச அபிஷேகம் (25 கலசங்கள்) மங்களகரமான விளம்பி வருஷம் ஆடித்திங்கள் 25 ஆம் நாள் (10.08.2018) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் தேவியின் பூரண திருவருள் துணைகொண்டு வெகு சிறப்பாக நிகழும். எனவே அடியார்கள் சங்காபிஷேக தினத்தன்றும் பூர்வாங்கக் கிரியைகள் நிகழும் 09.08.2018 வியாழக்கிழமை காலையும் மாலையும் ஆசாரசீலராய் ஆலயத்துக்கு வருகை தந்து வேண்டிய சரியைத் தொண்டுகள் புரிந்து அம்பிகையைத் தரிசித்து அம்பிகையின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் பணிவன்புடன் வேண்டப்படுகின்றனர்.

### குருமார் விவரம்

பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தான பிரதம குரு
சிவஸ்ரீ ச.சோமஸ்கந்தர் குருக்கள் அவர்களின் பூரண ஆசியுடன்

- சிவஸ்ரீ குமார சரவணபவக் குருக்கள் (இணுவில்)
- சிவஸ்ரீ. வத்ஸ வரத இராஜேஸ்வரக் குருக்கள் (சுழிபுரம்)
- சிவஸ்ரீ. ந.தாமோதரக் குருக்கள் (நீராவியடி)
- சிவஸ்ரீ. கணேச. சபாபதிக் குருக்கள் (சுன்னாகம்)

### [illegible]வசாதகம்

- பிரம்மஸ்ரீ சி.சிவபால சர்மா (இணுவில்)
- பிரம்மஸ்ரீ மு.பிரணவ சர்மா (அரியாலை)

சிவஸ்ரீ நா.ஞானசம்பந்தக் குருக்கள்
கர்மகர்த்தா
முத்துமாரி அம்பாள் கோயில்,
மணற்காடு, காரைநகர்.

அம்பிகையின் அருட்பணியிலும்,
திருத்தொண்டிலும்
வை.கா.சுவாசனும்
அம்பிகை அடியவர்களும்.



## முகாமையாளர் தேவை

No.235/7. பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தியில் அமைந்துள்ள
"சௌபாக்கியா விலா" இற்கு
இரவு நேர முகாமையாளர் தேவை.
வயது 45 இற்கு மேல்.
விடுதி அனுபவம் உள்ளவர்கள்
விரும்பத்தக்கது.

077 019 9118



EASY WAY English

ரூபா.800 விலைக்கழிவு

முழுமையாக தமிழ்மூலம் ஆங்கிலம் கற்றுக்கொள்ள ஒரேயொரு புத்தகப்பொதி

அடிப்படையிலிருந்து ஆங்கிலத்தை முழுமையாக தமிழ்மூலம் கற்க திரு. தொம்சன் ஆசிரியரால் உருவாக்கப்பட்ட 16 புத்தகங்கள் கொண்ட பாடப்புத்தகப்பொதி!

[illegible]

ஆங்கில ஆசிரியரின் உதவியேதுமின்றி பாடசாலை மாணவர்கள் முதல் தொழில் புரிவோர்வரை வெறுமே சுயமாக ஆங்கிலம் கற்கும் வகையில் உருவாக்கப்பட்ட ஒரேயொரு Study pack.

இன்றும் நாளையும் மட்டுமே விலைக்கழிவுடன் பெறமுடியும்.

SAAMSON

403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி யாழ்நகர்

021 320 3313
077 1570 486



# சாரதி தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல
தனியார் நிறுவனத்திற்கு சாரதி தேவை.
நேர்முகத் தேர்வு : (13.08.2018)
திங்கட்கிழமை காலை 9.00 - பி.ப. 1.00 மணி
வரை நேரில் சமுகம் தரவும்.

ES PRINTERS
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# இரண்டாவது டெஸ்ட் லோட்ஸில் நாளை



இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

இந்திய அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முதலாவது ஆட்டம் பெர்மிங்ஹாமில் நடைபெற்றது. இதில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது. இந்த நிலையில் இரண்டாவது ஆட்டம் லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நாளை ஆரம்பமாகிறது.

தொடரில் தனது ஆதிக்கத்தைத் தக்கவைக்க இந்த ஆட்டத்தில் வெற்றி பெற இந்தியா முனைப் புக்காட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)


விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி-700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

0768226240
V2 TRAVELS



# வடமாகாண G.C.E.(O/L) க.பொ.த.(சா/த) மாணவர்களுக்காக கொழும்பு அருள் கல்வி வட்டத்தினரால் நடத்தப்படும் முற்றிலுமான இலவசக் கருத்தரங்கு

## நேரசூசிகை

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 09.08.2018 – வியாழன் | ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் | காலை 8.30 - பி.ப. 3.00 |
| 10.08.2018 – வெள்ளி | வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி | காலை 8.30 - பி.ப. 3.00 |
| 11.08.2018 – சனி | யாழ்.வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் (பெண்களுக்கு மட்டும்) | காலை 6.30 - பி.ப. 3.30 |
| 12.08.2018 – ஞாயிறு | யாழ்.வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் (ஆண்களுக்கு மட்டும்) | காலை 6.30 - பி.ப. 3.30 |
| 13.08.2018 – திங்கள் | யாழ்.வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் (இருபாலாரும்) | காலை 6.30 - பி.ப. 3.00 |
| 14.08.2018 – செவ்வாய் | கிளிநொச்சி கூட்டுறவு மண்டபம் (மத்திய பஸ் நிலையம் அருகில்) | காலை 8.00 - பி.ப. 3.00 |
| 15.08.2018 – புதன் | கற்சிலைமடு அரசினர் கலவன் பாடசாலை (அ.த.க) | காலை 8.00 - பி.ப. 3.00 |
| 16.08.2018 – வியாழன் | மன்னார் நகர சபை மண்டபம் | காலை 8.00 - பி.ப. 3.00 |
| 17.08.2018 – வெள்ளி | வவுனியா நகரசபை மண்டபம் | காலை 8.00 - பி.ப. 3.00 |

| பாடம் | ஆசிரியர்கள் |
|---|---|
| கணிதம் | 1. வே.தேவசேனாதிபதி L.L.B. சட்டத்தரணி<br>2. K. வசந்தன் ( Trained Teacher Colombo)<br>3. S.மணிமாறன் ( Trained Teacher Colombo)<br>4. M.லிங்கேஸ்வரன் BSc, PGDE Teacher St.John's College Jaffna) |
| விஞ்ஞானம் | 1. வே. சுந்தரேஸ்வரன் - Rtd.D.G.M, தேசிய லொத்தர் சபை<br>2. V. பிரேம்குமார் - P.H.I யாழ்ப்பாணம்.<br>3. M. மகேந்திரன் - சிரேஷ்ட ஆசிரியர் |
| தமிழ், வரலாறு | 1. S. நடராஜா B.A.(Hons)<br>2.K. திவாகர் B.A (Hons) |

- நூல்கள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்
- அனைத்துப் பாடமும் அடங்கிய Tutes முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்
- கடந்த கால வினாவிடைக் கொத்து இலவசமாக வழங்கப்படும்.

குறிப்பு:- அனைத்து மாணவர்களும் (இருபாலாரும்) கண்டிப்பாக பாடசாலை சீருடையில் வருகை தர வேண்டும்

அனைவரும் கலந்துகொண்டு பயன் பெறவும்

இலவசக் கருத்தரங்கின் முழு அனுசரணையாளர்
சட்டத்தரணி வே.தேவசேனாதிபதி LLB தொ.இல. 077 113 3400, 011 232 7524

பே.இளமுருகன் BSc - 077 907 3593 ஆ.முருகானந்தன் - 071 856 1252
கே.சக்திதரன் AD - 077 842 9649 எஸ்.ஐங்கரன் - 077 715 7779


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.